கல்கி

KALKI 35 காசு
30.5.1965





ஆங்கிலம் எவ்வளவு காலம் இருந்து வரும்
என்பதை ஹிந்தி பேசாத மக்கள் தான்
தீர்மானிக்க வேண்டும் என்று
வாக்களித்த மகான்.

வேய்ங் குழலிசையோ விண்ணமுதமோ

அரவிந்த்

அழகு வர்ண பாணிகளிலே சோபிக்கும் தரமான துணிவகைகள்.

வகையருக்களில் சில:

லான்பொரைஸ்டு பாப்லின்கள்:

ஷர்ட்டிங்குகள்: ஸ்ட்ரைப், டாபி,

செக், பைஜாமா.



வேட்டிகள்:
மெர்ஸரைஸ்டு லான்: 5531
சூட்டிங்குகள்: கேபர்டின்.
பிரிண்டுகள்: பிரிண்டெட் லான்கள்,
வாயில்கள், பாப்லின்கள்.
நெசவு செய்த கலர் புட்டாக்கள்
விரேலுக்களிலும் புட்டாக்களிலும்
2x2 ஃபேன்ஸி ஃபுல் வாயில்கள்

SANFORIZED

டெபிலேஸ்டு* மற்றும் டெபிலேஸ்டு
இரட்டிப்புப் பரிசோதனை பெற்றது.

Arvind Quality Fabrics

* Registered User


அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்.


கல்கி
பொருளடக்கம்

விசுவாவசு, வைகாசி 17 — மே 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




காச்மீரம் இந்தாருங்கள்!
மெத்த வந்தனம்
கோஸிஜின்
PK


சுகர்ணர்
கம்யூனிஸம்
இறங்க முடியாத இக்கட்டு



மலர் 24 ○ இதழ் 44

நேரு மறைந்த தினம்

'பௌதிகப் பொருள்களும் பௌதிக சக்திகளுமே உண்மை; மற்றவையெல்லாம் கற்பனை' என்பது லோகாயதம். [சிலர் லோகாயதம்தான் தங்கள் மதம் என்று சொல்லிக் கொள்வார்கள். கடவுளைப் பற்றிப் பேச மாட்டார்கள். பேசினுலும், 'உளன்' 'இலன்' என்று சொல்லாமல், அதைப் பற்றித் தங்களுக்கு அக்கறையில்லை என்பார்கள். இவை யொருபக்கமிருக்க, மானுட உள்ளம் உண்மையில் இந்தத் துறையில் திருப்தி அடைவதில்லை. ஒருவர் காலமானபோதிலும் வருஷம் முடிந்ததும் ஆன்மா எங்கேயோ இருப்பதாகவே வைத்துக் கொண்டு சடங்குகள் நடத்துவார்கள். பழைய சடங்குகளை விட்டு விட்டாலும், புதுச் சடங்குகள் நிர்மாணித்துக் கொண்டு பிரார்த்தனையும் பக்தியும் செலுத்துவார்கள். ஏதேனும் ஒரு சடங்கு வைத்துக் கொண்டு நடத்தினுல்தான் மனிதர்கள் திருப்தி அடைகிருர்கள். மறைந்து போன நேரு அவர்களின் ஞாபகார்த்தமாக தேசம் முழுதும் இந்த வாரத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் நடக்கும். எந்த முறையிலாவது மறைந்து போன மகான்களை நினைத்து உள்ளங்களை நல்வழியில் செலுத்துவது நலம். நம்முடைய பூர்வீகர்கள் பிரத்தியட்ச ஈசுவரனுக சூரிய ஜோதியை வணங்கி வந்தார்கள். அந்த ஜோதியிடம் நம்முடைய உடல்களுக்கும் உள்ளங்களுக்கும் வேண்டிய உணவும் சக்தியும் தருமாறு இறைஞ்சி வணங்கினுர்கள். அதுவே விசுவாமித்ர முனிவர் கண்டு உலகத்துக்குத் தந்த காயத்ரீ மந்திரம். நம்முடைய உலகம் முழுதும் சூரியனிடமிருந்து வந்த சக்தியின் ஸ்தூல உருவம். ஆதித்தனுக்கும் நமக்கும் உள்ள தொடர்புகளை நாம் இன்னும் முற்றும் ஆராய்ந்து அறியவில்லை. நம்முடைய உள்ளங்களையும் சூரிய பகவான் நடத்துவதாக காயத்ரீ சொல்லுகிறது. நம்முடைய நாடும் நம் மக்களும் க்ஷேமமாக இருக்க சூரிய பகவான் அருள்வானுக!

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா

பாரதியார்

ஓராண்டு மறைந்தது!

வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கும் மூர்த்திகளாகச் சில வியக்திகள் இம்மண்ணுலகில் வாழ்ந்து மறைவதுண்டு. இவர்கள் தங்களது சொல்லுக்கும் செயலுக்கும் மேலாக உள்ளப் பண்பினால் உயர்ந்து உலக வரலாற்றில் நிரந்தரமாக நிற்பார்கள்.

இவ்வாறு உள்ளப் பண்பினால் உயர்ந்த உத்தமர் நேரு அவர்கள் நம்மைப் பிரிந்து சென்று பன்னிரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. அன்பு, பண்பு, சேவை, தியாகம் ஆகிய வாழ்க்கைத் தத்துவங்களுக்கு மூர்த்தியாக வாழ்ந்து, தமது மனப் போக்கின்படி தேசத்துக்கும் உலகத்துக்கும் அயராது உழைத்து மறைந்த நேருஜிக்கு இன்று நானிலம் சிராத்த அஞ்சலி செலுத்துகிறது.

இந்தியாவிடம் நேருஜிக்கு இருந்த அன்பும், உலக சமாதானத்தில் அவருக்கு இருந்த நாட்டமும் ஈடு இணையற்றவை. அற்பத்தனங்களையும், சூழ்ச்சிகளையும், பலவீனங்களையும் கண்டால் கனன்று எழும் சத்தியப் பாங்கு படைத்தவர் அவர். அவரது அந்தரங்க சுத்தமான இதயப் பண்பு காரணமாகவே உலக மக்கள் யாவரும் அவரிடம் ஈர்க்கப்பட்டனர். அவர் வகுத்த கொள்கைகளுக்கும், அமுல் செய்த திட்டங்களுக்கும் மேலாக அவருடைய அகப் பண்பே தனித்து நின்று அகில உலகின் அன்பையும் அவருக்குப் பெற்றுத் தந்தது.

'தவறான அரசியல் கொள்கைகள் எனக் கருதியவற்றை எதிர்த்துப் பத்தாண்டுகளாக ஸ்ரீ நேரு அவர்களுடன் போராடி வந்தேன். நேரு ஒருவரால்தான் அவற்றைத் திருத்த முடியும் என்று முழுவதும் நம்பிப் போராடினேன். வேறு யாரும் இத்தவறுகளைத் திருத்த முடியாது. நேருஜி போய் விட்டார். போராட்டத்தில் என்னை முன்னிலும் பலவீனமாக்கிவிட்டு மறைந்துவிட்டார்' என்று சென்ற ஆண்டு நேருஜி மறைந்தபோது ராஜாஜி எழுதினார். அவர் எழுதியது நூற்றுக்கு நூறு உண்மையாகி வருவதைக் கடந்த பன்னிரண்டு மாதங்களாகக் காண்கிறோம். பழைய தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல் தொடர்ந்ததுடன், புதிய பெருந் தவறுகளும் இழைக்கப்பட்டு வருகின்றன. ஆட்சிமொழித் திட்டம் ஒன்றே போதும். சமநீதி உணர்வுடன் தென்னகத்தின் உரிமையைக் காத்து நிற்கக்கூடிய நேருஜி இல்லையே என்ற தாபம் இன்று மேலோங்கி நிற்கிறது.

பெண் குலத்தின் வெற்றி

மெய் வருந்தித் தொழில் புரியும் ஏழைப் பெண் லக்ஷ்மி அஷ்ட ஐசுவரியத்துக்கும் மேம்பட்ட அன்பென்னும் திருவைப் பெற்ற ஒரு லக்ஷ்மியாகவே திகழ்கிறார். சென்னை மவுண்ட் ரோடில் விபத்துக்குள்ளான இருவருக்கு உயிரளிப்பதற்காக அவர் புரிந்த தொண்டு இலக்கியத்தில் பெருமைப்படுத்த வேண்டிய பணி. முன்பின் அறிமுகம் இல்லாத இருவரிடம் இப் பெண்ணுக்குப் பரிவு ஏற்பட்டு அவர்களை ஆஸ்பத்திரிக்கு டாக்ஸியில் எடுத்துச் சென்றது. அவசியமானால் டாக்ஸி வாடகைக்காகத் தமது ஓரிரு நகைகளையும் விற்க முன் வந்தது. ஆஸ்பத்திரியில் விபத்துக்குள்ளானவருக்காகப் பிரார்த்தித்தது. இருவரில் மரணமுற்ற ஒருவரின் சடலத்துடன் சவக்கிடங்குக்குச் சென்றது — இவற்றையெல்லாம் படிக்கப் படிக்கக் கருணை என்ற ஒரு காவியத்தைப் படிப்பதாகவே தோன்றுகிறது.



மதுரை லக்ஷ்மி

உயிராபத்தான நிலையில் இருந்தவர்களைத் தாம் ஓட்டிய டாக்ஸியில் எடுத்துச் சென்று, ஆஸ்பத்திரியில் சேர்த்த பின் வாடகைப் பணமும் வாங்கிக் கொள்ளாமல் சென்ற டிரைவர் திரு ஆர். எஸ். மணியின் பெருந்தன்மையையும் பாராட்டுகிறோம்.

லக்ஷ்மிக்குப் பலர் பரிசுகள் அளித்து வருகிறார்கள். இவற்றுக்கெல்லாம் மேலான பரிசு, அவர் ஆஸ்பத்திரியில் அநுமதித்த இருவரில் ஒருவர் தேறி வருவதுதான். 'உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்; உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா' என்று மகாகவி பாரதியார் பாடினரே, அந்தப் பெண்குலத்தின் வெற்றியாகவே எளிய லக்ஷ்மியைக் கருதலாம்.

இயந்திரமயமான வாழ்க்கை அமைப்பும், ரூபாய் பைசா இவையே பெரியவை என்ற கருத்தும் வலுப்பெற்று வரும் இந்த நாட்களில் சேவைக்கும், தியாகத்துக்கும் அதிக இடமில்லாமல் போய்விட்டது. இச்சமயத்தில் பாலைவனத்தில் ஒரு சுனைபோல லக்ஷ்மியின் அரும் பணியைக் காண ஆறுதலாக இருக்கிறது. இந்தப் புவியில் இன்னும் சில லட்சுமிகள் இருப்பதால்தான் இந்த அளவிலாவது க்ஷேமமாக இருக்கிறோம்.

என்ன சேதி?

மனிதத்தன்மையின் தோல்வி

மவுண்ட்ரோடில் விபத்துக்கானான இருவரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குள் லக்ஷ்மி படாத பாடு படவேண்டியதாயிற்று என்று அறிகிறோம். இந்த இடைக்காலம் முழுவதும் சென்னை போலீஸார் என்ன செய்துகொண்டிருந்தனர் என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் இது போலீஸின் கடமை மட்டுமல்லவே! எவ்விதச் செல்வாக்கும் இல்லாத இளம் பெண் லக்ஷ்மிக்கு இருந்த கடமையுணர்ச்சி சமூகத்தில் அவரை விடச் செல்வாக்கும் வசதியும் பெற்ற ஆண்மக்களுக்கு நிச்சயமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் விபத்தடைந்த இருவரையும் காக்க வேண்டுமென்று இந்தப் பெண் முயற்சி எடுக்கு முன் ஏராளமானவர்கள் அவ்விடத்தில் கூடியிருந்து வேடிக்கை பார்த்துவிட்டு, 'நமக்கேன் வம்பு?' என்று அகன்றிருக்கிறார்கள். நம் மக்களின் மனிதத் தன்மை இந்நிலைக்கு வந்துவிடும் என்று நாம் எண்ணியதில்லை. லக்ஷ்மியோ இந்த உதாசீன மனப்பான்மை சென்னை வாசிகளுக்கு மட்டுமே உரியது என்கிறார். 'உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?' என்று ஒரு நிருபர் லக்ஷ்மியைக் கேட்டதற்கு, 'நான் மதுரைக்காரி; மெட்ராஸ்காரி அல்ல' என்று கூறியிருக்கிறார். சென்னைவாசிகள் சிந்திக்க வேண்டும்.

மேலும் குடைசாய்கிறார்!

சென்ற இதழில்தான் இந்திய சர்க்கார் ருஷியாவின் சார்பில் அதிகம் சாய்வதை எடுத்துக் காட்டியிருந்தோம். இந்த ஒரு வாரத்துக்குள் நம் பிரதமர் சோவியத்தின் பக்கமாக மேலும் நன்றாகக் குடைசாய்ந்திருக்கிறார்.

ருஷியாவுக்குச் சென்ற லால்பஹாதூர் அவர்கள் சோவியத் பிரதமருடன் சேர்ந்து வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கை, இந்திய சர்க்கார் எவ்வளவு முன்யோசனை இல்லாமல் காரியம் செய்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. வியட்நாம் போரில் கம்யூனிஸ்ட் சக்திகளிடமிருந்து சமாதானக் குறிப்புக்கள் ஏதும் இல்லாதிருக்க லால்பஹாதூர் அவர்கள் சோவியத் பிரதமருடன் சேர்ந்து 'அமெரிக்கா வியட்நாமில் தனது தாக்குதலை நிறுத்த வேண்டும்' என்று அறிக்கை விட்டிருப்பது மிகவும் உசிதமற்ற செயல். இதனால் அமெரிக்கருக்கு நம்பால் பெருத்த மனஸ்தாபம் ஏற்படும். அமெரிக்காிடம் நமக்குள்ள உறவைப் புதிதாகப் பலப்படுத்திக் கொள்ள முயலாவிடினும், பழைய உறவையும் நலியச் செய்வது நாட்டுக்கு நன்மை பயக்காது.

ருஷியாவின் மனம் குளிருமாறு லால்பஹாதூர் பேசியதற்குப் பிரதியாக ருஷியப் பிரதமர் நமது எல்லைப் போர்களில் இந்தியாவுக்கு ஆதரவாக அறிக்கையில் ஏதேனும் கூறியுள்ளாரா என்று பார்த்தால் பெரும் ஏமாற்றமே அடைவோம். நமக்குப் பேருதவி புரியும் அமெரிக்காவை இந்திய சர்க்கார் விட்டுக் கொடுத்தாலும், ருஷிய சர்க்கார் தன்னோடு போட்டியிடும் சீனாவை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. சீனாவின் ஆக்கிரமிப்பைப் பற்றிக் கூட்டறிக்கையில் பிரஸ்தாபமே கிடையாது.

அதைவிட விந்தை பாகிஸ்தான், கட்சில் துராக்கிருதம் செய்திருப்பது பற்றிக்கூட அறிக்கையில் எதுவுமே கூறப்படவில்லை. பாகிஸ்தானை இன்னமும் ருஷியா விட்டுவிடவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. கட்சில் பாகிஸ்தான் நிகழ்த்திய ஆக்கிரமிப்பு பற்றி அமெரிக்கா ஏதும் கூறவில்லை என்று வெகுண்டெழுந்த பிரமுகர்கள் இப்போது என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.

ஆக, ஸ்ரீ லால்பஹாதூரின் ருஷியப் பிரயாணத்தினால் விளைந்த ஒரு நன்மை, சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் இந்தியா செய்யும் எல்லைப் போரில் ருஷிய உதவியை எதிர்பார்ப்பதற்கில்லை என்பது வெளிப்படையாகியிருப்பதுதான். 'ஆபத்துக்காலத்தில் ருஷியாதான் உதவி செய்தது' என்று சிறிதும் மன உறுத்தல் இல்லாமல் முகஸ்துதி செய்த இந்தியப் பிரதமர், தமது ருஷியப் பயணத்துக்குப் பின்னரேனும் ருஷியாவை நம்பிப் பயனில்லை என்று உணருவாரா?

மயிலையில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் முகாமில் நடைபெற்ற ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாவின்போது மக்கள் காட்டிய சிரத்தையைப் பார்த்தபோது நம் நாட்டின் அடிவாரத்தில் இன்றளவும் பக்தி, நம்பிக்கை, ஆசாரம், இவை யாவும் இழையோடிக் கொண்டுதானிருக்கின்றன என்ற புத்துணர்ச்சி ஏற்பட்டது. ஸ்ரீ கபாலீச்வரர் கோயில் திருக்குளத்தில் ஸ்ரீ ஆதிசங்கர பிம்பத்துக்கு அபிஷேகமாவதையும், அதனை இன்றைய சங்கரரும் இளைய சங்கரரும் தன்மயமாகக் கண்ணுறுவதையும் இங்கு காண்கிறோம்.



ராஜாஜியின் கருத்துக்கள்



ஷேக் அப்துல்லா அவர்களின் மாப்பிள்ளையாகிய ஜி. எம். ஷா அவர்களின் அறிக்கையிலிருந்து சில பகுதிகளை இப்போது நேயர்களுக்கு முன் வைக்கிறேன் :

"ஷேக் அவர்களையும், பெக் அவர்களையும் உதகையில் காவல் வைப்பதற்கு அழைத்துச் செல்லுமுன், சிறிது நேரம் அவர்களைக் கண்டு பேச அநுமதிக்கப்பட்டேன்.

"ஜெட்டாவில் உள்ள இந்திய தூதர் மூலம் ஷேக் அவர்கள் பிரதமர் சாஸ்திரிக்கு ஒரு விவரமான கடிதம் எழுதியதாகத் தெரிந்து கொண்டேன். 'இவ்வாறு கடிதம் எதுவும் வரவில்லை' என்று பிரதமர் பார்லிமெண்டில் கூறினார் என்று நான் சொன்னவுடன் ஷேக் அவர்கள் ஆச்சரியம் தெரிவித்தார். ஷேக் அப்துல்லாவுக்கு நியாயம் செய்ய வேண்டுமானால் இக்கடிதத்தைக் கண்டு பிடித்துப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென வற்புறுத்துகிறேன்."

ஷேக் அப்துல்லா ஜெட்டாவிலிருந்து அனுப்பிய கடிதம் பிரதமரைச் சேரவில்லை என்பதோ, அல்லது அதை அலட்சியம் செய்திருப்பதோ அல்லது வேண்டுமென்றே மூடி வைத்திருப்பதோ மிகவும் விசித்திரமாக உள்ளது.

✻✻✻

'ஹிந்து'ப் பத்திரிகையில் ஷேக் அப்துல்லா அவர்களைச் சப்பாத்திக் கள்ளியாகக் காட்டி ஒரு கேலிச் சித்திரம் வெளியாகியிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் நேரு அவர்கள், ஷேக் அப்துல்லாவைச் சப்பாத்திக் கள்ளியாக எண்ணாமல் ரோஜாப் பூவாக நினைந்து, சட்டையில் சூட்டிக்கொண்ட நாட்கள் நினைவுக்கு வந்தன. ஷேக் அப்துல்லாவிடம் மிருந்த அன்பும் மதிப்பும் வைத்துத் தட்டிக் கொடுத்து, அவரைக் காச்மீரத்தின் 'ஷேர்' (சிம்மம்) என்று நேரு அவர்கள் புகழ்ந்ததுண்டு.


அந்தக் காலத்தில் அப்துல்லா என்னுடன் பேசியபொழுது காச்மீரப் பிரச்னையில் தாம் கடைப்பிடிக்கும் கொள்கையை விவரித்து விளக்கி வந்தார். ஒரே இனத்தவர் என்ற முறையில் காச்மீரத்தின் பெருவாரி மக்களுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள சமயத் தொடர்பின் காரணமாக ஏற்படும் அபாயத்தை அவர் மறைக்காது கூறி விருக்கிறார். தமக்கு எவ்வளவுதான் செல்வாக்கு இருப்பினும் அதைக் கொண்டு மக்களின் மன உணர்ச்சியை மாற்ற முடியாது என்றும், மத உணர்வைவிட வலுவான அரசியல் நோக்கங்களைக் கற்பித்தால்தான் காச்மீர மக்களை இந்தியாவுடன் இருத்திக்கொள்ள முடியும் என்றும் சொல்வார். 'பாகிஸ்தானுடன் சேருவதா, இந்தியாவுடன் சேருவதா' என்பது பற்றி மட்டும் காச்மீரத்தில் பொது ஜன வாக்கெடுப்பு நடத்தினால் போதாது; 'இரு நாடுகளுடனும் சேராமல், இரண்டுடனும் ஒரே போன்ற உறவுடன் காச்மீரம் தனி நாடாக இயங்கலாமா' என்பதும் மக்களின் தேர்வுக்கு விடப்படவேண்டும் என்று ஷேக் அவர்கள் அப்போதே கூறியிருக்கிறார். இந்த யோசனையை நேருவிடம் அவர் பிரஸ்தாபித்தார். நேரு அவர்கள் தமக்கே உரிய முறையில் இப்பிரச்னையை நாசூக்காகத் தவிர்த்து விட்டார். ஆனால் சர்தார் பட்டேல் அவர்களோ காச்மீரத்தைத் தனிச் சுதந்திர நாடாக்கும் யோசனையைக் கேட்டவுடனேயே எரிச்சல் அடைந்தார். எனவே தமது எண்ணத்தை ஷேக் அவர்கள் அப்போதைக்குப் பிரசாரம் செய்யாமலே இருந்தார். மத உணர்வு, இனப்பற்று இவை சமநிலையில் இருக்க வேண்டுமாயின் இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுடன் நல்லுறவு கொண்ட தனி நாடாகக் காச்மீரம் இருப்பதே நலம் என்பது ஷேக் அவர்களின் கருத்து.

என் நண்பர்கள் ஆத்திரவசமாகாமல், பிரச்னையை அமைதியுடன் ஆராயவேண்டுமென்பதாலேயே இதையெல்லாம் எழுதுகிறேன். பலமுறை சொன்னதை மீண்டும் சொல்கிறேன்: காச்மீரம் என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல; உணர்ச்சி கொண்ட ஒரு மக்கள் சமுதாயமே காச்மீரம். தற்போது இந்தியாவின் செல்வாக்கு 1948-லிருந்ததைவிட மிகவும் தாழ்ந்து விட்டதையும் நினைவூட்டுகிறேன்.

கடைசியாக ஒரு விஷயம்: ஷேக் அப்துல்லா இந்தியாவின் நண்பர், விரோதியல்ல என்பதற்கு நான் அளிக்கும் வாக்குறுதியை நண்பர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஷேக் அவர்களிடம் இயல்பாக அமைந்த இந்த அடிப்படை நட்புணர்ச்சியை அவர்மீது நாம் எடுத்த எதிர்நடவடிக்கைகளும் குலைக்கவில்லை.

✻✻✻

பிலிப்பைன் நாட்டிடமிருந்து நம் அரசாங்கம் பெற வேண்டிய பாடம் ஒன்று இருக்கிறது. அந்நாட்டில் பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டே வந்தது; அந்நியச் செலாவணியிலும் நெருக்கடி ஏற்பட்டது. இதைக் கண்டு பிலிப்பைன் அரசாங்கம் அந்நியச் செலாவணிக்கிருந்த எல்லாத் தடைகளையும் நீக்கி விட்டது. அதிலிருந்து அந்நியச் செலாவணி நெருக்கடி நீங்கியதோடு, பிலிப்பைன் நாணயத்தின் மதிப்பும் உறுதி பெற்றது. அத்தேசத்தின் பொருளாதாரம் இப்போது நன்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது. சர்வதேச அபிவிருத்திக் கழகத்தின் அங்கத்தினரும், பிலிப்பைன் நாட்டுப் பிரஜையுமான பாண்டர் பி. ஸிஸன் அவர்கள் இவ்விவரத்தை எனக்கு எடுத்துக் காட்டினார்.



உங்கள் முக சருமத்திற்கு மினுமினுப்பும் இளமை வசீகரமும் அளிக்க
எண்ணெய்ப்பசையற்ற உன்னத

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்


பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முக சருமத்தை பூப்போல மென்மையாகவும், மினுமினுப்பாகவும், மனோகரமாகவும் வைக்கிறது. முகத்திலுள்ள சிறு பருக்கள் போன்றவை நீங்க வழி செய்கின்றது. இதைத் தடவி பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராக மணிக்கணக்கில் படிந்திருக்கும். உங்கள் முக வனப்புக்கு மெருகூட்ட பாண்ட்ஸ் ஃபேஸ் பவுடர் உபயோகியுங்கள். அது சீராகப்படிகிறது. முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்க உதவுகிறது.





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்

[illegible]



அவள் அழகி... அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

காலச் சக்கரம்

அத்தியாயம் 5

முழுப் பொய்யும் பாதி உண்மையும்

சாலையோடு சுற்றி வளைத்துக் கொண்டு நிதானமாக நடந்து சென்ற தங்கப்பன் ஹோட்டலில் அவர்கள் தங்கியிருந்த பகுதியை அடைவதற்கு முன்னால் மழையில் தெப்பமாக நனைந்து விட்டான். தான் நடந்தது குறித்து அவன் அவ்வளவாகக் கவலைப்படவில்லைதான். ஆனால் செல்லமும் அவள் பெற்றோரும் ஏன் எதற்காக இப்படி ஈரம் சொட்டச்சொட்ட நிற்க வேண்டும்? இது நல்ல வேடிக்கையாகத் தோன்றியது அவனுக்கு. வாய் விட்டுச் சிரிக்கவும் செய்தான்.

சபாபதி அவன் செய்கையை அவ்வளவாக ரசிக்கவில்லை. ''ஏன் தம்பி, சிரிக்கிறே? அம்மாவும் பொண்ணும் நான் சொன்ன பேச்சைக் கேட்கிறதில்லேன்னு தீர்மானமா வைச்சுக்கிட்டிருக்காங்க. 'தங்கப்பன் தன் போக்கிலே வர போது தான் வந்து சேருவான். நீங்க ரெண்டு பேரும் மழையிலே போய் இன்னதிருலே தம்பி சீக்கிரமா திரும்பி விடப் போறதில்லே'ன்னு ஒரு தரத்துக்கு நாலுதரமா சொல்லிப் பார்த்தேன். என் வார்த்தையை மதிச்சால்தானே? உன்னை நெனைச்சுப் பார்க்கிறப்போ அவங்க இரண்டு பேருக்குமே மனசு கேட்கலே. வெளியே போய் நின்னுட்டாங்க'' என்றார் அவர்.

''உங்க விருப்பத்துக்கு அவங்க சரியல்லேன்னதும் அவங்க இஷ்டத்துக்கு உங்க அபிப்பிராயத்தை மாத்திக்கிட்டு நீங்களும் மழையிலே போய் நிற்கத் தீர்மானிச்சுட்டீங்களாக்கும்! ஆகா! உங்களுக்கு இருக்

கி. ராஜேந்திரன்



ரெண்டு அரசியல் மீட்டிங்குக்கு நீ வந்து கேட்டியானா அப்புறம் நாய்க்களை சொல்லமாட்டே; நீயும் உரிமை பேச ஆரம்பிச்சுடுவே.''

கிற இந்தத் திறமைக்கு நீங்க கட்டிக்கிட்டு அழுகிற 'ஸ்டெனோ' உத்தியோகத்தை உதறித் தள்ளிட்டு அரசியலிலே குதிச்சால் வெகு வேகமா முன்னுக்கு வந்துடலாம் மாமா! இன்னைய தேதியிலே கட்சிக்கு முன்னுலே தனிமனிதனுடைய கருத்தும் இந்தக் கதியாகத்தான் ஆகிக்கிட்டு இருக்கு!''

''ஏன் பேசமாட்டே தம்பி? பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுன்னு விஷயம் புரியாமயா சொன்னுங்க? இல்லே, அப்பா இல்லாத குறை தெரியாம இருக்க உன் மேலே நான் அன்பு வைச்சதுதான் தப்பா?''

''அடாடா! வருத்தப்பட்டுக்கிடா நீங்க, மாமா! சும்மா தமாஷா பேசினு.. நீங்க.. இப்படி..'' என்று உண்மையான பிரியத்தோடு குழைந்தான் தங்கப்பன்.

அவன் மழையில் நிற்கிறுனே என்பதால் அவர்களுக்கு ஏற்பட்ட பதற்றத்தை உணர்ந்து அவன் மன நிறைவும் மகிழ்ச்சியும் கொண்டு அவர்களிடம் நன்றி பாராட்டாமல் இல்லை. ஆனுல் அதே சமயத்தில், அந்தக் கரிசனம் தங்கப்பனிடம் காண்பிக்கப் பட்டதல்ல; செல்லத்தின் கணவனுக, விட்டுக்கு மாப்பிள்ளையாக வரப் போகிறவன் என்ற கருத்தில் காண்பிக்கப்பட்ட கரிசனம் என்றும் அவன் சந்தேகித்தான். 'பனி, தூறல், மழை எதையும் பொருட்படுத்தாமல் வெட்ட வெளியில் நிற்கும்படி அப்படி என்ன முக்கிய காரியம் வருங்கால மாப்பிள்ளைக்கு?' என்று தெரிந்து கொள்கிற அடக்கமாட்டாத ஆர்வம்தான் அவர்களை மதிலுக்குப் பக்கத்தில் கொணர்ந்து



ரிருந்தி யிருக்கிறது என்ப னும் புரிந்தது அவனுக்கு.

'என்ன நடந்தது' என்று விசாரித்து அறியத் தங்கப் பனைத் தவிர்த்து அங்கிருந்த மற்ற மூவரின் உள்ளங்களி லும் நூறு வினாக்கள் கிளர்ந் தெழுந்தன. ஒவ்வொன்றும் ஆனால் அப்படிக் கேள்விகள் கேட்டுக் குடைந்தால் அவ னுக்குப் பிடிக்குமோ பிடிக் காதோ என்ற அச்சத்தால் அவர்கள் தயங்குவதையும் ஊகித்தான் தங்கப்பன்.

குடைசலைத் தாங்கமாட் டாமல் அவர்கள் தவிப்ப தைக் கண்டு பரிதாபப்பட்ட வனாகத் தானாகவே அது சம்பந்தமான பேச்சை ஆரம்பித்து வைத்தான்: செல்லம் எடுத்துத் தந்த உலர்ந்த துண்டினால் தலை யைத் துவட்டிக்கொண்டே, ''தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று என்பார்களே அப்படித் தான் நடந்தது. பெரிய விபத்தாக நிகழவிருந்தது. தெய்வாதீனமாகத்தான் உஷா தப்பித்தாள்'' என்று கூறி அம்மூவரின் முகங்களை யும் கூர்ந்து நோக்கினான்.

செல்லம் ஏதோ சொல்ல வாயெடுத்தாள்: அவளை முந்திக் கொண்டு, அவள் தாயார், ''உஷாவா? அவளை ஏற்கனவே தெரி யுமா உனக்கு?'' என்று வினவினாள்.

''உஷாவைத் தெரியுமா என்று கேட்கிறீங்க? என்ன கேள்வி இது? நம்முடைய மந்திரி தீனதயாளு இல் லையா? அவருடைய மகள்! சத்தியபுரித் தொகுதியிலே யிருந்துதானே சட்டசபைக் குத் தேர்ந்தெடுக்கப்பட் டார், அவர்?''

ரொம்பவும் நெருக்கமா கப் பரிச்சயமானவள் போல மந்திரி மகளைப்பற்றித் தான் பேசக்கேட்டதும் அவர்கள் துணுக்குறும் பாவத்தைக் கவனித்துக் கள்ளக் களிப்புக் கொண்டான் தங்கப்பன்.

அத்தனை பெரிய இடத்துச் சிநேகம் இவனுக் குண்டா? செல்லத்தை மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்கிற நமது திட்டம், செல்வமும் செல்வாக்கும் மிருந்தவர்களிடம் தொடர்பு வைத் துக் கொண்டிருக்கும் இவனிடம் செல்லுபடியாகுமா என்று திகைப்படைந்து விட்டார்களா அவர்கள்!

அவர்கள் உள்ளங்களை மேலும் உலுக்கி எடுத்து வேடிக்கை பார்க்க விரும்பியவனாக, ''அந்தப் பெண் ணும் நானும் சத்தியபுரியில் பக்கத்துப் பக்கத்துப் பள்ளிக்கூடத்திலேதான் படித்தோம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி முனிசிபல் ஸ்கூல்கள். ஆனால் தினம் மத்தியானம் சாப்பாட்டு நேரத்திலே சுவரேறிக் குதிச்சு வம்பளக்க வந்துவிடும்! இன்னைக்கு மந்திரி பதவி கிடைச்சுப் போச்சு. ஆனால் அந்த நாளிலே அவள் அப்பா எம். எல். ஏ.தான். ஒரு வருஷமோ இரண்டு வருஷமோதான் அந்தப் பள்ளிக் கூடத்திலே படிச்சது. அப்புறம் கோவை கான்வெண் டிலே கொண்டுபோய்ச் சேர்த்துட்டாங்க. இருந்தா





''நமக்குப் பிறக்கும் குழந்தைகளை 'கான்வென்'டில் சேர்ப்பதாக உறுதி கூறினால்தான் நான் உங்களைக் காதலிப்பேன், கலியாணமும் செய்து கொள்வேன்!''

னும் வீடு உள்ளூரிலேதானே? அடிக்கடி சந்திக்க நேரும்தான். சென்னையில் நான் காலேஜிலே படிச்சுக்கிட்டிருக்கிறப்போகூட லீவுக்கு ஊருக்குத் திரும்பறபோதெல்லாம் பார்க்கிறதுண்டு. இப்பத்தான் — கடந்த இரண்டு வருஷமாத்தான் பெரிய லீவுகளுக்கு வடக்கே ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பிப் போயிட்டதனாலே அவளைக் காண முடியாமலே போச்சு. அந்த இரண்டு வருஷத்துக்குள்ளாறதான் எத்தனை மாறுதல்? அடையாளமே புரியாமல் ஒரேயடியாக வளர்ந்து போச்சு! ஆச்சரியம்தான்!'' உண்மையாகவே இரண்டே ஆண்டுகளில் உஷாவின் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த — அவனது வாலிப உள்ளம் வரவேற்ற — வித்தியாசங்களை நினைத்து வியந்துதான் போனான் தங்கப்பன்.

''அடையாளம் புரியாதபடி மட்டுமா? அழகாகவும் வளர்ந்திருக்கிறாளே!'' என்றாள் செல்லம்.

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் ரொம்பவும் சாமர்த்தியமாகச் செல்லம் தன்னை விளையாட்டாக வம்புக்கிழுத்து, அதே சமயத்தில் தன் இதயத்தையும் ஆழம் பார்க்க முற்படும் விதத்தை வெகுவாக அனுபவித்தான் தங்கப்பன்.

''அழகைப் பற்றி எனக்கென்ன தெரியும்?'' என்று கேட்டு வைத்தான்.


''ஐயோ! ஐயோ! அத்தான்தானா பேசுகிறது...'' என்று கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு அவனை விழி பிதுங்கக் குறும்புத்தனமாக நோக்கிய செல்லம் ''இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்கிற மாதிரி?'' என்று கேட்டாள். ''பொடானிகல் கார்டனிலே மலர்களை மங்கைக்கு ஒப்பிடுவதா, மங்கையை மலர்களுக்கு ஒப்பிடுவதா என்று ஆராய்ச்சி நடத்திய அதே அத்தான்தானா? இவர் வர்ணனைகளைக் கேட்க அப்போது பக்கத்தில் இல்லாமல் போய் விட்டீர்களே, அப்பா! அருமையான 'சான்ஸை மிஸ்' பண்ணிட்டீங்க. ஆனனப்பட்ட கவிகளெல்லாம் பிச்சை வாங்கணும்!''

தனித்திருக்கும் போது தங்கப்பனிடம் வாய் திறக்கவே துணிவிருக்காது செல்லத்துக்கு. உதகை பூங்காவனத்தில் அவன் செல்லத்தின் தோற்றத்தைச் சிலாகித்து ஏதும் கூறிவிடவில்லை. மலர்களையும் மங்கையையும் பற்றிய தனது பொதுப்படையான வர்ணனைகளைக் கேட்டே ஒரேயடியாக வெட்கப்பட்டுத் தலை குனிந்த அதே செல்லத்துக்கு அவளுடைய தாய் தந்தையர் உடனிருக்கும் போது மட்டும் இத்தனை தாராளமாகத் தன்னுடன் வம்பளக்கிற தெம்பு எங்கிருந்து, எப்படி வருகிறது?


தங்கப்பன் தர்க்கத்திலே தான் தோற்று வருவதை உணர்ந்தான். 'அழகைப் பற்றி எனக்கென்ன தெரியும்?' என்று கேட்டதற்குப் பதிலாக 'ஆமாம், ரொம்பவும் அழகாகத்தான் இருக்கிறாள்' என்று ஆமோதித்திருந்தால் செல்லத்தின் வாயை அடைத்திருக்கலாம். 'நான் ஏன் அப்படிச் சொல்லவில்லை? எதையோ மறைக்க முயலும் பலவீனமடைந்த மனமா என்னுடையது?'

தங்கப்பன் மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்து நிற்பதைக் கண்டார் சபாபதி. என்னதான் இருந்தாலும் ஆண் வர்க்கத்தைச் சேர்ந்த அவனை விட்டுக் கொடுக்க அவருக்கு மனம் வரவில்லை. ''தோட்டத்திலே கண்ணுக்கினிமையாகப் பூத்துக் குலுங்குகிற மலர்களைப் பார்த்து மகிழ்ந்து ஏதோ பேசறதுக்கும் ரோட்டிலே போகிற வருகிற பெண்களின் அழகையெல்லாம் ரசிப்பதற்கும் வித்தியாசமில்லையா என்ன? அதிகப் பிரசங்கி!'' என்று மகளைச் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

''அழகை அது எங்கிருந்தாலும் ரசிப்பதிலே தவறு இருப்பதாக நான் கருத மாட்டேன், மாமா! எந்தக் கண்ணோட்டத்திலே பார்க்கிறோம் என்பதுதான் முக்கியம். விகாரக் கண்களுடன் நோக்கினால் அழகே ஆபாச



வளரும் குழந்தைகளுக்கு



அதிகப்படி கால்ஷிய ஊட்டம் தேவை...



கல்ஸாணு-டி இதை அளிக்கிறது



குழந்தைகள் கல்ஸாணு-டியின் இன்சுவையைப் பெரிதும் விரும்புகிறார்கள்—எனவே தான் மேலும் மேலும் அது வேண்டுமென்று கேட்கிறார்கள். தங்கள் குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக கல்ஸாணு-டி மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமான வலுவும், ஆரோக்கியமும் உள்ள உடல் வளர்ச்சியைப் பெறுகிறார்கள் என்பதை விவேகமுள்ள தாய்தந்தையர்கள் அறிவார்கள். கல்ஸாணு-டி மாத்திரைகளிலுள்ள, வைடமின்,சத்து நிறைந்த கால்ஷியம், குழந்தையின் மென்மையான உடலுடன்கூட இரண்டறக்கலந்து, நிலைநிறுத்தப்படுகிறது...உங்கள் குழந்தைகளுக்கு கல்ஸாணு-டி கொடுத்து வளர்ப்பது பாராட்டுக்குரியது!

கல்ஸாணு-டி

வைடமின்சத்து நிறைந்த கால்ஷியம் மாத்திரைகள்
கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் வளரும் குழந்தைகளுக்கேற்றவை.

GR.HO-68.TAP

மாகி விடும்!'' என்ற தங்கப்பன் தொடர்ந்து, ''உனக்கு விளங்குகிறதா, செல்லம்?'' என்றும் கேட்டான், உஷாவுடன் தான் பழகிய விதத்தை விகல்பக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டாம் என்று கோருகிறவன் போல.

''நன்றாகப் புரிகிறது, அத்தான்!'' என்றாள் செல்லம் முகம் மலர.

''சரி, சரி, ஈரப் புடவையோடேயே எத்தனை நேரம் நிற்கிறது? இந்தச் சிலுசிலுப்புக்கு ஒத்துக்குமா? உடை மாற்றிக்கிட்டுப் பெட்டி படுக்கையை யெல்லாம் கட்டுங்க. ரயிலுக்கு நேரமாவுது'' என்ற சபாபதி மாற்று வேஷ்டியைப் பிரித்து உதறினார்.

பெண்கள் அப்பால் சென்றதும், தங்கப்பனும் பேண்டும், ஸ்லாக் ஷர்ட்டும் அணிந்து கொண்டான். அப்போது, 'பொய்யைக் காட்டிலும் பாதி உண்மை எப்படி நிலைமையைத் தலைகீழாக மாற்றி விடுகிறது' என்று தனக்குள்ளாகவே எண்ணி வியந்தான் அவன். அரசியல்வாதிகள் சர்வ சாதாரணமாகக் கையாளும் அந்த அருவருக்கத்தக்க ஆயுதத்தைத் தானும் இப்போது பிரயோகித்தது எதனால்?

செல்லத்திடமும் அவள் பெற்றோரிடமும் அவன் உஷாவுக்கும் தனக்குமுள்ள தொடர்பு பற்றி லவலேசமும் பொய் சொல்லிவிட வில்லைதான். எனினும் அவன் சில விஷயங்களைக் கூறாமல் விடுத்ததாலேயே உஷாவும் மந்திரி தீனதயாளுவும் தனக்கு ரொம்பவும் பரிச்சயமான குடும்ப நண்பர்கள் என்கிற அபிப்பிராயத்தை அவர்களிடம் ஏற்படுத்திவிட முடிந்தது அவனால். தங்கப்பனை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டும் அவர்கள் உள்ளங்களில் அந்த எண்ணம் ஈடேறாமல் போய் விடுமோ என்கிற கவலையையும் உருவாக்கிவிட முடிந்தது. 'நாம் ஏன் அப்படி நடந்து கொண்டோம்? அவர்களை ஏமாற்றி ஒரு நிச்சயமற்ற மனத்துடன் பதைக்க வைப்பதில் நமக்கென்ன திருப்தி?' என்று யோசித்தான். சரியானதென்று அவன் அறிவு ஒப்புக் கொள்ளக் கூடிய பதில் அவனுக்குத் தன் உள்ளத்திடமிருந்து கிடைக்கவில்லை !

அத்தியாயம் 6

அணைக்க வந்த கரங்கள்

வேலைவெட்டி ஏதுமின்றி நேரத்தை வீணாக்கிக் கொண்டு வாசல் வராந்தாவில் பிரம்பாலான சாய்வு நாற்காலியில் அமர்ந்து எதிரே கண்ணாடி பதிக்கப் பெற்ற சிறிய மேஜைமீது இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தாள் மகேசுவரி.

திடுமென வானம் இருண்டு மழை வலுத்ததும் உஷா இந்த மழையில் மாட்டிக் கொள்வாளே என்ற எண்ணத்தில் பரக்கப் பரக்க எழுந்து நின்றாள். ஆனால் அதன் பிறகு என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை!

கைகளைச் சேர்த்துப் பிசைந்தவாறே குறுக்கும் நெடுக்குமாக வராந்தாவில் நடப்பது தவிர வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை. உஷா வருகிறாளா என்று 'கேட்'டருகே சென்று பார்க்கத் தீர்மானித்தாள். வாசல்படிகளில் கடைசிப் படி வரை இறங்கினாள். மழையின் தீவிரத்தை உணர்ந்து பதைக்கும் மனத்துடன் மீண்டும் உள்ளே ஓடி வந்தாள்.

''முனுசாமி! முனுசாமி!'' என்று அலறினாள் மகேசுவரி.

உள்ளே நாற்காலிகளைத் தூசு தட்டிக் கொண்டிருந்த வேலையாள் பக்கத்திலிருந்த ஜன்னலோரமாக நின்று ''என்னம்மா?'' என்று கேட்டான்.

''கூப்பிட்டா அங்கே நின்னுக்கிட்டே 'என்ன'ன்னு என்ன கேள்வி ? கிட்டத்தில் வந்து தொலையேன் !'' என்று கத்தினாள் மகேசுவரி.

'கடனே' என்று அவள் எதிரே வந்து நின்றான் அவன்.

''குழந்தை குதிரை சவாரிக்குப் போனாள். மழை புடிச்சுக்கிச்சே! அண்ணாவும் கான்பிரன்ஸுன்னு காரை எடுத்துக்கிட்டுப் போயிட்டார். குடையைத் தூக்கிக்கிட்டுக் கிளம்பேன்! தூணாட்டம் நிக்கிறியே!'' என்று இரைந்தாள்.

''அவங்களை எங்கேம்மா தேடறது?''

''நீ என்ன ராக்கெட்டிலே ஏறிக்கிட்டுச் சந்திரமண்டலத்துக்கா போகப் போறே, அவளைத் தேட? உன்னை மாதிரி உபயோகமத்தவங்களோடே நான் மாரடிக்க வேண்டியதா யிருக்குதே அதைச் சொல்லு! ஊட்டியில் தானே எங்கேயாவது இருப்பாள் அவள்? ஏரிக் கரை, பொடானிகல் கார்டன்னு போய்ப் பாரேன்! காலை நீ நகர்த்தறதுக்குள்ளாற நாளைப்போது விடிஞ்சுடும் போலிருக்கே!''

அண்ணனுக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்பதால் மகேசுவரி மிரண்டு போயிருக்கிறாள் என்பதையும் இப்போது அவனிடம் வாக்குவாதம்

புரிவது பலனளிக்காது, அவன் கோபத்தைத்தான் கிளறும் என்பதையும் அறிந்தவனாக, 'எதற்கு வீண் வம்பு?' என்று குடையை எடுத்துப் பிரித்துக் கொண்டு கிளம்பினான் முனுசாமி. அந்தச் சாலை மூலை வரையில் போய் அங்கே உள்ள டீக் கடையில் மழைக்கு ஒதுங்கி அப்படியே 'ஒரு சிங்கிள் டீயும் ஒரு பாஸிங்ஷோவும் அடிச்சுட்டுத் திரும்பிடலாம்' என்கிற நோக்கத்தோடு தான் புறப்பட்டான். 'என்னாலான மட்டும் தேடிப் பார்த்தாச்சு, அந்தப் புள்ளையை எங்கேயும் காணோம்னு சொல்லிட்டாப் போச்சு! அவ்வளவு அக்கறையானா போலீஸுக்குப் போன் பண்ணட்டுமே! மழையிலே துரத்தி அடிக்க நான்தானா அகப்பட்டேன்?'

இதே போன்று மழை கொட்டிய ஒரு தினத்தன்று, பல வருஷங்களுக்கு முன்னால் அவன் தாத்தா, சிறுவன் முனுசாமியைத் தன் மடியிலே தூக்கி வைத்துக் கொண்டு எஜமான விசுவாசத்தை விளக்கும் ஒரு நாய்க் கதை கூறியது அவன் நினைவுக்கு வந்தது. 'மழையில் உஷா நனைவாளே என்று அவள் அத்தை அவ்வளவு தூரம் துடிக்கும்போது அந்தத் தவிப்பிலே அரைக்கால் பாகத்தையாவது நீ அனுபவிக்க வேண்டாமா?' என்று இப்போது கூட அவன் தாத்தா கேட்பது போல் அவனுக்குத் தோன்றியது. 'எஜமானனாவது, விசுவாசமாவது, தாத்தா! இந்த நாளிலே யார் எஜமானன், யார் வேலைக்காரன்? அந்தக் காலமெல்லாம் மலை ஏறிப் போச்சு! ரெண்டு அரசியல் மீட்டிங்குக்கு நீ வந்து கேட்டியானா அப்புறம் நாய்க் கதை சொல்ல மாட்டே; நீயும் உரிமை பேச ஆரம்பிச்சுடுவே' என்று வீட்டில் கயிற்றுக் கட்டிலில் 'லொக்கு, லொக்கு' என்று இருமியபடி உட்கார்ந்திருக்கும் தொண்டுக் கிழவனாருடன் மானசீகமாகப் பேசியபடி நடந்தான் முனுசாமி.

வேகமாகப் பாய்ந்து வரும் குதிரையின் குளம்புச் சத்தம் அப்போது அவன் கவனத்தைக் கவர்ந்தது. 'அம்மா! குடை!' என்று ஏதோ சொல்லத் தொடங்கிப் பிறகு வார்த்தைகள் எதையும் வெளியிடாமலே விழுங்கி விட்டான் அவன். உரக்கக் கூறியிருந்தாலும் உஷா அவனை ஒரு பொருட்டாக மதித்து அங்கே நிற்கப் போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும். சாலையில் பாதி தூரம் கடந்துவிட்ட அவன் குடையையும் சிகரெட்டையும் முக்கால் மணி நேர ஓய்வையும் இழக்க மனமின்றிப் பங்களாவுக்குத் திரும்பாமல் நேரேயே நடந்தான்.

பங்களாவின் கேட்டைத் தாண்டிப் பெரிய தோட்டத்தின் பாதையில் விரைவாக முன்னேறி வாசல் போர்ட்டிகோவில் வந்த வேகத்தைவிட அதிகத் துரிதமாக நின்றது குதிரை. உஷா கீழே இறங்கி அதன் கழுத்தை இரண்டு தடவை தட்டிக் கொடுத்தாள். குதிரை உடல் சிலிர்த்துத் தும்மியது.

விருவிருப்புடன் படிகளில் ஏறிய உஷாவைப் பார்த்து மலர்ந்த முகத்துடன், ''அப்பாடா! இப்பத்தான் போன உயிர் திரும்பி வந்தது'' என்றாள் மகேசுவரி.

ஒரு படி தாழ்வாக நின்ற போதே மகேசுவரியைவிட ஓரங்குலம் உயரமாக இருந்தாள் உஷா. தான் நடந்து வரும் நேர்க் கோட்டில் தடையாக மகேசுவரி நிற்பதுடன் ஒதுங்கி வழி விடாமலும் இருப்பதைப் பொறுக்க மாட்டாதவள் போலவும் ஒரு பக்கமாகத் தான் ஒதுங்கிப் போவது தனக்குக் கௌரவக் குறைவு என்று கருதுபவள் போலவும் தன் இடது கரத்தை மகேசுவரியின் இடது தோளில் வைத்து அழுத்தி இப்பால் இழுத்துத் தள்ளினாள்.

வராந்தாவில் நாற்காலியில் அமர்ந்து முழங்கால் வரை உயர்ந்த பூட்ஸ்களையும் அதனுள்ளிருந்த பாதங்களை மட்டும் கவ்விய ஸாண்டல்களையும் ஏதோ வேதனையுடன் போராடுபவள் போல் முகம் சுளித்தபடியே கழற்றி மூலைக்கொன்றாக வீசி எறிந்தாள்.

மேலே கறுப்பு ஸாட்டின் துணி ஒட்டப்பெற்றிருக்கும் நகைப் பெட்டியைத் திறந்ததும் உள்ளே முத்தாரம் ஜொலிப்பது போல, சேறும் சகதியும் படிந்த கறுப்பு பூட்ஸ்களைக் களைந்தெறிந்ததும் தந்தத்தின் நிறத்தில் அவள் பட்டுப் பாதங்கள் பளிச்சிட்டன. அழகுற அமைந்த கால் விரல்களை ஒன்றிரண்டு விநாடிகள் வளைத்தும் நெளித்தும் அவற்றில் ரத்த ஓட்டம் மிகச் செய்தாள்.

விசுக்கென எழுந்து மளமளவென்று உள்ளே போய்க் குளியலறைக்குள் புகுந்து கதவைப் படீரென அறைந்து சாத்தித் தாளிட்டுக் கொண்டாள்.

சற்று முன் உஷாவை அவள் படியேறி வந்த போது அணைக்க முற்பட்டுத் தோல்வி கண்ட மகேசுவரியின் கரங்கள் இப்போது அவள் விட்டெறிந்து சென்ற பூட்ஸ்களைப் பொறுக்கின.



மீனு சீனு

சாமா



1

"எதுவும் ஏன் ஒன்னு வாங்கி வரேள்? பாருங்க எனக்கு முழுசுதான் வேணும்னு ! சீனுவும் மீனுவும் சண்டை பிடிக்கிறார்கள்" என்றாள் குழந்தைகளின் தாயார் பீமண்ணுவைப் பார்த்து.



2



3

மறுநாள் பீமண்ணு ஆட்டக் குதிரை வாங்கி வந்தார். "எதையேனும் வாங்கி வந்து குழந்தைகளைக் கலக மிட்டு வந்தால்தான் உங்களுக்குச் சந்தோஷமோ?" என்று கோபித் தாள் தாயார்.

குழந்தைகளைக் குதிரைமேல் உட்கார வைத்தார் பீமண்ணு. "எனக்கு மட்டும் பின்பக்கமா?...நான் முன்பக்கம்தான் உட்காருவேன்" என்று அலறினான் மீனு.



4

"முடியாது! எனக்கு முன்பக்கம்தான் வேண்டும்" என்றான் சீனு! சண்டை முற்றியது., இருவருக்கும் அடியும், அழுகையும் தொடர்ந்தன. பீமண்ணுவுக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை.




5



6

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை உதித்தது. அதைச் செய்ய முற்பட்டார்... செய்தும் முடித்தார்...

'சபாஷ்! நல்ல யோசனை' என்று பீமண்ணுவை முதல் தடவையாகப் பாராட்டினாள் குழந்தைகளின் தாயார்.





சாருலதா



உருவெடுத்துவிட்டது. காமிரா, படப்பிடிப்பு என்பதையே மறந்து வாழ்க்கையில் காணும் நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாகப் பார்க்கிறோம் என்ற நினைப்பைத் தோற்றுவித்து விடுகிறார் தேர்ந்த டைரக்டர்.

சாருலதாவின் கணவன் பூபதி தன் 'சென்டினல்' பத்திரிகையின் வளர்ச்சியே தன் இலட்சிய வாழ்வாகக் கொண்டுவிடுகிறான். இதனால் அவன் வாழ்க்கையில் எத்தனை எத்தனை துயரங்கள் கப்பிவிடுகின்றன! தனிமையின் கொடுமை தாங்காது சாருலதா விடுமுறைக்கு வந்த பூபதியின் ஒன்றுவிட்டசகோதரன் அமலிடம் மனத்தைப் பறிகொடுத்து விடுகிறாள். சென்டினல் பத்திரிகையின் நிதியனைத்தையும் சாருலதாவின் சகோதரன் உமாபாதா சுருட்டிக் கொண்டு போய் விடுகிறான். அமல் நல்லவன். தானும் பூபதிக்குத் துரோகமிழைக்கக் கூடாது என்று வீட்டை விட்டு வெளியேறுகிறான். சாருலதாவின் உள்ளத்தில் கள்ளம் புகுந்துவிட்டதை உணர்ந்த பூபதி மனம் வெதும்புகிறான். ஆனால் அவளைத் தனிமையில் தவிக்கவிட்ட தான்தான் பொறுப்பாளி என்பதை உணர்கிறான் பூபதி. ஒதுங்கி வாழ்ந்த தம்பதியினர் மனம் ஒன்றுபடுகின்றனர்.


சாருலதாவில் எல்லாக் கதாபாத்திரங்களும் உணர்ச்சிகளைக் கொட்டுகின்றனர். நம் உள்ளத்தையும் அவர்கள் களவாடிவிடுகின்றனர். உணர்ச்சிப் பிரதிபலிப்புக்கு எந்த மொழியானால் என்ன? வங்க மொழிப்படத்தை நாமும் அனுபவிக்க முடிகிறது. ''டைரக்டர் சத்யஜித் ரே (படம்) சாமர்த்தியசாலிதான்'' என்றால் சர்க்கரை இனிக்கிறது என்று சொல்வது போலாகாதா? ஸபயர் தியேட்டரில் ஞாயிறன்று விசேஷக் காட்சியாக அமைந்த சாருலதா ரசிகர்களின் உள்ளத்தையும் 'விசேஷமாக'க் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தார்!

தியேட்டருக்குப் போய் மன வேதனையையும் தலைவலியையும் வாங்கிக்கொள்ளும் நோக்கமில்லையென்றால் ''ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தா''ரைச் சிபாரிசு செய்கிறோம். வயிறு வெடிக்கச் சிரித்து உல்லாசமாகப் பொழுது போக்க வேண்டுமென்றால் அதற்கு இதை விட நல்ல படம் இன்று இல்லை என்று சொல்ல வேண்டும். கதையைப் பற்றி அதிகம் கேட்காமல் இருப்பதே நல்லது. இன்றைய சோஷலிஸ சமுதாயத்தில் பெரிய மகாராஜாக்களும், ஜமீன்தார்களும் ஆலாகப் பறக்கும் இக்காலத்தில் ஜமீன்தார் ஆக ஒருவன் பாடுபடுகிறான் என்று காட்டியிருப்பது காலத்துக்குப் பொருத்தமாக இல்லை. ஜெமினி கணேசன், சாவித்திரி இவர்களின் காதல் காட்சிகள் ரம்மியமாக இருக்கின்றன. ஜமீன் நிர்வாகஸ்தராக வரும் டி. எஸ். பாலையாவும் வழக்கம்போல் நல்ல நகைச்சுவை விருந்தளிக்கிறார். ஸ்ரீ எம். ஆர். ராதா சாதாரணமாக வில்லன் பாத்திரத்தில் வந்து நகைச்சுவையுடன் வசனங்களைப் பொழியும்போது ரசிகர்களுக்கு வேதனை கலந்த சிரிப்பு வரும். ஆனால் இந்தப் படத்தில் அவரிடம் அனுதாபம் ஏற்படும் வகையான பாத்திரத்தை ஏற்று, அவர் நல்ல ஹாஸ்ய விருந்தளிக்கிறார்.


நீச்சல் குளக் காட்சிகள், ட்விஸ்ட் நடனங்கள் கதைக்கோ, படத்துக்கோ ஒட்டவில்லை. ஆனால் இப்போது இக் காட்சிகளை வலுக்கட்டாயமாகச் சேர்ப்பது சம்பிரதாயமாகி விட்டதே!

கண்ணதாசன் பாடல்களும், வே. லட்சுமணன் வசனங்களும், கே. ஜே. மகாதேவன் டைரக்ஷனும் நன்றாக இருக்கின்றன.




பாரத ரோஜா

நேருஜி பாக்கியசாலி! அவர் பெருந் தலைவர்களின் தூய அன்பையும் அளவற்ற முறையில் பெற்று வந்தார். அதுவே அவர் வாழ்க்கை வெற்றிகரமாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் உதவியது. அந்த ஒப்பற்ற அன்பை, நேருஜி தாம் அணிந்து வந்த ரோஜா மலரைப் போலவே பேணியும் வந்தார்.






















பாரத ஜோதி

மனிதகுல மாணிக்கமாகத் திகழ்ந்த நேருஜி பாரத நாட்டின் எல்லா மக்களையும் தம் உள்ளன்போடு நேசித்து, அவரவர்கள் நடை, உடை பாவனைகளையும் அவ்வப்போது மேற் கொண்டு மகிழ்வித்தார். பாரத தேசமே தமது குடும்பமாகக் கொண்டார். அத்தகைய காட்சிகள் சிலவற்றை இந்தப் பக்கங்களில் காணலாம். ★











JAPAN



கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

30. கனவில் தோன்றிய கந்தவேள்!

சரீரத்துக்கு வருகின்ற துன்பங்களை வைத்தியர் உதவியால் போக்கிக் கொள்ளலாம். மனத்தில் ஏற்படுகின்ற துன்பத்தை எம்பெருமான் ஒருவரால் மட்டுமே போக்க முடியும். அதனால் தான் திருவள்ளுவர் 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால், மனக் கவலை மாற்றல் அரிது'' என்று கூறியிருக்கிறார்.

சிறையில் நூற்றெட்டு யுகங்கள் துன்பப்பட்டு நாளுக்கு நாள் கொடுமை பொறுக்க முடியாமல் தவித்த சயந்தன் யாரை நம்பியும் பயனில்லை என்று கண்டு இறைவனொருவனையே கசிந்துருகி வேண்டினான்.

சயந்தன் சொர்க்க வாழ்க்கையைக் கண்டவன். அதன் நிலையாமையையும் இப்போது உணர்ந்து விட்டான். அவன் சொர்க்கவாசியா யிருந்ததால் தான் அசுரரின் எதிர்ப்புக்கு ஆளானான். எனவே, சொர்க்க போகத்தின் பயன் துயரம் ஒன்றே என்று இப்போது அவனுக்குத் தெளிவாயிற்று. இந்தச் சிறைவாசம் நீங்கினாலும் அதன் பின் மீண்டும் துன்பத்துக்கு இடமான சொர்க்கத்தை நாடுவதில் பயனில்லை; இனி தேவையானது இறைவன் திருவடி ஒன்றே; அதுதான் என்றென்றும் இன்பம் பயக்கவல்லது எனக் கண்டான்.

> ''தண்டேன் துளிக்கும் தருநிழற்கீழ்
> வாழ்க்கை வெஃகிக்
> கொண்டேன் பெருந் துயரம்
> வான்பதமும் கோதென்றே
> கண்டேன் பிறர்தம்
> பதத்தொலைவும் கண்டனனல்
> தொண்டேன் சிவனே நின்
> தொல்பதமே வேண்டுவனே!''

என்று அல்லும் பகலும் பிரார்த்தித்தான் தேவராஜகுமாரன்.

சோகத்தின் தாலாட்டில் தன்னை மறந்து உறக்கம் கொண்டான் சயந்தன். அவனுக்கு அருள் புரிய எண்ணிய ஆண்டவனும் அதுவே தருணமெனக் கொண்டார். அவனது கனவிலே முருகப் பெருமான் ஆறுதிருமுகமும் பன்னிரு திவ்விய கரங்களுமாகத் தோன்றினார். தியான சுலோகத்துக்குச் சமமான ஒரு பாடலால் கச்சியப்பர் முருகனை வருணிக்கிறார்:

> **வீறு கேதனம் வச்சிரம்**
> **அங்குசம் விசிகம்**
> **மாறி லாதவேல் அபயமே**
> **வலம்; இடம்வரதம்**
> **ஏறு பங்கயம் மணிமழுத்**
> **தண்டு வில் இசைந்த**
> **ஆறிரண்டு கை அறுமுகக்**
> **கோண்டுவேள் அடைந்தான்**

வலது கரங்களில் ஐந்தில் பெருமையுடைய சேவற்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் இந்த ஆயுதங்களைத் தாங்கித் தன் வீரப் பெருமையைப் பிரகடனம் செய்த ஐயன், ஆறுவது கரத்தால் தன் அன்பின் பெருமையை அபய முத்திரையால் வெளிப்படுத்தினார். அடியாரின் பவ பயத்தையும் மற்ற பயங்களையும் போக்குவதுடன் அவர்களுக்கு முக்திநிலை என்ற வரத்தையும், மற்ற கோரிக்கைகளையும் அருள்பவரல்லவா ஐயன்! அத்தகைய வரத முத்திரையை இடது கரங்களில் ஒன்று தாங்க, மற்ற ஐந்து கரங்களில் மோகனாஸ்திரமான தாமரையையும், நாதத்தாலேயே எதிரியைக் கலங்கச் செய்யும் மணியையும், மற்றும் மழு, தண்டு, (கதை), வில் இவற்றையும் ஏந்தி வந்தார் கந்தன். அபய தத்துவமும் வரத தத்துவமுமே இறுகினாற் போன்ற முறுவல் பூத்த ஆறுமுகங்களுடன் சயந்தனுடைய கனவில் காட்சி தந்தருளினார்.



அருணகிரிநாதர் வருணிக்கும் அழகையும் இத்துடன் இணைத்துப் பார்த்து உள்ளம் இனிக்க வேண்டும்.

கடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருபகிரி யிடமேவு முகமாறும்
கரர் தெரியல் அவிபாட மழலைதீ நறைபாய
துகிர் இதழின் மொழிவேத மணம்வீச
அடர்பவள ஒளிபாய அரிய பரிபுரம் ஆட
அயில்கரமொடு எழில்தோகை மயில்ஏறி
அடியன் இருவினை தீரபட அமரர் இதுபூரை
அதிசயமென்றருள் பாட வரவேணும்

தந்தை இல்லாத இறைவனைத் தமக்குத் தந்தையாகக் கொண்டவர் முருகன். வில்லிப்புத்தூர் ஆழ்வார் சிவபெருமானைப் ''பிறப்பிலி இறப்பிலி'' என்று சொல்லுகிறார்; ''பிறவா யாக்கைப் பெரியோன்'' என்று இளங்கோ அடிகள் சொல்லுகிறார். இவன் தந்த குமரனைக் கண் நிறையக் கண்டான் சயந்தன். கனவுக் கண்ணால் காணவில்லை. சுவர்க்க லோகத்தையே வீண் கனவு எனக்காணும் ஞானக் கண்ணால் கண்டான்.

துன்பச் சுமையைத் தாங்க மாட்டாத சயந்தன் மூர்ச்சையாகி விட்டான். மூர்ச்சையானால் கண் மூடும். அப்போது தான் துக்கம் வரும். சயந்தன் கண்மூடியிருக்கும்போது சுவாமி போய்க் காட்சி கொடுக்கிறார். ''மூந்து கண்களாற் கண்டனன்'' சயந்தன் என்கிறார் பக்த கவி.

இந்தச் சரீரத்தினுள்ளே இன்னொரு சரீரம் இருக்கிறது. அதற்கு சூக்கும சரீரம் என்று பெயர். இந்த உடலை விட்டு உயிர் நீங்குவதைத் தான் மரணம் என்று சொல்கிறோம். கனமான ஸ்தூல சரீரத்தைக் கழற்றி வைப்பதுதான் மரணம்.

கோயில் திருவிழாக்களின் போது ஆடி பூதம் வரும்; ஆடும். அந்த ஆட்டத்தைச் சிறுவர் சிறுமியர் வேடிக்கை பார்ப்பார்கள். அந்தப் பூதம் தானாகவா ஆடுகிறது? பூத பொம்மைக்குள் ஆள் இருந்து கொண்டு அல்லவா ஆடுகிறான்? ஆட்டம் முடிந்ததும் அந்த ஆள் பூதத்தை விட்டுப் போய் விடுவான். அது போலவே ஒரு சரீரம் போனாலும் வேறு பல ஸ்தூல சரீரங்களுக்குள் சூட்சுமமாகப் புகுந்து ஒரே ஜீவன் கர்ம வினையைத் தீர்க்கிறான்.

கர்மத்தைத் தீர்த்துப் பரமனை அடைவதற்கென்றே அருமையாகக் கிடைத்த இந்த உடலை வீணாகத் தொலைத்து விடுகிறார்கள். இதைத்தான்

நந்தவனத்திலோ ராண்டி — அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி — அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

என்று பாடுகிறோம். நாலாறு மாதம் என்பது கர்ப்பவாச காலம். அப்படிக் கர்ப்பவாசம் செய்து பிறந்த காயம் தான் தோண்டி. உடம்பைப் பெறும் ஆத்மாவே ஆண்டி. குயவன் பிரம்மன். தோண்டியின் பயன் நன்னீரைமொள்ளுவது. சிவானந்த வெள்ளத்தை மொள்ளவே தவப் பயனாகக் கிடைத்த மானுட சரீரம் பயனாக வேண்டும். சிவயோகம் புரிய ஏற்பட்டதே மானுட உடல்.

யோகம் என்றால் கூடுதல் என்று பொருள். சிவத்தோடு — சுத்த ஞானத்தோடு ஒன்றுபடுதல் சிவயோகம். அகரம் முதல் க்ஷகரம் வரையுள்ள ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும் அப்பாற்பட்டது சிவயோகம். ஐம்பத்தொரு அட்சரங்களையும் மலராகக் கொண்டு அவற்றை நாவு என்ற இடத்திலே வைத்து, அன்பு என்னும் நாரினால் கட்டி, ஞானம் என்னும் வாசனை வீச, புத்தி என்னும் வண்டு மொய்க்க, மந்திர புஷ்ப மாலையைக் கட்டி எம்பெருமானுடைய பவளப் பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட
மாக்ருதா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ

என்று அருணகிரிநாதர் மணக்க மணக்கக் கூறுகிறார். சிவயோகம் செய்யாமல் இஷ்டப்படி தோண்டியை உருட்டினால் அது உடைந்து போகிறது. அதுவே மரணம். அப்போது இந்த உடம்புதான் போகிறது. இந்த உடம்பினுள்ளே சூக்கும உடம்பு புண்ணிய பாப பலனை வேறு உடம்பில் புகுந்து அநுபவிக்கும். இறக்கும் போது மட்டுமின்றி, இருக்கும் போதும் சூக்கும சரீரம் உள்ளேயிருக்கிறது. உறக்கத்தின் போது இதுவே இயங்குகிறது. அதன் மூலம் சயந்தன் கனவில் கந்தனைக் கண்டு தொழுதனன்.

சயந்தன் 'மூந்து கண்களால்' முருகவேளின் நவரத்தின வடிவத்தைக் கண்டான்; காலில் விழுந்தான்.

அவன் குமாரக் கடவுளைக் கண்டதேயில்லை அல்லவா? எனவே, ஆறுமுகமும் பன்னிரு கையுமுடைய இத்தெய்வம் யாரென யோசித்தான். 'வந்திருப்பவர் நாராயணர் அல்லர்; ஏனெனில், அவரது நிறம் நீலம். இவரோ ரத்தின வண்ணர். பிரமனும் அல்லர். ஏனெனில், ஆறுமுகம் படைத்துள்



புது டயரா? அல்லது புதுப்பித்த டயரா?

வேற்றுமை காண்பது கடினம்

உங்களுடைய கார் டயர்களை ரீடிரெட் செய்து, எவ்வளவு காலம் உபயோகிக்கலாமோ, அவ்வளவு காலம் உபயோகிக்கவே விரும்புவீர்கள். செலவு மிச்சம் ஒரு புறம்; தோற்றத்திலும் கவர்ச்சியாக இருக்கும் டிவிஎஸ் ரீடிரெட். ஏனென்றால், பயிற்சி பெற்ற நபர்கள் டிவிஎஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றுகிறார்கள் அவர்கள் உழைப்பு, உங்கள் சேவைக்கு.

டிவிஎஸ் — ரீடிரெடிங் செய்வதில்
இந்தியாவிலேயே மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

(டிவிஎஸ் ஸ்தாபனம்) பங்களூர். கோயமுத்தூர். சென்னை புதுக்கோட்டை
செகந்திராபாத் - திருநெல்வேலி

JWT/TVS/54/2066

ளார். ஆனாலும் அவர்களுக்கெல்லாம் மேலான அருளைப் பொழிகிறார்' என்று கண்டான் சயந்தன்.

''சுவாமி! தாங்கள் யார் ?'' என்று முருகக் கடவுளையே வினவினான்.

கருணையே உருவான சுவாமி சயந்தனுடைய கண்ணீரைத் தாமே துடைத்தாராம். அவன் பாக்கியம்தான் என்னே? தம்மை அறிமுகப்படுத்த அங்கே யாரும் இல்லாததால் சுவாமி தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்கிறார். என்ன எளிமை பாருங்கள்!

''சயந்தா! நான் சிவகுமாரன்! உன் துன்பத்தை நீக்கவே இங்கு வந்திருக்கிறோம். கவலைப்படாதே. தேவர்கள் சிறைப்பட்டபின் உன் தந்தை தன் குறையையும் உங்கள் குறையையும் எம்மிடம் முறையிட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளின் படி நாம் எண்ணற்ற படைகளுடன் புறப்பட்டுப் பூவுலகம் வந்தோம். கிரவுஞ்ச மலையையும், தாரகனையும் அழித்து விட்டுத் திருச்செந்தூரில் வீற்றிருக்கிறோம். நான்முகனும் நாராயணரும் உன் தந்தையும் மற்ற தேவர்களும் எம்முடன் இருக்கிறார்கள். உன்னுடைய தங்கை தேவயானை மேருகிரியில் வளர்கிறாள். நீ யாரைக் குறித்துமே வருந்தாதே. உன்னைக் குறித்தும் வருந்தாதே. சூரபன்மனிடம் வீரவாகு என்ற தூதரை அனுப்பியிருக்கிறேன். அவன் நீதிநெறிகளைச் சொல்லுவான். ஆனால் அவற்றை யெல்லாம் சூரபன்மன் கேட்கமாட்டான் என்பதும் எனக்குத் தெரியும். நாம் நாளையே செந்திலம்பதியை விட்டு நீங்கி மகேந்திர புரிக்கு வர நேரும். பிறகு போர் மூளும். தேவர்களுக்கெல்லாம் நலன் விளையும்'' என்று கூறியருளினார்.

சயந்தன் சிந்தை குளிர்ந்து கந்தனை மனம் உருகிப் போற்றினான்.

''சயந்தா! நாம் அனுப்பியுள்ள தூதன் உன்னையும் தேவர்களையும் வந்து சந்தித்து ஆறுதல் கூறுவான்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தார் ஆறுமுகன். சயந்தனுக்கு ஆறுதல் கூறியது போலவே முருகப் பெருமான் மற்ற தேவர்களின் கனவிலும் தோன்றி ஆறுதல் கூறி மறைந்தார். அவ ரொருவரால்தான் அப்படிக் கருணை வெள்ளம் பெருக்க முடியும்!

கனவு நீங்கி நனவு வரப் பெற்றதும் தேவர்கள் ஒருவருக்கொருவர் தாம் கண்ட கனவுகளைச் சொல்லிக் கந்தவேளின் திருவருளை நினைந்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

முன்பு தேவர்கோன் சிறையிலிருக்கும் சயந்தனுக்கு ஆறுதல் கூறுமாறு வீரவாகு தேவரிடம் கூறியதுடன், இப்போது ஷண்முகப் பெருமானும் அதனையே சயந்தனுக்கு வாக்களித்து விட்டதால், வீரவாகு சிறைச்சாலையை நெருங்கினார். மோகன மந்திரத்தால் காவலரை மயங்கச் செய்து சிறைச் சாலைக்குள் சென்றார்.

வீரவாகு தேவரைக் கண்ட சயந்தன் முன்னமேயே கந்தக் கடவுளின் வாக்குறுதியைக் கேட்டிருந்ததால், ''இவரே அவரது தூதர்'' என்று வணங்கிக் கொண்டான். வீரவாகு தேவர் கந்தப் பெருமானின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே சயந்தன் முன் சென்றார். அத்திருநாமம் சயந்தன் காதுகளின் வழியே உள்ளம் புகுந்தது.

''சிவகுமாரராகிய கந்தவேளுக்கு நான் தம்பியும் தூதனுமாவேன்'' என்று வீரவாகுதேவர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

''எங்கள் துன்பத்தை நீக்கத் தாங்கள் வந்து விட்டீர்கள். எங்கள் சிறை வாழ்வும் இப்போதே நீங்கியது போல உணர்கிறோம்'' என்று சயந்தனும் தேவர்களும் கூறினார்கள்.

தமது தூதுப் பணியைக் கூறிய வீரவாகுதேவர், ''சிவபெருமானே ஆறு திருமுகங்களுடனும், பன்னிரண்டு திருப் புயங்களுடனும், கந்தவேள், முருகவேள் என்ற திருப்பெயர்களுடனும் உங்கள் துன்பங்களைப் போக்க வருவார். உங்கள் சிறையையும், பிரமன் குறையையும் மாய்த்து உலகங்களை யெல்லாம் இரட்சிக்கும் பொருட்டே சிவபெருமான் கந்தவேளாக எழுந்தருளியிருக்கின்றார்'' என்றார்.

'' தன்னிகர் இன்றி மேலாய்த்
தற்பர வொளியாய் யாரும்
உன்னரும் பரமாய் நின்ற
ஒருவனே முகங்கள் ஆறும்
பன்னிரு புயமுங் கொண்டு
பாலகன் போன்று கந்தன்
என்னுமோர் பெயரும் எய்தி
யாவருங் காண வந்தான்.
பங்கய முகங்கள் ஆறும்
பன்னிரு புயமுங் கொண்டே
எங்கடம் பெருமான் போந்த
ஏதுமற் றென்னை என்னில்
செங்கண்மால் உந்தி பூத்தோன்
சிறுமையும் மகவான் துன்பும்
உங்கடஞ் சிறையும் நீக்கி
உலகெலாம் அளிப்பக் கண்டாய்''

வீரவாகு கூறியதை யெல்லாம் கேட்டுச் சோர்வு நீங்கி உற்சாகம் கொண்ட தேவர்கள், ''பெருமையில் சிறந்த வீர திலகமே! நீர் வெற்றி பெறுவீராக!'' என்று அவரைத் தொழுது வாழ்த்தினார்கள். வீரவாகு தேவர் சிறைக் கூடத்திலிருந்து புறப் பட்டார்.

(தொடரும்)




இந்தப் படை பதைக்கிற வெய்யிலில் யாரால் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு கசகச வென்று புழுங்கி அவஸ்தைப்பட முடியும்? வீட்டினுள்ளே இருக்கும் போது நித்தியப்படி அணிவதற்கும் சரி, ஓர் அவசரத்துக்குக் கடைகண்ணிக்குப் போகும் போது மாற்றுடை தரித்துப் பிராணனை விட்டுக் கொண்டிராமல் கட்டிய புடவையோடு கிளம்பி விடவும் சரி, ஏற்றதான காலிகோத் வாயில் துணிகளைப் பயன்படுத்தலாம். பட்டுப் புடவைகளைப் போல் கனமானவையாயிராமல் வெய்யில் காலத்துக்கு ஏற்ப இலேசாக இருப்பதோடு இவற்றைத் துவைத்து உபயோகிப்பதும் மிக சுலபம். ஏனெனில் இவை சுருங்காத தன்மை பெற்றவை. 'நிம்மதியாகப் பெருமூச்சு விடுங்கள் — இவற்றை இஸ்திரி போட வேண்டிய அவசியமில்லை! காலிகோத்தின் தயாரிப்பான இவற்றில் பெரிய படத்தில் குமாரி ராதா அணிந்திருப்பது Cali Queen புடவை. நிறையப் பூக்களை அள்ளித் தெளித்தாற் போன்ற புடவையை உடுத்திருப்பவர் குமாரி லக்ஷ்மி. ஸ்பரிசத்துக்கு ஜார்ஜெட் போலிருக்கும் இந்தச் சேலையின் பெயர் Glamour Queen.

புடவை உதவியவர்கள்: காலிகோத், துன் பில்டிங், 175/1, மவுண்ட் ரோட், சென்னை-2

படம்: ஸ்டில்லோகிராப்.



அன்னையைப் போன்ற அழகொளி படைத்தவள்.




அப்பா, இந்த நிலையில் என்னைப் பார்க்கும் போது உங்கள் உணர்ச்சிகளை நான் அறிவேன். என்னை மன்னித்து விடுங்களப்பா!
என் மன்னிப்புக் கிடக்கட்டும். சட்டத்தின் பிடியிலே நீ இப்படிப் போய் அவசரப்பட்டுச் சிக்கிக் கொண்டிருக்கிறாயே.
அவள் எங்கே?
கதை
கௌசிகன்
சித்திரம்
ரமணி..
8
யோசித்துத்தானப்பா இந்த முடிவுக்கு வந்தேன். இன்றுள்ள நிலையில் என் விடுதலைக்கு நம்பிக்கையுண்டு. இப்படி நான் செய்யாவிடில் நிரபராதியான என்னைக் கொலையாளியாக்கி மரண தண்டனையும் வாங்கிக் கொடுத்து விடுவான் அந்த மர்ம மனிதன்...
அடுத்த ஆண்டு டாக்டராக வெளியே வர வேண்டிய நிலையிலுள்ளவன் நீ. ஒரு கொலையின் பிரேதப் பரிசோதனையின் போது உன் திட்டத்தினால் குளறுபடி ஏற்படும் என்பதைச் சிந்திக்கவே இல்லையே.
உண்மைதான். சர்க்கார் டாக்டரின் ரிப்போர்ட்டில் ஏதாவது...
அந்த ரிப்போர்ட் எப்படி இருக்குமென்று எனக்குத் தெரியும். ஏனென்றால் நானும் ஒரு டாக்டர். ஆனால் போலீசோ அந்த ரிப்போர்ட் விஷயமாக மௌனம் சாதிக்கிறது. அதன் உட்கருத்து என்ன என்பது போகப் போகத்தான் தெரியும்.
எப்படியாயினும் அப்பா, நீங்கள் மாலதியைப் பிடித்து வைத்து விடுங்கள். அவளால் எனக்கு விடுதலை உண்டு என்று ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கிறது.
ரேணுகாவின் பங்களாவில் குமாரின் தந்தை மாலதிக்கு ரகசியமாகச் சிகிச்சை அளிக்கிறார்.
ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா டாக்டர்?
நாளைக்குள் நினைவு திரும்பலாமென்று நினைக்கிறேன்.


மறுநாள் இரவு...
நான் எங்கே இருக்கிறேன்? உடம்பெல்லாம் ஏன் இப்படி ரணமாக வலிக்கிறது...
ஒன்றுமில்லை மாலதி. என் வீட்டில்தான் நீ இருக்கிறாய். படுத்துக் கொள் மெதுவாக...
நான் இங்கு எப்படி வந்தேன்?
கடைசியாகவா? அப்படியென்றால்...? 'காதல் போதை' என்ற படப்பிடிப்பில் நான் காமிராவின் முன் நடித்துக் கொண்டிருந்தேன். அதன் பிறகு... பிறகு....
நிதானமாக நினைவு படுத்திக் கொள் மாலதி. கடைசியாக நீ எங்கே, யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்?
அதன் பிறகு? நன்றாக நினைவு படுத்திக் கொள் மாலதி. கடைசியாக யாரைச் சந்தித்தாய்?
கடைசியாக... யாரை... யாரையும் அல்ல... நான் நடித்துக் கொண்டிருந்த போது...
படப்பிடிப்பு கிடக்கட்டும். குமார் உன்னை எப்போது வந்து பார்த்தான்? அதைச் சொல் மாலதி.
குமாரா...? அது யார்? அந்தப் பெயருடைய யாரையுமே எனக்குத் தெரியாது..
டாக்டர்! மாலதிக்கு மறுபடி மயக்கம் வந்து விட்டது. அவள் கூறும் அந்தப் படம் முடிந்து வெளியாகி ஓடி ஓய்ந்தும் விட்டது!
தலையில் பாய்ந்த குண்டினால் அவள் நினைவிலே பெரிய இடைவெளி ஏற்பட்டிருக்கிறது.
இந்த அதிர்ச்சி இவளை, பல வருஷங்களுக்கு முந்தைய நினைவுகளுக்குக் கொண்டு போயிருக்கிறது. ஆனால் இது நிரந்தரமானதல்ல. இந்த மறதியிலிருந்து இவள் விடுபட்டு விடுவாள்.
தொடரும்..




“பரந்த பாலைவனம், சதுப்பு நில, பொட்டல்வெளி” என்று அரசாங்க தஸ்தாவேஜிகளில் விவரிக்கப்பட்டிருக்கும் பிரதேசம் தான் பாகிஸ்தானுடன் புதிதாக இப்போது எல்லைப்புறத் தகராறு தோன்றியுள்ள கட்ச் “ரண்” பகுதி. சுமார் 9000 சதுர மைல் பரப்புள்ள சதுப்பு நிலப் பிரதேசம். கடல் மட்டத்துக்கு 600 அடி தாழ்வாக இருப்பதால் மழைக் காலங்களில் கடல் நீரில் இப்பகுதி அமிழ்ந்து கிடக்கும். கோடைக்காலம் வரும்போது தண்ணீர் வடியும். மேட்டுப் பகுதிகள் பரவலாகத் திட்டுத் திட்டாகக் காணப்படும். சின்னஞ் சிறு பாலை நிலப் புதர்கள் மட்டுமே வளரும். குடிதண்ணீர் கூடக் கிடைப்பது அரிது.

இந்தியப் பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் கட்ச் சமஸ்தானத்தைச் சேர்ந்திருந்த இந்தப் பகுதி சுதேச மன்னர்களில் ஒருவரான மகாராவ் மன்னரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கட்ச் சமஸ்தானமும் மற்ற சமஸ்தானங்களைப் போலவே அந்தந்தப் பிராந்திய ‘ரெஸிடெண்டுகள்’ மூலம் வைஸ்ராயின் ஆதிபத்தியத்துக்கு உட்பட்டிருந்தது. இதற்கு எல்லைகளாகச் சிந்து மாகாணமும், இதர ராஜபுதன சமஸ்தானங்களும் அமைந்திருந்ததால் எல்லைகளை எவ்வித சச்சரவுக்குமிடமின்றி நிர்ணயித்துக் கொள்வதில் எல்லோருமே கவனம் செலுத்தி வந்துள்ளனர். பிரிட்டிஷ் அரசாட்சியின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்ததால் எல்லைகள் நிர்ணயித்துக்கொள்வதில் எவ்வித கஷ்டமும் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை.

சிந்து மாகாணத்தின் எல்லைகளை வரையறை செய்கையில், “கிழக்கே மார்வார், ஜெய்சால்மீர், பஹவல்பூர் ஆகிய சமஸ்தானங்களும் வடக்கே பஞ்சாப் மாகாணத்தின் ஒரு சிறு முனையும் கச்சி என்று வழங்கும் காலட் சமஸ்தானத்தின் மணற்பாங்கான சமவெளியும், மேற்கே கிர்தாரி மலை, ஹாப் நதியும் தெற்கே அராபியக் கடலும், கட்ச் ரண் பகுதியும் எல்லைகளாக உள்ள நிலப்பரப்பு என்று 1907ம் ஆண்டு சிந்து மாகாண கெஜட்டீர் என்ற அரசாங்கப் பிரசுரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இதே எல்லை வரம்புகள் மீண்டும் மீண்டும் 1908, 1909, 1910, 1914 ஆண்டுப் பிரசுரங்களில் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. 1908ம் ஆண்டில் சிந்து மாகாணத்துக்கும் கட்ச் சமஸ்தானத்துக்கும் இடையே சிறிய சச்சரவு ஏற்பட்டதென்றும், 1914ம் ஆண்டு

பாகிஸ்தானின் பேராசை: இந்தியப் பத்திரிகையொன்றில் வெளியாகியுள்ள தேசப்படம் இது. கட்ச் - சிந்து ராஜ்ய எல்லைக்கோடும் பாகிஸ்தான் கோரிக்கைப்படி, சச்சரவுக்குட்பட்ட பிரதேசமும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் நியாயமான எல்லைக்கோடு கஞ்சர்கோட்டுக்கு வடக்கேயே செல்கிறது.



பிப்ரவரியில் இந்திய அரசாங்கத்தின் தலையீட்டின் விளைவாக இந்தத் தகராறு தீர்க்கப்பட்டு எல்லையோரங்களில் எல்லைக் கற்கள்கூட நடப்பட்டன என்றும் ஆதாரங்கள் உள்ளன.

இதிலிருந்து கட்ச் ரன் பகுதி முழுவதும் சிந்து மாகாணத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளது என்பதும், இப்பகுதியின் எந்தப் பாகமும் சிந்து மாகாணத்தில் அடங்கியதல்ல என்பதும் 1909ம் ஆண்டுக்கு முன்னாலேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்று தெளிவாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து பல வருஷங்களாக இதே எல்லைகளை ஊர்ஜிதம் செய்து வெளியிடப்பட்டு வந்த தேசப் படங்களை சமஸ்தானங்களாகட்டும், சிந்து மாகாண அரசாங்கமாகட்டும் ஆட்சேபிக்கவில்லை; அங்கீகரித்தே வந்துள்ளன.

பிரிவினையின்படி சிந்து மாகாணம் முழுவதும் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள் வசிக்கின்றனர் என்ற காரணத்தினால் பாகிஸ்தானத்துக்குச் சேர்ந்து விட்டது. கட்ச் ரன் பகுதி மற்ற சமஸ்தானங்களைப் போல இந்தியாவுடன் காலப் போக்கில் இணைந்து விட்டது. இதன் விளைவாக கட்ச் சமஸ்தானத்துக்கும் சிந்து மாகாணத்துக்கும் இடையே பல ஆண்டுகளாக இருந்து வந்த உள்நாட்டு மாகாண எல்லை, இரண்டு நாட்டுக்குமிடையே உள்ள தேசிய எல்லையாக மாறி விட்டது. எல்லைகள் இருந்த இடங்களிலோ, எல்லைக் கோடு செல்லும் மார்க்கங்களிலோ, திசைகளிலோ எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

1762ம் ஆண்டில் சிந்துப் பிரதேசத்தை ஆண்டுவந்த யாரோ ஒரு மன்னன் ரன் பகுதியின் மீது படையெடுத்து வெற்றி கொண்டானாம். அதனால் 1948ம் ஆண்டுக்குப் பிறகும் பாகிஸ்தானுக்கு இப் பிரதேசத்தில் உரிமை உண்டாம்! 1762ம் ஆண்டு சிற்றரசின் வாரிசாக இப்போதைய பாகிஸ்தான் உரிமை கொண்டாடுவது மொஹஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிகம்கூட ஐயாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த பாகிஸ்தான் நாகரிகம்தான் என்று சமீபத்தில் பெருமை யடித்துக் கொண்டதற்குத்தான் ஒப்பிடலாம். அந்தப் பதினெட்டாம் நூற்றாண்டு மன்னனின் பிற்காலத்தில் இப்பகுதியை ரன் அரசர் மீண்டும் கைப்பற்றிக் கொண்டதை பாகிஸ்தான் ஏனோ மறந்து விட்டது.


1875ம் ஆண்டில் ரன் பகுதியிலுள்ள தர்மசாலா என்னுமிடத்தில் சிந்து மாகாணத்தின் எல்லை இருக்கிறதென்று யாரோ ஓர் அதிகாரி எங்கோ கூறியிருக்கிறாராம். இது ஒரு வாதம். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆதிக்க காலம் முழுவதும் கட்ச் தர்பார்தான் ரன் பகுதி முழுவதிலும் ஆட்சி புரிந்தது என்பதைச் சிந்து அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

ரன் பகுதி கடல் நீரில் அமிழ்ந்த நிலப்பரப்பு; அல்லது அதை ஒரு பெரிய ஏரி எனலாம். சர்வதேசச் சட்டப்படி எல்லைக்கோடு இப்பகுதியின் நடு மையத்தில்தான் இருக்க வேண்டும். இப்படி ஒரு வாதம் எழுந்தது. ஆனால் இதுவும் தவறு. ரன் பகுதி கடல் நீர் நிறைந்த பகுதியும் அல்ல; ஏரியும் அல்ல. சதுப்பு நிலச் சமவெளி. நீர் நிலைகள், நதிகள், கால்வாய்கள் முதலியவை எல்லைகளாக உள்ள இடங்களில் மட்டுமே நடுமையப் பகுதியில் எல்லைக்கோடு அமைய வேண்டும் என்ற சர்வதேசச் சட்டப்படி எல்லைக் கோட்டை இம்மாதிரி சமவெளிப் பிரதேசங்களில் அமைக்க முடியாது. இவ்வளவு ஆண்டுகளாக எல்லை எப்படி இருந்ததோ அப்படித்தான் இனியும் இருத்தல் வேண்டும்.

சச்சரவு இல்லாத இடங்களிலும் சச்சரவு இருப்பதாகச் சண்டைக்குக் கால் பிறாண்டுவது பாகிஸ்தான் சுபாவம் என்றே எண்ண வேண்டும். புது நண்பனாகிய சீனாவின் தூண்டுதலும் பகையை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

எம். எஸ். சிவஸ்வாமி





சீடப் பிள்ளைகள் சபேசனிடம் நேற்றுப் போலவே தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். சபேசன் திணறினான். அவனது கன்னங்கள் புளித்தன. மூக்கில் ரத்தம் ஒழுகியது. மார்பு விண்ணெனப் புடைத்து வீங்கியது. சுவரில் சாய்ந்தான்; தரையில் குப்புற விழுந்தான். தூக்கி நிறுத்தப்பட்டான். மீண்டும் சுழன்று சாய்ந்து கீழே உருண்டு புரண்டான்.

அவனுக்கு 'ஓ'வென்று அலற வேண்டும் போல் ஆகி விட்டது. தன் பலம் அனைத்தையும் ஒன்று திரட்டிக் கொண்டு எழுந்து, தன்னைக் குத்த வந்த ஓர் இளைஞனின் கழுத்துப் பிடரியில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

கொண்டவன் போல் மெல்லத் தலையசைத்து, ''இப்படி நடக்குமென்று நான் நேற்றே நினைத்தேன்; அது சரியாகி விட்டது!'' என்றாள் வேதனை செறிந்த குரலில்.

''என்ன நடந்தது?...... ஒன்றும் நடக்க வில்லையே!...'' என்று மீண்டும் அதே அசட்டுச் சிரிப்புடன் முகத்தைத் துடைத்துக் கொண்டான் சபேசன்.

கண் கலங்கி விட்ட வேதா, சில விநாடிகள் பேசாதிருந்துவிட்டுப் பின் தணிந்த குரலில், ''இப்போது எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

தலை குனிந்து மௌனமாயிருந்தான் சபேசன்.

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம்

இருபத்திரண்டு

புரியாத கேள்வி

''டாய், சோமாறி! ஃபௌல் அடி அடிக்காதே! ராங் ஷாட்டிலே பாய்ன்ட் பண்ணாதே!'' என்று உளறிக்கொண்டே சுவரில் போய் மடாரெனச் சாய்ந்தான் அந்த இளைஞன். இதைக் கண்ட மற்ற சீடப்பிள்ளைகள், ''பையன் விடைச்சுக்கிட்டான் டோய்! ஜகா வாங்குங்கடா!'' என்றவாறு மிரட்சியுடன் பின்னால் நகர்ந்து கொண்டு அவனை வெறித்துப் பார்த்தனர்.

சபேசன் சடாரென வெளியே பாய்ந்தான். இனியும் அங்கு இருந்தால் அந்த முரட்டு இளைஞர்கள் தன்னை அடித்து நொறுக்கிக் கொன்றே போட்டு விடுவார்கள் என்று பயந்து தெருவில் இறங்கி ஓடலானான். அப்படி ஓடிய வேகத்தில் யார்மீதோ மோதிக்கொண்டவன்போல் திடுக்குற்று நின்றான்.

''எங்கே, இத்தனை வேகமாக ஓடுகிறீர்கள், இந்த நேரத்தில்?''

அழுது வடிந்த தெரு விளக்கின் மங்கலான ஒளியில் வியப்பும் திகைப்புமாகக் கையிலொரு மண்ணெண்ணெய்ச் சீசாவுடன் நின்று கொண்டிருந்த வேதாவை நிமிர்ந்து பார்த்த சபேசனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. திக்கித் திணறியபடி பின்னால் நகர்ந்த அவன், ''ஓடுகிறேனா?...... ஆமாம்;...... ஒன்றுமில்லை...'' என்று அசட்டுச் சிரிப்புடன் குழறினான்.

அவனை ஒரு கணம் கூர்ந்து நோக்கிய வேதா, எதையோ புரிந்து

''உங்களுக்கு பயில்வான் வீட்டில் படுக்கப் பிரியமில்லை, அப்படித்தானே?''

இதற்கும் அவன் பதில் சொல்லாமலே இருந்தான்.

''அங்கு படுக்க வேண்டாம் என்று யாராவது ஏதாவது சொன்னார்களா?''

அவன் வாய் திறக்கவே இல்லை.

''சரி; இப்போது எங்கேதான் போகிறீர்கள்? அதையாவது சொல்லுங்கள்!''

'உனக்கு ஏன் இந்த வீண் கேள்விகளெல்லாம்?' என்று ஆத்திரத்துடன் கேட்க வாயெடுத்த சபேசன், அவளது ஒளி பொருந்திய ஈரக் கண்களைப் பார்த்ததும் சட்டென்று தன் எரிச்சலை அடக்கிக்கொண்டு, ''எங்கே போகிறேன் என்பது எனக்கே தெரியவில்லை'' என்றான் அடைத்த குரலில்.

ஒரு கணம் ஏதோ யோசித்த வேதா, ''அந்த விஷயத்தைப் பொழுது விடிந்ததும் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்; இப்போது என்னோடுவாருங்கள்!'' என்றவாறு தன் வீட்டை நோக்கி நடக்க முற்பட்டாள்.

அவளை வெறித்துப் பார்த்த சபேசன், ''நானா?..... எங்கே?....'' என்று குழறிக் கேட்டான்.

''இது இரவு நேரம். நீங்கள் தூங்க வேண்டாமா?''

''உன் வீட்டிலா?''

''ஆமாம்.''

''தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நான் அங்கு வருவதற்கில்லை.''

ஏன் அப்படி?''

''உன் அம்மாவின் கோபத்துக்கு என்னை உள்ளாக்க வேண்டாம் என்கிறேன்'' என்றான் சபேசன்.

''நச்சி அண்ணா உங்களிடம் ஏதாவது சொன்னாரா?''

''இல்லை. நானே சில விஷயங்களை ஊகித்துக் கொண்டேன். அவற்றில் நியாயம் இருக்கிறது.''

''உங்கள் ஊகம் சரிதான்'' என்று புன்னகை பூத்தாள் வேதா. ''ஆனால் நான் இப்போது எங்கள் வீட்டுக்கு வருமாறு உங்களை அழைக்கவில்லை. பேசாமல் என்னோடு வாருங்கள்.''

''உன் அம்மா இருக்கிறாளா?'' என்று திகிலுடன் வினவினான் சபேசன்.

''பக்கத்துத் தெருவில் நடக்கும் ஏதோ ஒரு விசேஷத்துக்காகப் போய் இருக்கிறாள். திரும்பி வர நேரமாகும். வீட்டில் விளக்குக்கு எண்ணெய் இல்லை. வாங்கிப் போவதற்காக நான் வந்தேன்'' என்று சொல்லிக் கொண்டே மேலே நடந்தாள் வேதா.

சபேசனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தம்பையாவின் வீட்டில் அவனது சிடப்பிள்ளைகளுடைய சித்திரவதைகளைத் தாங்க முடியாமல் ஓடி வந்து விட்டானே தவிர இப்போது எங்கு போவதென்றும் தோன்றவில்லை. கடந்து போன சில இரவு வேளைகளில் படுக்க இடமின்றிப் பட்ட பயங்கர அநுபவங்களை எண்ணிப்





இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசைகொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பனிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்ட்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர். 10031, பம்பாய்.



K. 6

COUPON

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....

பார்த்துக் குழம்பித் தவித்த அவன், பதிலேதும் சொல்லாமல் அவளைப் பின்தொடர்ந்தான்.

வேதா நேராகத் தன் வீட்டுக்குத் தான் போனாள். வீடு இருண்டு கிடந்தது. சபேசன் வேலிப் படலோரம் தயங்கி நின்றான். அவள் அவனைத் திரும்பிப் பார்த்து உள்ளே வருமாறு கையசைத்துவிட்டு மாட்டுக் கொட்டகையருகிலிருந்த வைக்கோற்போரை நோக்கி நடந்தாள்.

''இன்றிரவு இங்கே இந்த வைக்கோற் போரின்மீது படுத்துத் தூங்கி விட்டு, விடியற்காலே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எழுந்து போய் விடுங்கள்.''

''உன் அம்மாவுக்குத் தெரியாமலா?''

''ஆமாம்.''

''இங்கே அவள் மாட்டுக்கு வைக்கோல் எடுக்க வந்தால்?.....''

''அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்.''

சபேசன் அவள் முகத்தை ஊடுருவி நோக்கினான். வேதாவின் அழகிய வதனத்தில் ஓர் இளநகை தவழ்ந்தது. அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

''இன்னடி பொண்ணே! ஊட்டை இருட்டிப் போட்டுட்டு எங்கேடி போயிட்டே?'' என்று கன்னியம்மாளின் ஓசையான குரல் கேட்டுச் சட்டெனத் திரும்பிய வேதா, ''இதோ, இருக்கிறேம்மா! மாட்டுக்கு வைக்கோல் போடறேன்.....'' என்றவாறு அங்கிருந்து ஓடினாள்.

பயத்தால் நெஞ்சு படபடவென அடித்துக் கொள்ளப் பிரமித்து நின்று கொண்டிருந்தான் சபேசன். வைக்கோற் போரின்மேல் படுத்துத் தூங்க வேண்டுமே என்பதற்காக அவன் கவலைப்பட வில்லை; அப்படித் தூங்கும் போது கன்னியம்மாள் வந்து பார்த்து விட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதை நினைத்தே குலைநடுங்கினான்.

தன் தலைவிதியை நினைத்து நெஞ்சுக்குள் புலம்பிக் கொண்டே வைக்கோற்போரின் மீது ஓசையின்றிச் சாய்ந்தான். வேதாவின் புன்னகை பூசிய எழில் முகம் அவன் மனத் திரையில் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

அவளை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவளது பேச்சும், செயலும், பார்வையும், சிரிப்பும் அவனுக்குப் புதிராக இருந்தன.

வைக்கோலின் சுணை உடம்பில் ஒருவித நமைச்சலை ஏற்படுத்தவே மெல்லப் புரண்டு சாய்ந்தான். நிம்மதியான நெடுந் துயிலுக்கு அது ஏற்ற இடம் அல்ல என்பது அவன் அறிந்ததே. ஆனால் இன்றைக்கு இந்த இடமே சிலாக்கியமானது என்று எண்ணினான். காரணம், பொழுது விடிவது தெரியாமல் தன்னை மீறிய நித்திரையில் ஆழ்ந்துவிடக் கூடாது அல்லவா? ஆயினும் இதைவிட மோசமான இடங்களில் படுத்துத் தூங்கிப் பழக்கப்பட்டிருந்த அவனுக்கு இந்த வைக்கோல் படுக்கை வெகு சுகமாகவே இருந்தது. நேரமாக ஆக வைக்கோலின் சுணைக் குத்தல் அடங்கி உடம்பிலே ஒருவித கதகதப்பு ஏறியது. அவன் தூக்கம் வந்ததே தெரியாமல் தூங்கிப் போனான்.

மறு நாள் இரவு எட்டு மணி. ஒரு ஹோட்டலில் வயிற்றை நிறைத்துக் கொண்டு வெளியே வந்த சபேசனுக்கு வழக்கம்போல் 'எங்கே படுப்பது' என்ற கவலை தலைதூக்கியது. அன்று அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் — அப்போது மணி நான்கு என்று தெரியாமலே — கன்னியம்மாளின் வீட்டு வைக்கோற்போர் படுக்கையிலிருந்து அவன் எழுந்து ஓடி வந்து விட்டதால் உடல் வெகுவாகச் சோர்ந்து, வழக்கத்துக்கு முன்னதாகவே தூக்கம் வருவது போலவும் இருந்தது. சற்று நேரம் அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்துவிட்டு, ஏதோ ஒரு குருட்டுத்தனமான துணிச்சலுடன் நுங்கம்பாக்கம் ஏரி வட்டாரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தம்பையாவின் வீட்டுத் திண்ணையில் போய்ப் படுத்து விடலாமா என்று ஓர் எண்ணம். ஆனால் நேற்றிரவு அங்கு படுக்காமல் இன்று போனால் அவன் என்ன சொல்வானோ? இதுதவிர அவனுடைய சீடப்பிள்ளைகளிடம் நேற்று தன் கைவரிசையைக் காட்டி விட்டதால் இன்று அவர்கள் அவனைச் சும்மா விட மாட்டார்கள். எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு தங்கள் வஞ்சத்தை விளையாட்டுச் சாக்கிலேயே தீர்த்துக் கொள்வார்கள். ஆகவே, இனி மறந்தும்கூட அந்த வீட்டுப்பக்கம் அவன் தலை காட்டக் கூடாது. அப்படியானால் இன்றிரவு எங்கே படுப்பது? நேற்றுப் போல் கன்னியம்மாளின் வீட்டுப் புறக்கடைக்குப் போய் வைக்கோற் போரின்மேல் படுத்துத் தூங்கி விட்டு விடிவதற்குமுன் எழுந்து ஓடி வந்து விடலாமா?..... ஆனால் அதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. நேற்றுக்



''நீண்ட காலத்துக்கு முன்பு ஒரு ஹாஸ்ய எழுத்தாளர் எழுதிய ஏதோ ஒன்று ரொம்ப வும் சிரிக்க வைக்கும்படியாக இருந்தது: ஏன், அது அவர் மனைவியைக் கூடச் சிரிக்க வைத்து விட்டது... கதை முடிந்தது!''

கன்னியம்மாளுக்குத் தெரியாமல் வேதா அவனைக் கண்காணித்துக் கொண்டது போல் இன்றும் செய்வாளா? அவன் அங்கு படுக்க வரும் விஷயம் தெரிந்திருந்தால்தானே அவனுக்குப் பாது காப்புக் கொடுக்க அவளால் இயலும்? இன்றிரவும் வருவதாக அவளிடம் அவன் சொல்லவில்லையே!....

பத்து மணிக்கு மேல் ஆகி விட்டதால் அந்தக் குடிசைகள் வட்டாரத்தின் குறுகலான இருண்ட தெருக்களெல்லாம் ஜனநடமாட்டம் அடங்கி வெறிச்சோடிக் கிடந்தன. உடல் களைத்து மனம் சோர்ந்து, கன்னியம்மாளின் வீட்டெதிரே வேலியோரம் வந்து நின்றான் சபேசன்.

வீட்டில் விளக்கு அணைக்கப்பட்டு எங்கும் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. தூக்க போதையால் ஒருவிதத் துணிவு பெற்ற அவன், வேலிப்படலை ஓசையின்றித் திறந்துகொண்டு வைக்கோற்போர் இருந்த இடத்தை நோக்கி மெல்ல நடந்து சென்று நேற்றிரவு படுத்த இடத்திலேயே சுருண்டு படுத்துக் கொண்டான்.

தூக்கம் கண்களைத் தழுவ முயன்ற சமயம், வைக்கோற்போரின் மறு பக்கத்தில் யாரோ வைக்கோல் பிடுங்கும் சப்தம் கேட்டுத் திடுக்குற்றுக் கண் விழித்தான். கன்னியம்மாள் வந்து மாட்டுக்கு வைக்கோல் பிடுங்குகிறாள் போலும்! பீதியால் அவன் உடல் கிடுகிடுவென நடுங்க ஆரம்பித்தது. மூச்சுக்கூட விட முடியாமல் திக்கித் திணறிய அவன், வைக்கோலைத் தன் மேல் வாரிப் போட்டுக் கொண்டு மறைந்து கொள்ளலாமாவென ஒரு கணம் எண்ணினான். அப்படிச் செய்தால் அந்தச் சப்தத்தைக் கேட்டு அவள் இந்தப் பக்கம் வந்து விடுவாளோ என்று அஞ்சி அப்படியே சவம்போல் சுருண்டு கிடந்தான்.

சற்று நேரம் கழித்து வைக்கோல் பிடுங்கும் சப்தம் ஓய்ந்து, மாட்டுக் கொட்டகையில் அதைப் பிரித்து உதறிப் போடும் ஒலி கேட்டது. போன உயிர் திரும்பி வரப்பெற்றவன்போல் மெல்ல எழுந்து நின்றான் சபேசன். சற்றைக்கெல்லாம் அந்தச் சத்தமும் அடங்கி விட்டது. இதற்கு மேல் அங்கு ஒரு விநாடியும் இருக்கக் கூடாது என்று தீர்மானித்தவனாய் வெளியே ஓடக் காலெடுத்த சமயம், ''யார் அங்கே?'' என்ற குரல் கேட்டு வெலவெலத்து நின்று விட்டான் அவன்.

''ஓ........ நீங்களா!'' என்றவாறு அவனருகில் வந்து நின்ற வேதா, குறும்புப் புன்னகையுடன் அவனைக் கூர்ந்து நோக்கி, ''இன்னும் தூங்கவில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே அவனுக்குப் பக்கத்தில் வைக்கோற் போரின்மேல் ஒயிலாகச் சாய்ந்தாள்.

சபேசனுக்கு ஏற்பட்ட பயமும் படபடப்பும் அடங்கவில்லை. பிரமை பிடித்தவன் மாதிரி அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''நல்ல வேளை! என் அம்மா, மாட்டுக்கு வைக்கோல் பிடுங்கிப் போடுவதற்காக எழுந்தாள்; ஏதோ ஒரு சந்தேகத்தில், அவளைத் தூங்கச் சொல்லி விட்டு நான் எழுந்து வந்தேன். அப்படி வராதிருந்தால் இந்நேரம்......'' என்று வாக்கியத்தை முடிக்காமல் இழுத்து நிறுத்திய வேதா, வீணையை மெல்ல வருடினாற்போல் சிரித்தாள். ''இன்றைக்கு இங்கு வருவீர்கள் என்று நேற்றே என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது?.... சொன்னால் வாய் வெந்து விடுமா என்ன?''

சபேசன் அவளைப் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தான். இன்னமும் அதிர்ச்சி நீங்காதவன்போல் சுற்றுமுற்றும் பார்த்து ''உன் அம்மா?'' என்று குழறினான்.

''தூங்குகிறாளா, விழித்துக்கொண்டிருக்கிறாளா என்று கேட்கிறீர்களா? அதோ, உற்றுக் கேளுங்கள்; வானம் குமுறுகிறது!''

வானம் குமுறுவது போல்தான் கன்னியம்மாளின் குறட்டை ஒலி கேட்டது!

சிரஞ்சீவிக் கதைகள்...

1. கிருஷ்ணன் — ருக்மிணி



ருக்மிணி விதர்ப்பநாட்டு இளவரசி. விருப்பத்திற்கு விரோதமாக அவளை சிசுபாலனுக்கு மணம்முடிக்க ஏற்பாடாகிறது. மனமுடைந்து அவள் கிருஷ்ணனுக்கு எழுதுகிறாள்.




உடனே கிருஷ்ணன் ரதத்தில் விதர்ப்ப நாட்டுத் தலைநகரான குண்டினபுரம் நோக்கி விரைகிறான்.




குண்டினபுரத்தில், சோக உள்ளத்தோடு, ருக்மிணி பார்வதி கோவிலுக்குச் சென்று வழிபடுகிறாள்.



கோவிலை விட்டு வெளியே வந்த அவள் ரதத்தையும், கிருஷ்ணனையும் காண்கிறாள். அளவில்லா ஆனந்தம் அடைகிறாள்.



நீட்டிய கரங்களுடன் ரதம் நோக்கி ஓடுகிறாள். தோழிகள் ஆச்சரியத்தில் ஆழ்கின்றனர். ருக்மிணியின் கரங்களைப்பற்றி கிருஷ்ணன் அவளை ரதத்தில் ஏற்றிக்கொள்கிறான்.




ரதம் துவாரகை நோக்கிப் பறக்கிறது. ருக்மிணியின் தமையன் ருக்மிக்கு ஆத்திரம். படைகளுடன் பின்தொடர்கிறான். ஆனால் பலராமன் வந்து ருக்மியைத் தோற்கடிக்கிறான்.



சிறந்ததையே வற்புறுத்துகின்றவர்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையை விரும்புவது ஏன் ?

இந்தியாவிலே அன்றாடம் 7 கோடியே 50 லட்சம் கோப்பை ப்ரூக் பாண்ட் தேனீரை சனங்கள் அருந்துகின்றனர். அவர்களில் எவரிடம் கேட்டாலும் ப்ரூக் பாண்ட் தேயிலை நல்ல ருசியுடன் முழுத் திருப்தி அளிக்கிறது என்றே கூறுவார்கள். ஆனால் அதன் காரணத்தை அவர்களால் சொல்ல முடியாமற் போகலாம். ப்ரூக் பாண்ட் கம்பெனியாரும் சிறந்ததையே வற்புறுத்துகின்றவர்கள். அதனால் இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த தேயிலைகளைத் தேர்ந்தெடுத்து, 60 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தால் கலவன் செய்வதிலே முதன்மையான அவர்கள், தங்கள் திறமை மூலம் சிறந்த தேயிலைகளைக் கலவன் செய்கின்றனர். பிறகு, கலவன்களை பிரதி வாரம் உங்கள் வழக்கமான கடை உள்பட இந்தியாவெங்குமுள்ள 6,00,000 கடைகளுக்கு அனுப்புகின்றனர். இதனாலேயே, முற்றிலும் புதிய தன்மையுடனும் நறுமணத்துடனும் நீங்கள் தேனீர் அருந்தி அனுபவிக்க, ப்ரூக் பாண்ட் தேயிலை உத்தரவாதம் அளிக்கின்றது.

உங்களைப்போல் — வாழ்க்கையில் நல்லவைகளிலே இன்பம் துய்ப்பவர்கள் ப்ரூக் பாண்ட் தேயிலையை விரும்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை !



JWT BB 2128

அவன் சற்றே பயம் தெளிந்தான். ஆயினும் அந்தப் பெண் தன் அருகில் நெருங்கிச் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு மறுபடியும் அவனுள் ஒருவித பரபரப்பும் திகிலும் ஏற்பட்டன. "நான்..... நான்..... இங்கிருந்து போய் விடுகிறேன்...." என்றவாறு பின்னால் நகர்ந்தான்.

"போகப் போகிறீர்களா?... இந்த நேரத்தில் எங்கே போவீர்கள்?"

"சும்மா நடந்து கொண்டிருப்பேன். நடந்து கொண்டேயிருந்தால் பொழுது விடிந்து விடும்."

அவள் அவனை வேதனை செறிந்த வியப்புடன் நோக்கினாள். "அப்படியானால் இங்கு ஏன் வந்தீர்களாம்?"

'தூங்குவதற்காக வந்தேன்' என்று சொல்ல அவனுக்கு வெட்கமாக இருந்தது. வேறு என்ன சொல்லலாம் என்று யோசித்தபடி தன் மோவாயைத் தடவினான்.

"என்னைப் பார்ப்பதற்காக வந்தீர்கள்; அப்படித்தானே?" — அவன் அருகில் இன்னுங் கொஞ்சம் உருண்டு சாய்ந்துகொண்டு நாணம் துவண்ட குரலில் இவ்வாறு கேட்டாள் வேதா.

அவனுக்குச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது. கேலியாக! உடனே அதை அடக்கிக் கொண்டு மௌனமாகத் தலை குனிந்தான்.

ஒரு வைக்கோல் தாளை விரல் நுனியில் சுழற்றியபடி விழியசைக்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்த அவள், "ஆமாம், உங்களிடம் ஒன்று கேட்பேன். ஒளிக்காமல் பதில் சொல்வீர்களா?" என்றாள்.

அவன் அவளை நிமிர்ந்து நோக்கினான். பார்வையைக் கீழே தாழ்த்திக் கொண்டு சற்று நேரம் பேசாதிருந்த வேதா, "அன்றொரு நாள் கேட்க நினைத்த அதே கேள்வியைத்தான் இப்போது கேட்கப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே வெடுக்கெனத் தலை தூக்கி, "என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றாள் ஒருவித உள்ளார்ந்த படபடப்புடன். மீண்டும் அவள், தான் சொல்ல நினைத்ததை அத்தனை சரியான சொற்களில் வெளிப்படுத்தவில்லையென அதிருப்தியுற்றவள் போல் தலையசைத்துக் கொண்டு அதே இனிய படபடப்பான குரலில் வினவினாள்: "இல்லை..... என்னைப் பற்றி நீங்கள் என்ன புரிந்து கொண்டிருக்கிறீர்கள்?"

தன் செவிகளால் இது வரை தீண்டிப் பழக்கமில்லாத புது மொழியொன்றைக் கேட்டவன் போல் திகைத்து விழித்த சபேசன், பள்ளி வகுப்பில் ஒரு மக்கு மாணவன் தனக்குத் தெரியாத கேள்வியைக் கேட்கும் ஆசிரியையைப் பரிதாபமாக நோக்குவது மாதிரி அவளைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "உன்னைப் பற்றியா? நான் நினைப்பதா? இல்லை, நான் புரிந்து கொண்டிருப்பதா?...ம்... வேண்டுமானால் கொஞ்சம் யோசித்து நாளை பதில் சொல்கிறேனே!" என்று ஏதோ வாயில் வந்ததை உளறினான்.

வேதாவுக்கு ஒரே வெட்கமாகி விட்டது. வைக்கோற் போரில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அப்படியும் இப்படியுமாக நெளிந்தாள்.

'வானக் குமுறல் ஒலி' இப்போது கேட்க வில்லை. இதைக் கவனித்து விட்டவள் போல் சட்டென்று எழுந்த வேதா, "சரி; நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். பயமின்றி நிம்மதியாகத் தூங்குங்கள்" என்றவாறு அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்.

சந்தனக் குழம்பில் விழுந்து எழுந்தவன் போன்று சில்லிட்டு விறைத்து நின்றுகொண்டிருந்த சபேசன், வைக்கோற் போதின்மீது மெல்லச் சாய்ந்தான். அவன் மனத்தில், வேதா கேட்ட கேள்விகளே மின்னல் வட்டமாகச் சுழன்று கொண்டிருந்தன. அவை சுழலச் சுழல அவற்றின் அந்தப் புரியாத புது மொழிச் சொற்கள் அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து விடும்போல் தோன்றியது. ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ள மறுப்பவன் மாதிரி கண்களை இறுக மூடிக் கொண்டான்.

எங்கோ தொலைதூரத்தில் ஏழெட்டு நாய்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு குரைத்து ஓலமிடும் சத்தம் கேட்டது. அவன் உறங்கிப் போனான்.

"ஏண்டா, கஸ்மாலம்! யாரைக் கேட்டுக்கிட்டுடா இங்கே தூங்க வந்தே? இது இன்னா, சத்திரம் சாவடின்னு நினைச்சுக்கிட்டியா?"

இடியொலி போன்ற இந்தக் குரல் கேட்டுத் திடுக்குற்றுக் கண் விழித்து எழுந்தான் சபேசன். அவன் எதிரில் காளி தேவியே பிரசன்னமானாற் போல் கோபாவேசமாக நின்றுகொண்டிருந்தாள் கன்னியம்மாள். பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டிருந்தது!

"எங்கே அந்தச் சோமாறிப் பையன்? எல்லாம் அவன் நடத்துகிற கூத்தா இது?" என்று மீண்டும் இரைந்து கூவினாள் கன்னியம்மாள்.

அப்போதுதான் தூங்கி எழுந்த முகத்துடன் கண்களை நிமிண்டியவாறு புறக்கடை வாசல் வழியாக அந்த வைக்கோற்போரை நோக்கி வந்து கொண்டிருந்தான் நச்சி. **(தொடரும்)**



நாத உபாசகரின் நூற்றாண்டு

"பேகடை ராகத்துக்கு என்ன நிஷாதம்?" என்று ஒரு மகாவித்துவான் மற்றொரு மகா வித்துவானைக் கேட்க, அவர் "பேகடை நிஷாதம்தான்" என்று பதிலளித்தார். கேள்வி கேட்ட வித்துவான் அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார். விடை சொன்னவர் மைசூர் ஸ்ரீ வாசுதேவாச்சார் அவர்கள். ஒவ்வொரு ராகத்தின் ஒவ்வொரு ஸ்வரத்தையும் அப்படி நிர்ணயம் செய்து, ராகங்களின் தனித்தன்மையைப் போற்றியவர் வாசுதேவாச்சார் அவர்கள்.

தம்பூராவை மீட்டிக் கொண்டே அரியக்குடியிடம் தமது பேச்சைத் தொடர்ந்தார் வாசுதேவாச்சார். "இப்பொழுது என் குருவின் ஞாபகம் வருகிறது. பேகடை சுப்பிரமணிய ஐயர் இந்த ராகத்தை மணிக்கணக்காக ஆலாபனம் செய்து, தானம் பாடி, பல்லவிகளையும், கிருதிகளையும் பாடுவார். அதில் ஏதோ எனக்குத் தெரிந்த வரை பாடுகிறேன்" என்றார் ஆச்சார்.

அதன்பின் பேகடை ஆலாபனை ஆரம்பமாயிற்று. மந்தர ஸ்தாயிக்கு மாத்திரம் முக்கால் மணியாயிற்று. பிறகு, மத்ய ஸ்தாயியில் சஞ்சாரம் செய்து, தானம் பாடி, 'கைலாஸபதே பசுபதே உமாபதே நமோஸ்துதே' என்ற பல்லவியைப் பாடி அதன் பின் கல்பனாஸ்வரமும் பாடி முடித்தார். அடுத்து, தாமே பேகடையில் கவனம் செய்த "மனஸா, வசஸா, சிரஸா" என்ற கிருதியைப் பாடினார். "இந்த ராகம் என் குருவுக்கு ஜீவநாடி போன்றது. 'வாசு, உனக்கு 'மரசிட் இண்டே' என்ற பேகட வர்ணத்தையே முதல் பாடமாக ஆரம்பிக்கிறேன்" என்றுதான் என் குரு எனக்குச் சங்கீத அப்பியாசம் தொடங்கினார்" என்று கூறிய ஆச்சார் அவ்வர்ணத்தைப் பாடி, பிறகு பூச்சி ஐயங்காரின் "அனுதினமு" என்ற பேகட ராகக் கிருதியையும் பாடினார். "அடடா, என்ன பேகடை!" என்று ஐயங்கார் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கினார்.

வாசுதேவாச்சாருடன் ஏழு வருஷங்கள் தொடர்ந்து பழகும் பாக்கியம் பெற்றவன் நான். அந்த ஏழாண்டுகளில் இம்மாதிரி அநேக ரஸமான சம்பவங்கள் நிகழ்ந்தன.


வாசுதேவாச்சார் 1865ம் வருஷம் மே மாதம் 28ம் தேதி, மைசூர் சம்ஸ்தானத்தில் பௌராணிகராயிருந்த சுப்பிரமணியாச்

என். ஆர். பூவராகன்

சாரின் புத்திரராய்ப் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்ததனால் இவருடைய தாய் வழிப் பாட்டனார் கோபாலாச்சார் ஆதரவில் ஸம்ஸ்கிருத பாடசாலையில் வியாகரணம், ஸாஹித்யம் இவற்றைப் பயின்று வந்தார். இதற்கிடையே சுப்பாராயர் என்பவரிடம் ஸங்கீதமும் கற்று வந்தார். பாடசாலைத் திட்டத்தில் மாணவருக்கு என்னென்ன பாடம் போதிப்பது என்பதைச் சீட்டுப் போட்டுக் குலுக்கி எடுத்து முடிவு செய்வது வழக்கம். வியாகரணம், ஸங்கீதம் என்ற இரு பாடங்களில்

திபேத்திய லாமாவுடன் வாசுதேவாச்சார்





அரியக்குடி, ருக்மிணிதேவி இருவருடனும்

இவருக்குச் சீட்டு விழுந்தது. அது தமது மகத்தான பாக்கியமென ஸ்ரீ வாசுதேவாச்சார் கருதினார். சங்கீத ரசிகர்களுக்கும் அது பாக்கியமாயமைந்ததைப் பிற்பாடு கண்டோம்.

வீணை பத்மநாபையா என்பவரிடம் சங்கீத அப்பியாஸம் செய்யலானார் ஆச்சார். மஹா வைத்தியநாத ஐயருடைய இசையையும், பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் கானத்தையும் கேட்கும் வாய்ப்பு ஆச்சாருக்குக் கிடைத்தது. கேட்டுப் பரவசமுற்றார். எப்படியாவது பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் இசைப் பயிற்சி பெற வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டார். ஐயர் வாழ்ந்தது திருவையாற்றிலாகும். மைசூர் இளைஞரின் அபிலாஷை எப்படிப் பூர்த்தியாகும்?

அப்போது மைசூர் மகாராஜாவாயிருந்த ஸ்ரீ சாமராஜ உடையாரின் உதவி ஆச்சாருக்குக் கிடைத்தது. அதனால் பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் குருகுல வாசம் செய்யும் வசதியும் அவருக்கு ஏற்பட்டது. தியாகராஜ ஸ்வாமியின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான மானம்புச்சாவடி வெங்கடசுப்பையரின் சிஷ்யரே சுப்பிரமணிய ஐயர். ஆகவே ஆச்சார் தியாகராஜ ஸ்வாமியின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர். திருவையாற்றில் ஐயரிடம் ஆறு வருடங்கள் சங்கீதம் பயின்று அவருடைய அருமையான வழிகளைக் கற்றுணர்ந்தார். தானம் பாடும் முறை, ராக ஆலாபனை பத்ததி, கல்பனாஸ்வரம் பாடும் உத்தி இவற்றில் தமக்கென்றே ஒரு பாணியை வகுத்துக் கொண்டார். ஐயரிடம் இருந்த அநேக சிஷ்யர்களுள், பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் வாசுதேவாச்சாருக்குச் சில வருஷங்கள் முன்னும், டைகர் வரதாச்சாரியார் சில வருஷங்கள் சம காலத்திலும் குருகுல வாசம் செய்தவர்கள். ஐயரவர்கள் தமது பிரிய சிஷ்யனாகிய வாசுவுக்கு அநேக கீர்த்தனைகளையும், வர்ணங்களையும், பதங்களையும், ஜாவளிகளையும், தில்லானாக்களையும், பிராசீன பல்லவிகளையும், கர்நாடக சங்கீத சம்பிரதாய முறைகளையும் போதித்தார். வாசுதேவாச்சாருடைய உயர்ந்த பாஷா ஞானத்தை மெச்சின ஐயர், தாம் அவ்வப்போது கவனம் செய்த உருப்படிகளை இவரிடம் கொடுத்துப் பரிசீலனை செய்யச் சொல்வதுண்டு. ஐயர் இயற்றிய ''தாம் தாம் தாம்'' என்ற கமாஸ் ராகத் தில்லானாவை ஆச்சார் பல இடங்களில் திருத்தியதை குரு மிகவும் பாராட்டி ஏற்றுக் கொண்டார். ஐயரிடமிருந்து கவன சக்தியைக் கிரகித்துக் கொண்ட வாசுதேவாச்சார் அதே ரீதியில், அர்த்தபுஷ்டியுடனும், ராக பாவம் ததும்பும்படியும் பல கீர்த்தனைகளை நமக்கு வழங்கியிருக்கிறார்.

ஐயரிடம் குருகுல வாசம் முடிந்து திரும்பிய வாசுதேவாச்சார், சாமராஜ உடையார் காலத்தில், மைசூர் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டு அநேக உருப்படிகளை இயற்றினார். ஸப்த தாள அலங்காரங்கள், வர்ணங்கள், ஸ்வரஜதிகள், கீர்த்தனைகள், பல்லவிகள், சுலோகங்கள், ராக மாலிகைகள், தில்லானாக்கள் எல்லாம் சேர்ந்து ஸம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் சுமார் முந்நூறு உருப்படிகள் கவனம் செய்திருக்கிறார். இவற்றில், ''ப்ரோசேவா ரெவருரா'' (கமாஸ்) ''பலுகவேதேமிரா'' (தேவமனோஹரி) ''பிரணமாம்யஹம்''

பேரன், பேத்திகளுடன்



(கௌளை) ''ராரா ராஜீவலோசன'' (மோஹனம்) ''பிரணதார்த்திஹரம்'' (செஞ்சுருட்டி) இவை மிகவும் பிராபல்யமடைந்தவை. ''வாசுதேவகீர்த்தன மஞ்சரி'' என்னும் தலைப்பில் சுமார் 140 கீர்த்தனைகள், ஸ்வர தாளக் குறிப்புடன் பிரசுரமாகியுள்ளன. அபூர்வ ராகங்களான பவப்பிரியா, ரிஷபப்பிரியா, புஷ்பலதா, ரஞ்சனி, நாகத்வனி, மாண்ட், கதன குதூஹலம், வருணப் பிரியா, ஸுநாத விநோதினி, சுமனஸ்ரம, நாடகப் பிரியா, கோகிலப் பிரியா, தர்மவதி, புத ரஞ்சனி இவைகளில் கிருதிகள் சுவனம் செய்திருக்கிறார்.

தியாகராஜஸ்வாமியிடம் மிகுந்த பக்தியுடைய வாசுதேவாச்சார், ''ஸ்ரீமதாதி தியாகராஜ குருவரம்'' என்னும் கல்யாணி கிருதியும், 'ஸ்ரீராமசந்திர பாதாப்ஜே' என்னும் பஞ்சராக மாலிகையும் கவனம் செய்திருக்கிறார். இவருடைய ஒன்பது ஸம்ஸ்கிருத ராகமாலிகைகளை, ''நவரத்னராக மாலிகை'' என்று பிரகரித்திருக்கிறார்கள்.

சங்கீத வித்துவான்களைப் பற்றி வெகு ரஸமான கட்டுரைகள் அடங்கிய 'நாகண்ட கலாவிதரு' என்ற கன்னட புஸ்தகம் ஒன்றும் ஸ்ரீ ஆச்சார் எழுதியிருக்கிறார்.

இம்மஹனியர் பல பட்டங்களும், விருதுகளும் சால்வைகளும், தோடாக்களும் பெற்றுர். அவைகளுள் ''ஸங்கீத சாஸ்திர ரத்ன'', ''ஸங்கீத சாஸ்திர விசாரத'', ''ஸங்கீத கலாநிதி'', ''ஸங்கீத கலாகோவித' என்பவை குறிப்பிடத்தக்கவை. இவருடைய சிஷ்யர்களுள் என். சென்னகேசவய்யா, பி. கே. பத்மநாபராவ், எச். யோக நரஸிம்ஹம், டி. பகபதி இவர்கள் முக்கிய மாணவர்கள்.

வாசுதேவாச்சார், மைசூரில் பல வருஷங்கள் ஆஸ்தான வித்வானுகப் பணியாற்றிய பின், அடையாறு கலாக்ஷேத்திரத்தில், ஸ்ரீமதி ருக்மிணிதேவியின் கோரிக்கைக்கு இணங்கி, சுமார் ஏழு வருஷங்கள் உப அத்யக்ஷகராய் இருந்தார். ராமாயண நாட்டிய நாடகத்துக்கு ஸங்கீதம் அமைத்துத் தந்தார். இசை நுணுக்கங்களையும் தாம் கவனம் செய்த உருப்படிகளையும் பலருக்குப் போதித்து வந்தார்.

வாசுதேவாச்சாருக்குக் கடைசிக் காலம் வரை (96 வயது) சாரீரத்தில் கம்பீரமும், அழுத்தமும், கமகமும், ரஞ்சகத்வமும் குறையவில்லை. பூஜை அளவுடன் பிரதி தினமும் கீதை, ராமாயண பாராயணம் செய்வார். பிறகு தம்பூராவைத் தாமே மீட்டிக் கொண்டு சுமார் இரண்டு மணி சங்கீத சாதகம் செய்வார். சிஷ்யர்களுக்கும் அபிமானிகளுக்கும் சொல்லிக் கொடுப்பார்.

தெய்வபக்தியும், குரு பக்தியும் உடைய ஆச்சார் அவர்கள் சிறந்த ஆசார சீலர். வைதிகம், சம்பிரதாயம் இவற்றில் பற்றுடையவர். மரியாதையுடனும் சரளமாகவும் பழகும் தன்மை படைத்த மஹான்.


ஆச்சார் அவர்கள் ஹாஸ்யம் ததும்பப்பேசுவார். ஒரு சமயம் ராமாயண நாட்டிய நாடகம் முடிந்த போது வயலின் வித்வான் துவாரம் வெங்கடசாமி நாயுடு, 'இந்த நாட்டிய நாடகம் யார் செய்தது?' என்று கேட்டார். ஆச்சார் ருக்மிணி தேவியைச் சுட்டிக்காட்டி, ''வா—ரு'' என்ருர்.... ''வாருண்டே எவுரு?'' என்ருர் துவாரம். ''வா—வாசுதேவாச்சார் — சங்கீதம்; ரு—ருக்மிணி தேவி — நாட்டியம்'' என்று சுருக்கமாய்ப் பதில் சொன்னுர் ஆச்சார்.

1961ம் வருஷம் மே மாதம் 18ந் தேதி சுமார் ஏழு மணிக்கு வித்வான்களைக் கூப்பிட்டு அனுப்பிக் கீர்த்தனங்களைப் பாடச் சொல்லிக் கேட்டார் மைசூர் வாசுதேவாச்சார். ''நான் சங்கீதத்துக்கு இதுவரை சேவை செய்து பல கிருதிகளை பகவத் அர்ப்பணமாய் இயற்றினேன். போய் வருகிறேன். சிறிய வித்வான்கள், பெரிய வித்துவான்கள் எல்லோருக்கும் நமஸ்காரம்'' என்று சொல்லியவாறு பரமபதம் எய்தினர்.

அவர் அடிக்கடி என்னிடம் ''இந்தக் கீர்த்தனைகளை நான் என்ன கவனம் செய்வது? வாஸுதேவஸ்ய கிருபையா, வாஸுதேவனை வர்ணிதம்; வாசுதேவன் அருளால் வாசுதேவன் பாடினுன். எல்லாம் அவன் செயல்'' என்பார். ஆச்சாரின் நூருவது ஜன்ம தினம் நிகழும் போது இவ்வாறு அவர் கூறியதே என் மனச்செவியில் ஒலிக்கிறது.

குளிர்ந்த காற்றைத் தருகிறது

ராலி:.பேன்



ஒவ்வொரு ராலி:.பேனும் 2 வருட உத்தரவாதத்துடன் வருகின்றன. இன்றைய தேதியில் மிக நம்பகமான மேஜை விசிறி இதுவே என்பதை நிரூபிக்கும் மிகக் கடும் பரிசோதனைகளில் தேறியதாயிற்றே.

ராலி:.பேன் வகைகளைப்பற்றி மேலும் விவரங்கள் தேவையா? இதோ உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து, 'ராலி ஹாய்லண்ட் லிமிடெட், 21, ராவெலின் ஸ்ட்ரீட், பம்பாய்' என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

ராலி:.பேன்களைப்பற்றிய முழு வர்ண இலவச வெளியீட்டை எனக்கு அனுப்புமாறு கோருகிறேன்.

பெயர் ....

....

விலாசம் ....

....

சென்னை, கேரளம் ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் மஹமத் இப்ராஹீம் & கோ.,
ப்ரைவேட் லிமிடெட்.
7/8, மவுண்ட் ரோட், சென்னை.

SHBI RFN 79 TAM

இருபது நாள் உல்லாசம்

ஆமலன்

அன்று பஸ் ஸ்டாண்டில் கூட்டத்தையே காணோம். ஏன், ஆணாய்ப் பிறந்தவர், பெண்ணாய்ப் பிறந்தவர் ஒருவர்கூட அங் கில்லை. அதைக் கண்டு அங்கே வந்திருந்த மாதங்கியும், வசந்தனும் ஆச்சரியப்பட் டார்கள். அவர்கள் வந்து சில நிமிஷங் களாகியும் பஸ்களும் வந்து நிற்கவில்லை. அவை மாட்டில் போய்க் கொண்டிருந்தன.


''வழக்கம் போல் பொழுது போக்க வேண்டியதுதான். நாட்டிய பொக்கிஷம் நாதமுனி...!'' என்று இழுத்தான் வசந்தன்.


''கதையை முடிக்க வேண்டுமென்கிறீர் களா?'' என்று மாதங்கி கேட்டு விட்டு ஆரம் பித்தாள்.

''சர்வகலா களஞ்சிய சபையில் மோகன வல்லி நடனமாடிக் கொண்டிருந்தபோது ஒரு ஸ்திரீயின் கழுத்திலிருந்த வைர நெக்லெஸை அவள் பின்னால் உட்கார்ந் திருந்த ஒருவர் திருட முயன்றார். அவள் கூச்சலிடவே கலாட்டா ஏற்பட்டது. ஆனால் அந்த ஆசாமி நழுவிப் போய் விட்டார் என்று சொன்னேனா?'' என்று கேட்டாள் மாதங்கி.

''இல்லையே. நாட்டிய வாத்தியார் நாத முனியை யாரோ வந்து காரில் அழைத்துக் கொண்டு போனார்கள். அவர் திரும்பி வர வில்லை என்று முடித்தீர்கள். நகைத் திருட் டைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றான் வசந்தன்.

''சொன்னதாக ஞாபகம். அவசரம் அவசர மாக பஸ்ஸிலே ஏறப் போனதில் சொல்ல மறந்து விட்டேன் போலிருக்கிறது. ஆனால் அதைப் பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. சிறிது குழப்பம் ஏற்பட்ட பிறகு வைர நெக்லெஸ் வைரத் தோடுகள் போட்டுக் கொண்டிருந்த பல ஸ்திரீகள் எழுந்திருந்து





போய் விட்டார்கள். இண்டர்வெலுக்குப் பிறகு பத்துப் பதினைந்து பேர்கள் தான் உட்கார்ந்திருந்தார்கள். இந்தச் சம்பவத்தைப் பத்திரிகைகள் பெரிய தலைப்புக்களுடன் பிரகரித்தன. பிறகு நாதமுனி திரும்பி வராத போது அதைப் பற்றிய தகவலையும் பிரகரித்தன. ஒரு மேதாவியான பத்திரிகை நிருபர், இந்த இரண்டு சம்பவங்களையும் பிணைத்து ஒரு கதை கட்டியிருந்தார்.

நட்டுவாங்கக் கலை உலகத்தில், நாதமுனிக்குப் பல போட்டி ஆசிரியர்கள் விரோதிகள் என்றும், அவர்களுள் யாரோ ஒருவர்தான் மோகனவல்லியின் நடனக் கச்சேரி தினமன்று திருட்டு நடக்க ஏற்பாடு செய்து கலாட்டா விளைவித்திருக்க வேண்டுமென்றும், அந்த ஆசாமியேதான் நாதமுனியைப் பிடித்துக் கொண்டு போய் வைத்திருக்க வேண்டும் என்றும் அவரது மைத்துனன் சந்தேகப்படுவதாகத் தெரிவித்தார். சந்தேகம், நாட்டியகலா கறாறு நஞ்சப்பன் மீதுதான் விழுந்தது. போலீஸ்காரர்கள் அவரைக் கண்காணித்து வந்தனர். அவர் தமது வீட்டுத் தோட்டத்தில் புதிதாக ஒரு கொட்டகை போட்டு, அதில் அதிகப்படியான பெண்களுக்கு நாட்டியம் கற்பித்து வரலானார். இதைத் தவிர போலீஸ்காரர்களால் வேறெதுவும் அவரைப் பற்றிக் கண்டு பிடிக்க முடியவில்லை.

நாதமுனியின் மறைவு சில பெரிய மனிதர்கள், சில கலாரஸிகர்கள் வீட்டில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டிருந்தது. சிலரது வீடுகளில் அது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே மனத்தாங்கலையும் கிளப்பி விட்டிருந்தது.

''கிரிஜா இப்படிப் போத்தாக வளர்ந்து கொண்டிருக்கிறாள். டான்ஸ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யாமல் பேசாதிருக்கிறீர்களே!'' என்று ஓர் அம்மாள் தமது கணவனைக் கோபித்தாள்.

''எனக்கு நீ சொல்ல வேண்டுமா? எனக்கு இராப் பகலாகத் தூக்கமே இல்லை. நாதமுனி எப்படியும் வந்து விடுவார். அவரை ஏற்பாடு செய்யலாமென்று இருக்கிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்'' என்று அவள் புருஷன் கேட்டுக் கொண்டார்.

''எத்தனை நாட்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறது? எனக்கு வெளியில் தலைகாட்ட முடியவில்லை. ரத்னா நம்ப கிரிஜாவுக்கு உடன் உடுத்தவள். அவள் பரதநாட்டியம் சொல்லிக் கொள்ள ஆரம்பித்து இரண்டு மாதத்துக்கு மேலேயே ஆகிவிட்டது. கிரிஜாவுக்கு இந்த வைகாசிக்கு ஆறு நிறையப் போகிறது. இன்னும் டான்ஸ் ஆரம்பிக்கவில்லை. வெட்கக் கேடு'' என்று அந்த அம்மாள் கண்ணீர் உகுத்தாள்.

''இன்னும் ஒரு மாதத்துக்குள் ஆரம்பித்து விடுவோம். நடனப் பயிற்சி ஆரம்ப விழாவைப் பெரிதாக ஒரு சபையில் கொண்டாடிவிடுவோம். யாராவது ஒரு மந்திரியைத் தலைமை வகிக்கச் சொன்னால் போச்சு!'' என்று கணவன் கூறவே அந்த அம்மாள் சமாதானம் அடைந்தாள்.

நாதமுனி திரும்பி வாராமற் போய் இரண்டு வாரங்கள் இருக்கும். ஒரு நாள் விடியற்காலை ஒரு மோட்டார் வண்டி அவர் வீட்டு வாசலில் அவரை இறக்கி விட்டுச் சென்று விட்டது. அது யார் வண்டி, எங்கிருந்து வந்தது என்பது ஒன்றும் அவருக்குத் தெரியாது.

அவர் தமது வீட்டுக் கதவை இடித்ததும் அவர் மனைவி வந்து திறந்தாள். முதலில் வந்திருப்பது அவர் ஆவியோ என்று பயந்து, பிறகு தனது கணவன்தான் என்று தெரிந்து கொண்டாள். அவள் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. அவர் திரும்பி வந்த விஷயம் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அவர் தம்மை யாரோ அழைத்துக்கொண்டு போனதாகவும், வழியில் விபத்து ஏற்பட்டதாகவும் கூறினார். தாம் மயக்கம் தெளிந்து எழுந்தபோது ஒரு ரிஷி போன்றவர் பிரசன்னமாகித் தம்மை ஆசிர்வதித்ததாகவும் பரதநாட்டியத்தின் இரகசியங்களைப்போதித்ததாகவும், ஒரு பட்சம் க்ஷேத்திராடனம் செய்து விட்டு வரக் கட்டளையிட்டதாகவும் கூறினார். தாம் அப்படியே தெய்வங்கள் நடனம் புரியும் சிதம்பரம் போன்ற பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று வந்ததாகவும் தெரிவித்தார்.

அவர் திரும்பி வந்த தினமன்று மாலை அவர் வீட்டு வாசலில் பல புத்தம் புதிய பெரிய மோட்டார் வண்டிகள் நின்றன. அவற்றிலிருந்து தங்கள் தங்கள் பெண் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்திருந்த சீமாட்டிகளும் சீமான்களும் நீண்ட வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். பரதமாமுனி நாட்டிய கலா பொக்கிஷம் நாதமுனி அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றார். அவர்கள் தம்மிடம் கொண்டுள்ள அபிமானத்துக்காக வந்தனமளித்தார். தமக்கு ஞானோதயமேற்பட்டு விட்டிருப்பதாகவும் இன்னும் ஒரு வாரத்தில் மறுபடியும் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப் போவதாகவும் கூறி அவர்களை அனுப்புவித்தார். விடை பெற்றுக் கொள்ளும் போது சில தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளை அவர் காலில் விழுந்து நமஸ்கரிக்கச் செய்தனர். நாதமுனி அவர்கள் அப்படிச் செய்வதைத் தடுத்தார். பாவம் அந்தச் சிறுமிகள் தங்கள் சொந்த 'அப்பன் ஆயி'க்குக்கூட நமஸ்காரம் செய்து அறியாதவர்களாயிற்றே!

இதற்குப் பிறகு மூன்று நாட்கள்வரை அவர் இராப் பகலாக உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டேயிருந்தார். எழுதுவதும், திருத்துவதும், அடிப்பதும், திரும்ப எழுதுவதுமாக இருந்தார். அவர் பரதமாமுனி தமக்கு அருளியதைப் பற்றி விவரங்களை எழுதிக் கொண்டிருப்பதாக வதந்தி பிறந்தது.

அந்த வார இறுதியில் அவரைத் தம் பெண்களின் நாட்டிய குரு மகாராஜாவாகக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த பல பெற்றோர்களுக்கு அவரிடமிருந்து தபாலில் ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

'அன்பார்ந்த........க்கு வணக்கங்கள். தங்கள் திருநிறைச் செல்விக்குப் பரத நாட்டியப் பயிற்சி அளிக்க அடியேனைப் பொறுக்கி எடுத்ததை என்று பாக்கியமாகக் கருதுகிறேன். தயவு செய்து இத்துடன் சேர்க்கப் பட்டிருக்கும் நமூனாவைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்...' என்று இருந்தது. அந்த நமூனாவில்,

பிறந்த தேதி
உயரம்
எடை
கைகளின் நீளம்
விரல்களின் நீளம்
கால்களின் நீளம்
கழுத்து, தலை, இடுப்பு, முகம் இவற்றின் சுற்றளவு:

இப்படி உடலமைப்பைப் பற்றிய பல விவரங்கள் கோரப் பட்டிருந்தன. மேலும் குறிப்பில் பிறந்த தேதியை நிரூபிக்கும் சர்டிபிகேட் வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. பயிற்சி ஆரம்பிக்கும் தேதியில் மாணவிக்கு (பன்னிரண்டு) வயது 12 நிறைந்திருக்க வேண்டும் என்றும் கொட்டை எழுத்தில் எழுதப் பட்டிருந்தது. கடைசியில் 'எச்சரிக்கை' என்று குறிப்பிட்டு, 'சிஷ்யைகள் மேடையில் நாட்டியமாடுவதற்கு ஆரம்பிக்கு முன்னர் நட்டுவாங்கம் செய்பவர்களின் கால்களைத் தொட்டுக் கும்பிடக் கூடாது' என்றும் போட்டிருந்தது.

இந்த நமூனாவில் கண்ட விவரங்களைப் படித்தவர்கள் நாதமுனிக்கு மோட்டார் விபத்தில் மூளை பாதிக்கப்பட்டு விட்டதென்று நினைத்துப் பரிதாபப்பட்டார்கள். ஆனால், பன்னிரண்டு வயது நிரம்பிய, நல்ல அவயவ அமைப்புள்ள வசீகரமான தோற்றமுள்ள பெண்களின் பெற்றோர்கள் இந்த நமூனாவைப் பார்த்து மகிழ்ச்சியுற்றார்கள். அவர்கள் தங்கள் பெண்களை அவரிடம் நாட்டியப் பயிற்சிக்கு அனுப்புவித்தார்கள். அப்படி வந்த சிறுமிகளை அவர்களுக்கு அழகியதும் உறுதியுமான உடலமைப்புடன் உண்மையாகவே கலை ஆர்வம் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்தார். தாள நயமும், பாவ ஞானமும், இசையில் ஈடுபாடும் கொண்டு நன்கு பிரகாசிக்கக் கூடியவர்கள் என்று தோன்றிய சிலரை மட்டுமே பரதப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்தார். நாதமுனியின் புகழ் முன்னிலும் அதிகமாயிற்று. ஒரு சட்டசபை அங்கத்தினரின் வாயிலாக நாதமுனி பரத நாட்டிய வயது நிர்ணயச் சட்டம் ஒன்று கொண்டு வர ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவர் மனைவி தன் கணவனைப் பார்த்து, ''நீங்கள் மோட்டார் விபத்துக்கு ஆளானதைப் பற்றியோ, யாரோ ஒரு தாடிக்கார ரிஷி உங்களுக்குத் தரிசனமளிக்கக் காத்துக்கொண்டிருந்தார் என்று சொன்னீர்களே அதையுமோ நான் கொஞ்சம்கூட நம்பவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்று சொல்லிவிடுங்கள். இல்லாவிட்டால் நான் அந்த மகா முனிவரைத் தரிசனம் செய்யக் கிளம்பி விடுவேன்'' என்று வேடிக்கையாகப் பயமுறுத்தினாள். அதற்கு நாதமுனி, ''நான் எத்தனையோ பெரிய பெரிய பெண் பிள்ளைகளையும், பெண்களையும் ஆட்டிவைக்கிறேன். ஆனால் நீ என்னை ஆட்டி வைத்துவிடுகிறாய்!'' என்று மனைவியைப் புகழ்ந்துவிட்டு நடந்த விஷயங்களை நடந்தபடி கூறினார்.

''என்னை அழைத்துக் கொண்டு போனவர்கள் என் கண்களைக் கட்டி ஒரு பெரிய கட்டிடத்துக்குள் அழைத்துக் கொண்டு போனார்கள். வண்டி பல சந்துகளில் நுழைந்து நுழைந்து சென்றதால் அந்த வீடு எங்கே இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. அங்கே மூன்றாவது மாடியில் ஒரு பெரிய அறைக்குள் என்னைப் பூட்டி வைத்திருந்தார்கள். அன்று பகலுக்கு மேல் முகமூடி அணிந்து கொண்டு ஒரு மனிதர் வந்தார். அவர் கையில் ஒரு சாட்டை இருந்தது. அவர் என்னைப் பார்த்து, ''உங்களால் என்



மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படவிருந்தது. அன்று மோகனவல்லி என்ற குச்சிப் பெண்ணுக்கு நட்டுவாங்கம் செய்தீர்களே, அன்று ஒரு வைர நெக்லெஸ் திருட்டு நடந்ததே, அது என் ஆளின் வேலைதான். மேடையில் நல்ல அங்க அமைப்புள்ள பெண் நடனமாடிக் கொண்டிருந்தால் எல்லோரும் தங்களை மறந்து நடனத்தில் லயித்திருப்பார்கள். அந்தச் 'சமயம்' பார்த்து என் ஆட்கள் திருடுவது வழக்கம். அநேகமாக அவர்கள் அகப்பட்டுக் கொள்வதில்லை. அந்த மோகனவல்லிக்கு இன்னும் ஒன்பது வயதுகூட ஆகவில்லை. கையும், கால்களும், வயிறும், சோளக் கொல்லைப் பொம்மைக்குடையதைப்போன்று இருக்கின்றன. அதற்கு மேல் மூச்சு, மேல்மூச்சு வாங்குகிறது. பாவம், அந்தக் குழந்தையைப் பற்றி ஒன்றும் சொல்லக் கூடாது.



பிச்சைக்காரன்: உதவி செய்யுங்கள், ஸார்! மூன்று நாட்களாக ஒரு வேளை உணவுகூட இல்லை!

பணக்காரர்: நீ அதிர்ஷ்டசாலி அப்பா. என் துரதிர்ஷ்டத்தைக் கேள். மூன்று விருந்துகளுக்குச் சென்று சாப்பிட வேண்டி வந்தது. இருபத்தைந்து புகழுரைகளைக் கேட்க வேண்டியதாயிற்று!

அதற்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்த நீர்தான் ஜவாப்தாரி! தாளத்துக்கேற்பக் காலடி எடுத்து வைப்பது மட்டுமே பரத நாட்டியமென்றும், குரங்குக் குட்டிகளையும் இயந்திரப் பொம்மைகளையும் கூடப் பரத நாட்டியமாடச் செய்யலாம்'' என்று இப்படியெல்லாம் அந்த மனிதர் பெரிய பிரசங்கம் செய்தார். குழந்தைப் பருவத்திலேயே நாட்டியம் சொல்லிக் கொடுத்தால் பிறகு பிரசவ காலத்தில் குழந்தைகள் பெறச் சிரமமாயிருக்கும் என்று கூறினார். நான் இனிமேல் யார், யாருக்கு, எப்படிப்பட்ட உடலமைப்புள்ளவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனைகள் விதித்தார். அவர் கூறியதை மீறி நடந்தால் நட்டுவாங்கம் செய்துகொண்டிருக்கும்போது திரை மறைவிலிருந்து துப்பாக்கியால் சுட ஏற்பாடு செய்வதாகப் பயமுறுத்தினார். அவர் ஒரு டாக்டர் போலிருக்கிறது. கலா ரசிகர் என்றும் தெரிந்தது. அவர் சொன்னபடி செய்ய ஒப்புக்கொண்டு சத்தியம் செய்து கொடுத்தேன். பிறகு என்னை விடுதலை செய்தார்'' என்று நாதமுனி தெரிவித்தார்.

இது கதைபோலிருந்தாலும் அவர் மனைவி இதை நம்பினான். ''அந்த முகமூடி போட்டுக் கொண்டு உங்களைப் பயமுறுத்தியவரைத்தான் பரதமாமுனி என்று சொன்னீர்களாக்கும்!'' என்று அவள் அவரைப் பரிகசித்தான்.

மாதங்கி கதையை முடித்துவிட்டு ஒரு நிமிஷம் சிரம பரிகாரம் செய்து கொண்டாள். இன்னும் பஸ்கள் வந்து சேரவில்லை. கியூ வரிசையிலும் யாரும் நிற்கவில்லை.

''இன்னும் சிறிது நேரம் பார்க்கலாம். நீங்கள் ஏதாவது சொல்லுங்களேன்'' என்றாள் மாதங்கி.

அவள் எப்போது அப்படி உத்தரவிடப் போகிறாள் என்று காத்துக் கொண்டிருந்தவன்போல வசந்தன் ஆரம்பித்தான்.

''ஒரே ஒரு ஊரிலே பாண்டியன் என்று ஒருவர் இருந்தார். அந்த ஊர் அப்போது தான் புதிதாகத் தோன்றிக் கொண்டிருந்தது. பாண்டியன் வீடு மிகவும் சிறியது: அதன் முன் பக்கமும், பின்பக்கமும் கட்டி முடிக்காமலே இருந்தது. பாண்டியன் பண்டைய இலக்கியம் படித்தவர். அவர் வீட்டில் முதுமொழிகள், பழமொழிகள் இவை அட்டையில் எழுதிச் சுவர்களில் தொங்க விடப்பட்டிருக்கும். 'நன்றி மறவேல்'!' 'வீட்டுக்கு வீடு வாசற்படி!' 'ஆடுகிற மாட்டை ஆடிக் கற' 'பேசப் பிறந்தாயோ, சாகப் பிறந்தாயோ!' 'மயிலே மயிலே என்றால் இறகு போடாது' என்பவை போன்று..... அவர் அவற்றை நம்பி அதன்படி காரியங்கள் கூடச் செய்வதுண்டு.

அவரது வீட்டுக்கு இரண்டு பக்கங்களிலும் எதிர்த்தாற் போலும் பல புதிய பெரிய வீடுகள் கட்டப்பட்டு வந்தன. பாண்டியன் உலகம் கெட்டுப் போய்விட்டதைப் பற்றியும் ஜனங்கள் கறுப்பு மார்க்கெட்டில் வியாபாரம் செய்வதைப் பற்றியும், கொள்ளையடிப்பதைப் பற்றியும் அடிக்கடி கண்டித்துக் கூறுவார்.

அவருக்குப் பக்கத்து வீட்டுக்காரர் சேது. பெரிய சிமெண்ட் வியாபாரி. அவர் அதில் முதல்தரமான சாம்பலைக் கலந்து விற்கிறாரென்றும் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அந்த வியாபாரியின் வீட்டுக் கிரகப் பிரவேசம் மிகவும் தடபுடலாக நடக்க ஏற்பாடாகியிருந்தது. சேது, பாண்டியன் வீட்டுக்கு வந்து அவரை நேரே அழைத்துவிட்டுப் போனார்.

சேதுவின் மாளிகைக் கிரகப் பிரவேச தினம் வந்தது. அன்று காலை பாண்டியன் தமது வீட்டு வாசலில் உண்ணாவிரதமிருக்கத் தொடங்கினார். கிரகப் பிரவேசத்திற்கு வந்திருந்த கூட்டம் அவரை வேடிக்கை பார்க்க வந்துவிட்டது. சிமெண்ட் வியாபாரி கலப்படம் செய்வதை ஆட்சேபித்து அவர் உண்ணாவிரதம் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். கிரகப் பிரவேச வைபவத்தைப் பற்றி பாண்டியன் எண்ணிப் பார்க்க அவரது மனம் வேதனையுற்றது. அவரது வயிற்றை என்னவோ செய்தது. அப்போது அவரெதிரே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பழமொழி அட்டை ஒன்று அவர் கண்ணில் பட்டது. அவ்வளவுதான்; தமது கடமை என்னவென்று அவருக்குப் பளிச்சென்று புலப்பட்டுவிட்டது.

வசந்தன் இப்படிச் சொல்லி வந்து கொண்டிருந்தபோது எதிரே வரிசையாகப் பஸ்கள் வந்து நின்றன. அங்கே 'பஸ் ஸ்டாப்' கம்பம் கூட நடப்பட்டிருந்தது. அவனும் மாதங்கியும் பஸ்ஸில் ஏற விரைந்து சென்றார்கள். ''பஸ் ஸ்டாப் கம்பத்தை யாரோ தவறிப் போய் வேறு இடத்தில் கொண்டு போய்ப் புதைத்துவிட்டார்கள். அது இப்போதுதான் எனக்குத் தெரிந்தது. திரும்ப இங்கே கொண்டு வந்து புதைக்கச் சொன்னேன்'' என்று ஒரு பஸ் இன்ஸ்பெக்டர் இன்னொரு உத்தியோகஸ்தரிடம் சொல்லிக் கொண்டிருந்தது அவர்கள் காதில் விழுந்தது.



மேட்டூர் கெமிகல்ஸ் சீப் அக்கௌண்டன்ட் ஸ்ரீ கே. கே. தர்மராஜனுடைய குமாரி சௌபாக்கியவதி ராஜலக்ஷ்மிக்கும், புதுவை (காலஞ்சென்ற) ஸ்ரீ சி. எஸ். ஆர். காரிகார் அவர்களுடைய குமாரர் சிரஞ்சீவி சி. ஆர். சகஸ்ரம் எம். பி. பி. எஸ்.க்கும் மே மாதம் மேட்டூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

ஊருக்கே ஒரு விளக்கு

வை. சுப்ரமண்யன்





மார்ச்சு மாத முடிவுக்குள் இருக்கிற லீவை எடுத்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற சட்டப்படி ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டேன். 'இஷ்டம் போல் பிரயாண'த் திட்டப்படி ரயில்வேயில் ஒரு டிக்கட்டும் வாங்கிக் கொண்டு எழும்பூரில் ரயில் ஏறினேன். சிதம்பரம், சீர்காழி எல்லாம் பார்த்த இடம்தான்; சுற்றிய ஊர்கள்தான். மாயவரத்துக்கு அப்பால்தான், ரயில்வேயை எட்டியிருந்த ஊர்களிலும் உட்புகுந்து சுற்ற எண்ணியிருந்தேன். மாயவரம் ஜங்ஷனில் இறங்க வேண்டியதாயிற்று. தொடர்ந்து பிரயாணம் செய்துவிட்டால் நினைத்தபடி மீண்டும் திரும்பு திசையில் பிரயாணம் செய்து என் இஷ்டம் போல் எல்லாம் டிக்கட்டை உபயோகப்படுத்த முடியாது.

சொந்த ஊர் போல் முன்பு பத்து வருஷங்கள் இருந்த ஊருக்குச் சவாரி விடலாமா என்று தோன்றியது. கடைசிப் பஸ்ஸைப் பிடித்தாலும், பதினொரு மணிக்குள் ஊரை அடைந்து விடலாம். இரண்டு நாட்கள் ஊரில் இருந்து விட்டு, குற்றாலத்திலிருந்து தொடர்ந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்.

அந்த ஊரும் பார்த்த ஊர்தான்; இருந்து பழகி, பழம் தின்று கொட்டை போட்ட இடம்தான். ஆனாலும் ஊருக்காகப் போகவில்லை நான். சுந்தரிக்காகப் போகிறேன். இந்தப் பிரயாணத்திடை நான் போகப் போகிற கோயில்களில் உள்ள அம்மன்களில் ஓர் அம்மன் போலத் தரிசிப்பதற்கு உரியவள்தான் அவள். அவளைத் தரிசிக்கப் போக வேண்டும் என்று இருட்டில் ஒரு திடீர் வெளிச்சம் அடித்தாற்போல் மனத்தில் தோன்றியது என்பதுதான் உண்மை. அவளைப் பத்து வருஷங்கள் அடைவாகப் பார்த்திருக்கிறேன்; பத்து வருஷங்கள் கழித்து இப்போது பார்க்க வேண்டும் என்று பக்தியோடு கூடிய ஆசை. பக்தியாக இப்போது கனிந்துவிட்ட ஆசைக்கு இன்னும் சில வருஷங்களுக்கு முந்தி வரை என்றால் 'சபலம்' என்ற ஒரு வரையறையும் கட்டலாம். அதற்கு அடிப்படையான காரணங்கள் இருந்ததால்தான் மனசு அந்த ரீதியில் ஓடிக் கொண்டிருந்தது. இப்போது மனசை வென்றாயிற்று. ஆனால் அப்போது? மனசை அரிப்பதற்கு நியாயமான தூண்டுதல்கள் ஏற்படுத்தி வைத்து விட்டாற்போல் யதார்த்தமாகச் சில முஸ்தீபுகள் நடந்தன. சுந்தரியின் ஜாதகத்தை ஒரு நாள் என் தாயாரிடம் கொடுத்து அவள் தாயார் என்னுடையதைக் கேட்டிருந்தாளாம். அதை அங்கேயே பிரித்துக்கூடப் பார்க்காமல் என் தாயார் வீட்டில் கொணர்ந்து என்னிடம் வருஷம் பார்த்து வயசுக் கணக்குப் போடச் சொன்னாள். 'அக்ஷய' என்று நான் விரல்விட ஆரம்பித்தேன்.

''அக்ஷயவா?''

''ஆமாம், அம்மா.''

''மாசம்?''

''வைகாசி — இருபது தேதி.''

''என்னத்துக்குக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறாய்? உன்னைவிட ஒரு மாசம் பெரியவள் அவள்......''

''அப்படியா? நீ எதற்கு இதைக் கொடுத்துக் கணக்குப் போடச் சொன்னாய் என்றும் எனக்குத் தெரியாது; அப்படியே நீ சொல்லியிருந்தாலும் என் கண்ணுக்கு நேரே என் வருஷம் 'அக்ஷய' என்று ஜாதகத்தில் தெரிந்தாலொழிய எனக்கு இங்கிலீஷ் வருஷம்தான் சட்டென்று புரியும்.''


''சரி, சரி; அப்படியே மடித்துச் சுவாமி அலமாரியில் வை.''

சுவாமி அலமாரியில் ஜாதகத்தை மடித்து வைத்து விட்டு நிமிர்ந்த போது சுவாமியையும் அம்மனையும் பக்கத்தில் பக்கத்தில் பார்த்தேன். அம்மனாக ஒரு விநாடி சுந்தரியின் முகம் தோன்றியது. எனக்கு இனிமேல் அவள் அம்மன்தான் — அம்மா போலத்தான்.

சுந்தரியைப் பற்றி எனக்கு முதனிலேயே ஹைஸ்கூல்படிப்பு முடித்துக் கொண்டு ஒரு வருஷ இடைவெளிக்குப் பிறகு ஊருக்கு வந்த போதே — ஒரு மதிப்பும் மரியாதையும் கலந்த உணர்வு ஏற்பட்டு விட்டது. நெஞ்சைக் கொள்ளை கொள்கிற அவளை நிமிர்ந்து பார்க்க ஓர் ஆவல்; அதே சமயம் ஒரு கூச்சம் ஆகிய இரண்டு எதிர் மறை உணர்வுகளால் தவிப்படுத வழக்கமாகிப் போய் விட்டது. அவளை நிமிர்ந்து பார்க்க நேர்ந்துவிட்ட சந்தர்ப்பங்களை, 'ஒரு தடவை இரண்டாந் தடவை' என்று கணக்கெல்லாம் பண்ணுகிற பைத்தியக்கார மனோ பாவமெல்லாம்கூட ஏற்பட்டு விட்டது.

இந்த நிலையில் இரண்டு வருஷங்கள் கழிந்து, முதல் நிமிஷத்தில் அவள் என் உடைமை போலும் மறு நிமிஷத்தில் அவளை நான் இழந்து விட்டதாகவும் வலிய ஒரு சந்தர்ப்பம் வந்து என்னைத் தூண்டிவிட்டு விளையாடினால்? எனக்குக் கொஞ்ச நாட்கள் வரை என் சித்தம் என் வசத்தில் இல்லாமலே ஒரு தவிப்பு ஏற்பட்டிருந்தது. அதன் பிறகு அவளுக்குத் தொடர்ந்து வரன்கள் பார்ப்பதிலும், கல்யாணப் பேச்சு பேசுவதிலும் அவள் தாயார் அக்கறை கொண்டு முனைந்து முயற்சிகள் செய்து கொண்டிருந்தபோது என் தவிப்பு சிறிது சிறிதாக அடங்க ஆரம்பித்தது. ஒரு தரம் உடம்போடு படுக்கையில் விழுந்த அவள் தாயார் அவளை ஒன்றியாக விட்டு விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். அதன் பிறகு சுந்தரியின் மேல் உண்மையான அநுதாபம், மதிப்பு, மரியாதை எல்லாம் பிறந்து விட்டன என் உள்ளத்தில். அவளுடைய தேஜஸையும் தனித்தன்மையையும் ஒட்டி அவளை ஓர் அம்மன் போல நினைக்கத் தொடங்கிவிட்டேன்.

இப்போது சுந்தரிக்குக் கட்டாயம் கல்யாணம் ஆகியிருக்கும். அவளைப் பார்ப்பதில் முறைப் பிசகு ஒன்றும் இராது; ஊரிலேயே இருந்தவன் நான்; ஊரோடு வேரோடியிருப்பவர்களின் துணை. அறிமுகத்தோடுதான் போய்ப்



பார்க்கத்தான் வேண்டும். மனித உடம்பின் மீது ஒளி ஆடுவதையும், தூக்கிய முகத்தில் தெய்வத்தின் அருள் தெரிவதையும் வேறு எங்கேயாவது தேடிக் கொண்டு போனால் கூடப் பார்த்துவிட முடியுமா?

நடு நிசிக்குப் பஸ் என்னை ரோடு நிறுத்தத்தில் இறக்கி விட்டுப் போய் விட்டது. நிலா வெளிச்சத்தில், நெற்றியின் 'பளீ'ரென்ற விபூதிப் பட்டை போல் குறுக்குச் சாலை தெரிந்தது. சாலையில் ஊரைப் பார்க்க நடந்தேன். இரண்டு பக்கமும் நெல் வயல்கள். பச்சை நிறம் இரவில் நிலவொளியில் எட்டின தூரத்துக்குக் கறுப்புப் படுதாக்களை இழுத்துக் கட்டியது போன்று தோன்றியது. 'ஙொய்' யென்று சில் வண்டுகளின் சுருதி தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது.

என் வயசு சகாக்கள் ஊரில்தான் இருப்பார்கள் என்று ஒரு நம்பிக்கை எனக்கு. திண்ணை திண்ணையாகப் படுத்திருக்கும் அவர்களில் யாரை வேண்டுமானாலும் எழுப்பலாம் என்று நினைத்துக் கொண்டு முதலில் இடதுபுறம் இருந்த இரண்டாவது வீட்டு எதிரில் நின்று, "ராஜு!" என்று குரல் கொடுத்தேன். திண்ணையில் படுத்திருக்கிறானோ என்று அந்த விநாடியில்தான் ஒரு சந்தேகம் தலை காட்டியது.

"யாரு?" என்று கிழே குதித்து எழுந்து சற்று எட்டினாற் போலவே நின்றான் ராஜு.

"ராஜுதானே, கிராப் வைத்துக் கொண்டிருக்கிறாயா? சட்டுனு தெரியலே. நான் மணி, லாஸ்ட் பஸ்ஸிலே வந்தேன்."

"யாரோ மட்டும் வரான்னு தெரியும். வி. ரா. கி. மாமாதான் லாஸ்ட் பஸ்ஸிலே வர வழக்கம்; அவர்தான்னு நினைச்சுப்புரண்டு படுத்தேன்..... ஏது, பத்து வருஷத்துக்கப்புறம் உன் காத்து இப்படி நட்ட நடு ராத்திரியிலே அடிக்கிறது. உட்கார், வர்றேன்..." என்று ராஜு உள்ளே போய் இரண்டு நிமிஷங்களில் ஒரு ஜமக்காளம் தலையணையுடன், ஒரு கூஜாவில் தீர்த்தமும் கொணர்ந்தான். படுக்கையை உதறிப் போட்டு, 'படுத்துக்கொள்; படுத்துண்டு பேசலாம்'' என்றான் அவன்.

ஒரு தம்ளர் தீர்த்தத்தைச் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டேன். ராஜுவும் நானும் பரஸ்பரம் குடும்ப சௌகரியங்களை விசாரித்துக் கொண்டோம்.

"ஏண்டா, ராஜு, சுந்தரி இப்போ இந்த ஊரிலேதானே இருக்கா? கல்யாணம் எல்லாம் ஆகி விட்டதா?"

"ஓஹோஹோ! இப்போ புரியறதுடா. மணி! நீ ஏன் இவ்வளவு கர்ம சிரத்தையா இந்தக் குக்கிராமத்துக்கு இந்த நிசி வேளையிலேகூட வந்திருக்கேன்னு. உன் சுந்தரி இல்லையாடா அவள்? பார்க்க வேண்டியது, கேக்க வேண்டியது நியாயந்தானே?"

இவன் ஆரம்பித்து விடுவான் என்று எனக்குத் தெரியும்; தெரிந்தும்தான் பேச்சை எடுத்தேன். அந்த நாளிலேயே நாங்கள் இப்படிக் கோட்டா பண்ணிக் கொள்கிறவர்கள்தான். அதுவும் சுந்தரியையும் என்னையும் சேர்த்து ராஜுவும் மற்றவர்களும் வரம்பு துரம்பு இல்லாமல் நிறையக் கோட்டா பண்ணியிருக்கிறார்கள்.

"கல்யாணமெல்லாம் ஆச்சு; இரு வரேன்: அவளைப் பத்திக் கொண்டைக் கோவிந்தன் சொன்னால்தான் உனக்கு ரஸிக்கும். மூணாவது வீட்டுத் திண்ணைதான் அவனுக்குக் குத்தகை. எழுப்பிண்டு வரேன்....." என்று திண்ணையிலிருந்து குதித்தான் ராஜு.

"ச்......சூ! வேண்டாமப்பா, காலையிலே பார்த்துக் கொண்டால் போகிறது. எதுக்கு அவனை வேறே எழுப்பி....." என்றேன்.

"எழுப்பறதுன்னா என்ன? அவன் தூங்கினாத்தானே? தூங்கினாலும் முழிச்சிண்டே தூங்கறவன் அவன்....." என்று சொல்லித் தெருவில் இறங்கிப் போய்விட்டான் ராஜு.

கொண்டைக் கோவிந்தனைப் பார்க்கவே எனக்கு அப்போதும் பிடிக்காது; இப்போதும் வேண்டியிருக்கவில்லை. பயம் காட்டும் ஒரு கொடூரமான முகம். பின் தலைக் கேசத்தையும் வழித்து வாரி முன்னால் உச்சந் தலையில் எப்போதும் கொண்டை போட்டுக் கொண்டிருப்பான். யாரோடு நெருங்கினாலும் எப்போதும் அவனிடம் அதிகம் நான் நெருங்குகிறதில்லை. அது ஒரு ஹோராட்டல் பித்து.

அவனை இழுத்துக் கொண்டு வந்து விட்டான் ராஜு.

"பேசக் கொடுத்து யார் தெரிகிறதான்னு பாருடா, கொண்டை!" என்று சொல்லித் திண்ணையில் ஏறினான் ராஜு.

"யாரு, தெரியலையே; சொன்னாத்தான் தெரியும்..... எனக்கென்ன ஜோஸ்யமா தெரியும்? ஜோஸ்யம் ரங்கண்ணாகூட வரச் சொன்னான்; அவனுக்கென்ன? வில்வண்டி ஓடறது. நான் காலை சாச்சுச் சாச்சு நடந்து போகணுமே மூணு மைல்....."

"கொண்டைக் கோவிந்தா! ஓவர்ஸியர் பிள்ளை மணிதான் இது. சுந்தரி சௌக்கியமான்னு கேட்கிறான்; சொல்லு."

"ஓவர்ஸியர் பிள்ளைன்னு சொன்னாத்தானே தெரியும். ஓவர்ஸியர்கூட முன்னே சொன்னார். சர்வேயர் தெரிஞ்சவர், சங்கிலி போடற வேலையாவது வாங்கித் தரேன்னார். எல்லாம் சொல்றதுதான். எனக்கு ஒருத்தர் கிட்டேயும் போக டயமில்லே. நிறைய ஜோலி இருக்கு......"

"அது சரி, சுந்தரி சௌக்கியமாயிருக்காளா, அதைச் சொல்லு கோவிந்தா?"

"அப்படிக் கேட்டாத்தானே சொல்லலாம்...... சுந்தரியை என் தலையிலே கட்டிவிடலாம்னு திருகு தாளம் போட்டுப் பார்த்தா எல்லாரும். இரண்டு பச்சை நோட்டைக்கூடத் தொட்டுப் பார்க்கக் குடுத்தார் வி. ரா. கி. மாமா. அவர்தான் அந்தக் குடும்பத்துக்கு ஏஜண்ட்...... ஏஜண்டா, சும்மாவா? சுந்தரியோட அவர் கும்மாணத்துலே பகல்லே சுத்திட்டு லாஸ்ட் பஸ்ஸிலே திரும்பி வந்துடறார். அவள் மட்டும் அங்கே ஜாகை போட்டிருக்காளாம்; இங்கே சொந்த வீடு இல்லே?......"

'இதேதடா அபசகுநி' என்று தோன்றியது எனக்கு. தெரிந்ததை ராஜுவே சொல்லித் தொலைக்காமல் இவனை எதற்காகக் குறுக்கே சுரடிவிட்டு அடிக்கிறான் என்று எரிச்சல் பற்றிக் கொண்டது எனக்கு.



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHIP G.M

''ராஜு, என்ன தூங்கறயா?'' என்று கேட்டேன். ''என் ஹிருதயம் தாங்காதபடி இவன் ஏதேதோ கொள்ளிப் பேச்சுப் பேசுகிறானேப்பா'' என்றேன்; ரகசியமாகத்தான்.

''ம்......? அப்புறம்?'' என்று இரைந்து அவனையும் முடுக்கித் தொலைத்தேன்.

''அப்புறம் கேட்டாத்தானே சொல்றதுக்கு? சுந்தரியை நான் பார்த்ததே கிடையாதா, என்ன? பெண் பார்க்கிறதுன்னு ஓர் ஏற்பாடு பண்ணி என்னைக் கொண்டு போய் நிறுத்தினார் வி. ரா. கி. மாமா. எனக்கு எவ்வளவோ ஜோலி. பெண் பார்த்துட்டு வந்தேனே..... அந்தப் பச்சை நோட்டு இரண்டையும் என்கிட்டே வி.ரா. கி. தரலாமோ இல்லையோ? ஏமாத்திட்டார். அந்தச் சுந்தரி என்னைப் பிடிக்கலேன்னுட்டாளாம். எனக்கு மட்டும் பிடிக்கிறதோ ? அவள்கும்மாணத்துலே எதுக்கு ஜாகை போடணும்? அவன்தான் போயிட்டான்.....''

''எவன்?''

''கும்மாணத்திலே எலட்ரி ஆபீஸ்லே வேலை பார்த்தானே, சுயம்பு! அவன்தான். கரண்ட்லே கையைக் கொடுத்துட்டான். எலி 'மாதிரி உடம்பு கறுப்பாய் போய் வாய்க்கால்லே தூக்கிப் போட்டுட்டுதே !''

''அந்தச்சுயம்பு யாரு, அதைச்சொல்லி..''

''அப்படிக் கேட்டாத்தானே சொல்லலாம்...... அவன்தான் சுந்தரியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவன்......''

இரண்டு காதுகளிலும் கையை வைத்து. ராஜுவின் பக்கலில் அவன் மார்பு மீதே சாய்ந்து விட்டேன். ''அடேய், ராஜு. இந்த உளறலிலே எது எது நிஜம்? கல்யாணமாகிச் சுந்தரி அப்படி ஆகிவிட்டது நிஜந்தானா?......'' என்று கேட்டேன்.

ராஜு எழுந்திருந்து. ''அவனை உனக்குச் சரியா ரஸிக்கத் தெரியவில்லை. சீக்கிரம் விஷயத்துக்கு வந்து விட்டியே.... போகிறது கொண்டைக் கோவிந்தா, நீ போய்ப் படுத்துக்கோ, ஊம்!'' என்றான்.

அவனும் போய்த் தொலைந்தான்.

''இவனுக்குக் கூடப் பார்த்தார்களப்பா, அந்தச் சுந்தரியை. முன்னே பின்னே யார் வரன்னு சொல்லாமல் பொதுவா 'பெண் பார்க்க வரப் போகிறா இன்றைக்கு'ன்னு வி. ரா. கி. மாமா அவள்கிட்டே சொல்லியிருக்கார். பெண் பார்க்கிற பிள்ளைக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு எழுந்திருந்த அவள் 'வீல்'னு கத்திப்பிட்டாள் இந்த அழகைப் பார்த்து. வி. ரா. கி. மாமா அவள் அம்மா போய் விட்டப்புறம் கொஞ்சம் வெளி விவகாரங்களை இவர்கள் குடும்



வரலாற்று வள்ளல்!

தமிழழகன்

கடலினும் ஆழக் கனிவுடையான்;— பெருங்
காற்றினும் சூழத் துணிவுடையான்!
அடல்கொளும் தீரிலும் ஆண்மையுளான்;— தெய்வ
அருளொடு தாயினும் கேண்மையுளான்!

நெருப்பினும் தூய்மை நினைவுடையான்;— கவி
நினைவினும் வாய்மைக் கனவுடையான்!
பொருப்பினும் குன்றாப் புகழ்நிலையான்;— பனிப்
பொற்கோ டதுவாய்த் திகழ்மலையான்!

உலகமும் கூட்டும் உறவுடையான்;— மக்கள்
உரிமையை நாட்டும் நிறைவுடையான்!
கலகமும் போரும் கடிவதுளான்;— நாட்டின்
கடமைக் கெனவே படிவதுளான்!

குழந்தைகள் போலும் குழைவுடையான்;— அவர்
குறும்புகள் மேலும் விழைவுடையான்!
இழந்தநம் மண்ணையும் மீட்ட நின்றான்;— பகை
எதுவரின் என்ன? தூள் காட்ட நின்றான்!

நேரு எனும் பெயர் நேருடையான்;— என்றும்
நேர்மை யொன்றே கொளும் சீருடையான்!
பாருக்கு ளோதனிப் பாதையுற்றான்;— தியாகப்
பாதை யென்றே அதன் சேதியுற்றான்!

கோடிநெஞ் சங்களிற் கோயில் கொண்டான்;— அன்புக்
குவலய மேயதன் வாயில் கொண்டான்!
வாடிநெஞ் சின்றே வருந்தவிட்டான்;— எனின்,
வரலா றெழுதச் சிறந்து விட்டான்!

பத்துக்காகக் கவலிச்சுண்டார். சுந்தரி ப்ளெயினு சொல்லிட்டா: 'இவனைப் பண்ணிக்கச் சொல்லி நிர்ப்பந்தம் பண்ணினு கிணத்துலே விழுந்துடுவேன்'னு. அப்புறம் அவர் தம் வியாபார விஷயமா போற இடத்துலே விசாரிச்சுண்டேயிருந்து, சுயம்புன்னு ஒரு பையனைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சார். கொஞ்சம் எலக்ட்ரிக் வேலை தெரிஞ்ச பையன். வீட்டிலே ஏதோ ஒயரை மாத்திப் போடும் போது ஷாக் அடித்துப் போயிட்டான்.....''

''நீயும் அப்படியே சொல்லிவிட்டயேப்பா! பைத்தியம் உளறினதை மாத்திக் கிணு கிணுப்பா ஏதாவது சொல்லப் போறேன்னு நினைச்சேனே. உயிரோட பொசுங்கிப் போயிட்டாளே சுந்தரி. இந்த ஷாக் எனக்குத் தீராதேப்பா. இப்போ எங்கே அவள்? இன்னும் வேறே ஏதோ அபாண்டமா பொரிஞ்சானே அப்பா அவன். அதெல்லாம்..... அதெல்லாம் ஒருகாலும் இராது. நான் எங்கே வேணும்னாலும் பிரமாணம் பண்றேன்...... கும்பகோணத்துக்கு வறயா? போய்ப் பார்த்து விட்டு வருவோம் அவளை.....?'' என்றேன்.

''அவள் இங்கேதான், அவள் வீட்டிலே தான் இருக்காப்பா. விடிஞ்சதும் போய்ப் பாரு. கொண்டை சொன்னது மத்ததெல்லாம் உளறலாத்தான் இருக்கும். புத்தி சுவாதீனத்தோடு இருந்தப்பதான் சுந்தரியை அவனுக்குப் பார்த்தது. கையிலே கொஞ்சம் பணம் கிடைச்சால் ரோட்டுலே ஹோட்டல் வைக்கலாம்னு பார்த்தான் அவன். அதுலே மண் விழுந்ததும் அவளைப் பத்தித் தூத்த ஆரம்பிச்சுட்டான். நிஜம் இல்லாத போனாலும் ஒரு விஷயத்துக்குக் காது மூக்கு வைச்சுக் கிளப்பி விட்டு விட்டா அது வேலை செய்யறது. ஊரிலே அதை நம்புகிறவா சில பேரும் இருக்கா; நம்பாமல் கொண்டையின் முதுகை உரிச்சுடறேன்னு பேசறவாளும் இருக்கா. மொத்தத்துலே அந்தப் பொண்ணு அத்தனை அழகையும் படைச்சுத் துரதிருஷ்டத்தையும் சேர்த்துண்டு பிறந்துடுத்து. பாவமா நிக்கறது!''

சுந்தரியின் முகத்தில்தான் எனக்குப் பொழுது விடிந்தது. உலகத்தின் பொழுதே அவள் முகத்தில் பிறப்பதுதான் என்று எனக்கு ஒரு பெருமை இருந்தது. இப்போதும் அந்த முகம் ஒளி நிரம்பித் தெரிந்ததில் குறையவில்லை. அவள் வாழ்க்கையையே குலைத்துவிட்ட குலைவு அந்த நெற்றியைக் குறைத்து விட்டதே; நான் இப்போது அவளைப் பார்ப்பதில் அந்தக் குறையெல்லாம் ஈடுகட்டி விடப் போகிறதா?

''நான்தான் மணி, தெரிகிறதா?''

''தெரியாமல் என்ன? பட்டணம் பிடித்து வைத்துக் கொண்டு விட்டது போலிருக்கிறது! இப்பொழுதாவது இந்த ஊர் ஞாபகம் வந்ததே'' என்றாள் சுந்தரி.

''சுந்தரி, என் நெஞ்சு நேற்று ராத்திரியே பிடித்து ரத்தமாய் வடிக்கிறது. ராஜு வகை தொகை தெரியாமல் கொண்டைக்கோவிந்தனைப் பிடித்து வைத்து உளறக் கொட்டச் செய்து விட்டான்......''

''தெய்வம் அவளைப் படைத்து அவன் மூலம் தன் வயிற்றெரிச்சலை ஆற்றிக் கொண்டு விட்டது. என் மானத்தைக் குலைத்து விட்டான், மணி!''

''உருப்படாத சமூகம்!''

''வி. ரா. கி. மாமாதான் தெய்வம்மாதிரி இருப்பவர். எனக்குக் கும்பகோணத்திலே ஒரு பந்துக்கள் வீட்டிலே இடம் ஏற்படுத்திக் கொடுத்து, படிக்கச் செய்து, வாத்தியார் வேலைக்கு டிரெயினிங் எடுக்கச் செய்து உதவியிருக்கிறார். 'எனக்குப் பெண்ணே பிறக்க வில்லையம்மா; பெண் பிறந்திருந்து அதற்கு இந்தக் கதி வந்திருந்தால் என்று ஒரு தடவை என்னமோ அசப்பிலே நினைத்து விட்டேன். அந்தச் சிலிர்ப்புத்தான் உன்னையே பெண்ணாக எண்ணி உனக்கு வழி ஏற்படுத்தத் தூண்டியது' என்று அவரே ஒரு நாள் அழுது கொண்டு சொன்னார்...... மணி, நான் அடிக்கடி உன்னை நினைத்துக் கொள்வேன்; ஏன் தெரியுமா? ஊரிலே பைத்தியமும் பைத்தியமில்லாதவர்களும் சேர்ந்து எனக்கு ஏற்படுத்தி வைத்து விட்ட அபாண்டத்தை நீ அறிந்தால் அதை நம்பமாட்டாய். ஒரு தூய மனசுடைய ஆத்மா 'நான் இதையெல்லாம் நம்பவில்லை' என்று என் காதுபடச் சொன்னால் இந்தப் பூலோக உருண்டையே வாய் திறந்து அப்படிச் சொல்வதாகக் குளிர்ந்த மனத்துடன் ஏற்றுக் கொள்வேன். அதற்குத்தான் நான் உன்னை நினைப்பது வழக்கம்....''

''சீ, சீ! இதெல்லாம் அறிவுச் சுத்தம் இல்லாதவர்களுடைய உளறல்கள். நான் நம்பவில்லை! நான் நம்ப மாட்டேன். செத்தாலும் நம்ப மாட்டேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினேன்.

''இன்னொன்று மணி. அவர் போய்விட்ட பிறகும், இப்படி ஓர் அபவாதம் என்னைச் சூழ்ந்த பிறகும் நான் ஏன் உயிரோடு இருக்கிறேன் என்று நீ நினைக்கலாம். ஓராயிரம் தடவைகள் நானே அப்படி நினைத்திருப்பேன். ஆனாலும் ஓர் ஆசை: அவருடன் கொஞ்ச காலம்தான் வாழ்ந்தேன். அவர் போய் விட்டது வெளித் தோற்றத்துக்கு உண்மையாக இருந்தாலும், என்னைப் பொறுத்தவரை எனக்குள்ளே வாழ்கிறார். அந்தக் கொஞ்ச காலத்தையும், காலம் கடக்கக் கடக்க, கடந்த காலத்தால் பெருக்கிக் கொண்டே போனால் அவருடன் வாழ்ந்த காலம் நிறைவாகப் பெருகிக் கொண்டே போகிறது! அந்த நிறைவு என்னை வாழத் தூண்டிக் கொண்டிருக்கிறது!'' என்றாள் சுந்தரி.

அவள் கண்கள் பெருகின. கங்கைப் பெருக்கின் நினைவை ஊட்டிய பெருக்கு அது. தெய்வம் போன்ற அவளது முகம் தெய்வம் அழுதால் எப்படியிருக்கும் என்று காண்பிப்பது போல் மாறியது. எனக்குக் காணப் பொறுக்கவில்லை. நான் குழந்தை போல் தேம்பினேன்.



மே
28
முதல்
சென்னை :
சித்ரா, பாரத், மகாலட்சுமி
மற்றும் தென்னடெங்கும்
தேவரின்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்
அளிக்கும்
தாயும்
மகளும்
டைரக்ஷன்
M.A. திருமுகம்
கதை - தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பா தேவர்
ELEGANT



ஏப்ரல் 29ந் தேதி. அன்று குரு வாரம்; சுபயோக சுபதினம். புதுடில்லி ஸப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் பணியாற்றும் எலும்பு சிகிச்சைத் தலைவர் டாக்டர் பி. கே. துரைஸ்வாமியின் பல நாளையக் கனவு நினைவாகியது.

வியாதிகளில் பல ரகம். ஆனால் எலும்பு பிசகியோ, முறிந்தோ போய் விட்டால், அதைவிட நரக வேதனை வேறிருக்க முடியாது. டாக்டர் துரைஸ்வாமி அவர்களே சொல்லுவது மனித யத்தனம் கால்வாசிதான்; வாசியாவது வாகதேவனால்தான்.

இந்த வைத்திய சாஸ்திரத்தில் உலகிலேயே மதிப்புக்குரிய ஸ்தானம் வகிக்கிறார் டாக்டர் துரைஸ்வாமி. 1936ல் சென்னையில் எம். பி. பி. எஸ்.ஸும், 1949 சீமையில் எப். ஆர். ஸி. எஸ்.ஸும் 1951ல் லிவர்பூல் சர்வகலாசாலையில் 'டாக்டர்' பட்டமும் பெற்றார். இவருக்குப் பின் பல வருடங்கள் வேறு ஒருவருக்கும் இப்பெருமை கிட்டவில்லை என்பதிலிருந்தே இதன் மகத்துவத்தை ஓரளவு ஊகிக்கலாம்.

சென்ற யுத்தத்தின் போது தாற்காலிகமாகக் கட்டப்பட்ட ஸப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் இது வரை குறுகிய குட்டிச்சுவர் கட்டடங்களில் வார்டுகள் இருந்தன. ஒரே கிக்கிடம்; நெருக்கடி. வார்டுகளைச் சுற்றியுள்ள நாய்கள் கூட்டம் அதை ஒரு மிருக வைத்தியசாலை என்று நினைக்கும்படி தோற்றுவித்தது. சுகாதாரமா? கேட்கவே வேண்டாம்.

கோடிக் கணக்கில் செலவிட்டுக் காரியாலயங்கள் கட்டிக்கொண்டிருந்தும், ஆஸ்பத்திரிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்களைக் கட்டச் சிவப்புநாடா குறுக்கே ஓடிக்கொண்டேயிருந்தது. அந்த ரத்தக் கறை நாடாவுக்கு ரண சிகிச்சை செய்து வெட்டி எறிந்து, நான்கு மாடிக் கட்டடம் ஒன்று, நவீன வசதிகளுடன் எழும்பும்படியாகச் சாதித்திருக்கிறார் ஸ்ரீ துரைசுவாமி.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் டாக்டர் துரைஸ்வாமி கணக்கராகப் போகத்தான் கணக்குப் போட்டிருந்தார். ஆனால் கல்லூரியில் வைத்திய மாணவர்கள் விடுதியில்தான் இடம் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்ப விசேஷத்தின் பயனைத்தான் நாம் அநுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கிறோம். இதில் என்ன பெரிய 'தியாகம்' என்று கேட்கலாம். துரைஸ்வாமி அமெரிக்காவில் மாதம் ரூபாய் 10,000 சம்பளம் பெற்று வந்தார். அதைத் தவிர, தனி பிராக்டீஸ். நேருவின் கவனத்தைக் கவர்ந்து அவருடைய அழைப்புக்கிணங்கித் தாய்நாடு திரும்ப இசைந்தார்.

ஸர்வீஸ் கமிஷனில் இவர் மனு ஒன்பது மாதம் கர்ப்பவாசம் செய்தது. மறுபடியும் நேருஜி தலையீடு. கமிஷன் அவருக்கு, அவர் இதுகாறும் சம்பாதித்து வந்த பத்தாயிரம் ரூபாயைத் தர இசைந்தது - ஒரு சிறு திருத்தத்துடன் - அந்தக் கடைசி பூஜ்யத்தை விட்டு விடச் சொன்னார்கள். படிக்கும்போதே வெட்கமாயிருக்கிறதல்லவா? துரைசாமி துரைத்தனமாக நடந்துகொண்டார். நாட்டின் நலனைக் கருதி, நேருவின் வற்புறுத்தலையும் மனத்தில் கொண்டு வேலையை ஒப்புக் கொண்டார்.

இன்று இந்த நான்கு மாடிக் கட்டடமும் அதனுள் பொருத்தப்பட்டிருக்கும் வசதிகளும் இதைக் கிழக்கிலேயே தலைசிறந்த வைத்தியசாலையாகத் திகழச் செய்கின்றன.

சமீபத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ஒரு யந்திரம் எக்ஸ்ரேயின் உதவியில்லாமலேயே ஒரு மணி நேரத்தில் செய்ய வேண்டிய ஓர் ஆபரேஷனைப் பத்து நிமிஷத்தில் செய்து முடிக்க உதவுகிறது. இந்த யந்திரமும் சிவப்பு நாடாவில் சிக்கித் திக்குமுக்காடித் தவித்து ஒருவழியாக இயங்கத் தொடங்கியுள்ளது.

துரைஸ்வாமியின் கனவு பலித்துவிட்டது. அரசியலில் 'அகத்தியர்' லால்பஹாதுர் சாஸ்திரி திறப்பு விழா நடத்தி விட்டார்.

ரண சிகிச்சையில் கைதேர்ந்த துரைஸ்வாமி சிறந்த கலாரஸிகர். ஒரு சங்கீதக் கச்சேரி கூடத் தவற மாட்டார். சிரக் கம்பம் பொருத்தமாகச் செய்வார். வயலின் பரிச்சயம் உண்டு; ஆனால் நன்றாய் வாசிப்பாரே ஒழிய, ரண சிகிச்சை செய்து அறுக்க மாட்டார்!

பல்லாண்டு வாழ்ந்து பணி புரியப் பத்மநாபன் அருள வேண்டும்.

—சுப்புடு

சித்திரக் களஞ்சியம்



"என் சார்! வீட்டில் பைப்களெல்லாம் லீக் ஆயிட்டா அதுக்காக இப்படியா எல்லோரும் அழணும்?"



"நீ பாஸ் பண்றதுக்கு என் பெண்ணுடைய முகராசிதான் காரணம்னு நல்லபடியா அவளைப் பற்றி ஒரு வார்த்தை சொன்னியே, அதுவே போதும்!"


"உண்மைதான் அத்தை. நான் பாஸ் பண்ணலேன்னு அவளுக்கும் எனக்கும் கல்யாணத்தை முடிக்கப் போறதாக அப்பா சொன்னார்!"




மாஜிஸ்திரேட்: நீ காரை வேகமாக ஓட்டவில்லை என்பதற்கு என்ன சான்று இருக்கிறது? எப்படி நம்புவது? யாராவது சாட்சி உண்டா?

காரோட்டி: சாட்சியும் சான்றும் வேண்டுமா? அப்பொழுது நான் என் வீட்டில் 'டேரா' போட வரும் மாமியாரை அழைத்து வர ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்தேன். இதைக் காட்டிலும் வேறு பெரிய சாட்சி தேவையா?

ஸொஜ்ஜி. பஜ்ஜி. ஸஜ்ஜி








மீனும் மனிதனும் !

''எஜமானே! மீன்கள் நீரிலே எப்படி வாழ்கின்றன என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!''

''ஆச்சரியமென்ன? தரையில் மனிதன் வாழ்வதைப் போலத்தான். பெரியவை சிறியவற்றை விழுங்கி வாழுகின்றன !'' — **ஷேக்ஸ்பியர்**

பிகே



என்ன டிபன்?



பத்மாவதி



ஞாயிற்றுக்கிழமை. பிற்பகல் இரண்டு மணி. சாதாரணமாக எல்லோருடைய வீடுகளும் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது எங்கள் வீடு.

நடு ஹாலில் மின்விசிறியின் கீழ் அம்மா ஒரு பாயை விரித்துத் தலைக்கு உயரமாக ஒரு மணைக் கட்டையை வைத்து மடியாகப் படுத்திருந்தாள். அவளைச் சுற்றி, 'கசமுச' வென்று பேச்சொலியும்...'கலகல'வென்று சப்த ஜாலங்களும்...இந்தச் சத்தம் அம்மாவுக்கு அத்துப்படி. இந்தச் சத்தம் இல்லாமல் அம்மாவால் மத்தியானம் கண்ணயர முடியாது. அவள் கையில் அன்றையத் தமிழ்ப் பத்திரிகை பிரித்தபடி துவண்டு கிடந்தது. பத்திரிகையைக் கையில் எடுத்தால் அம்மா மயங்கி விடுவது நான் பிறந்ததிலிருந்து பார்த்த காட்சி.

அப்படியே...இன்றும் மயங்கியிருந்த நேரம். தூண் ஓரத்தில் என்னுடைய இரண்டு அக்காள்மார்களும், சின்ன மன்னியும், அண்ணாவும் அமர்ந்து சுவாரஸ்யமாகச் சீட்டு விளையாடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

தங்கைகள், பானுவும், பாமாவும் தூணுக்கு ஒருவராகச் சாய்ந்து கொண்டு தமிழ் நாவல் படித்துக் கொண்டிருந்தனர்.

பெரிய அண்ணா பார்த்து விட்டுக் கோபித்தால், மாற்றிக் கொள்வதற்கென்று அடியில் ஒவ்வோர் ஆங்கில நாவலும் தயாராக வைத்திருந்தனர். பெரிய அண்ணா வழக்கம் போல் கடந்த வாரத்தின் தினசரிப் பத்திரிகைகளைத் தேதிவாரியாக அடுக்கிக் கொண்டு, அதிலிருந்த பழைய குப்பைச் செய்திகளில் ஆழ்ந்து போயிருந்தார்.

நான் கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தேன். மணி இரண்டரை.... டிபன் வேளை.... யாரும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. என் வயிறும் கவலைப்படவில்லை. ஆனால் கிளர்ச்சி செய்தது.

''அம்மா....! அம்மா.....!'' என்று மெதுவாக அழைத்தேன். அம்மா மெதுவாக அரைக்கண் திறந்து என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''அப்பாடி! கண்ணைச் சிறிது அசத்தினால் நிம்மதியாக மூட முடிகிறதா.....?'' என்று கேட்டுவிட்டுத் திரும்பவும் மூடிக் கொண்டாள்.

அம்மா பதினொரு மணிக்குச் சாப்பிட்டு விட்டு, 'கண்ணை அசத்துகிறது' என்று படுத்ததிலிருந்து மூன்று மணி வரையில் எப்பொழுது நடுவில் யார் எழுப்பினாலும் இப்படித்தான் சொல்லுவது வழக்கம். அதனால் நான் பதில் ஒன்றும் பேசாமல், அடுத்தபடி யாரைத் தூண்டலாம் என்று யோசிப்பதற்குள், ''எம்மா! இன்னிக்கு என்ன டிபன்.....?'' என்று கதவுக்கு மறுபுறமிருந்து பெரிய மன்னியின் குரல் என் காதில்..... இல்லை.... இல்லை —வயிற்றில்— தேவாமிருதம் போல் வந்து விழுந்தது.

அம்மா சலிப்புடன், ''அப்பாடி.... கண்களைச் சிறிது அசத்தினால் நிம்மதியாக மூட முடிகிறதா....?'' என்று கேட்டு விட்டுத் திரும்பவும் கண்களை மூடுவதற்குள் நான் குறுக்கிட்டு, ''அம்மம்மா! டிபன் என்னவென்று சொல்லிவிடு போதும்'' என்றேன்.

அம்மா சலிப்புடன் கண்களைத் திறந்து கொண்டு, ''உம்.... என்ன இருக்கு...?'' என்று வழக்கம் போல் சொன்னாள்.

அதற்கு மேல் சலிப்புடன் மன்னி, ''என்ன இருக்கு! ஒண்ணும் இல்லை. ரவை தான் இருக்கு..... உப்புமா பண்ணணும்'' என்று வழக்கம் போல் கேட்டாள்.

'உப்புமா' என்ற வார்த்தை காதில் விழுந்ததுமே பெரிய இடி முழக்கம் போல் 'உப்புமாவா?' என்று எல்லோரும் ஏகோபித்து ஆட்சேபக் குரல் எழுப்பினார்கள்.

கையிலிருந்த புத்தகத்தைச் சத்தத்துடன் எறிந்த பானு, ''சேச்சே! எப்போ பார்த்தாலும் இந்த வீட்டிலே உப்புமா தானா?'' என்று அலுத்துக் கொண்டாள்.

''பின்னே என்ன தோசை மாவா அரைத்துவைத்திருக்கிறது தோசைவார்க்க?'' என்று பெரிய மன்னி ஆதங்கக்குரல் எழுப்பினாள். அரைக்க அரிசி ஊறப்போட்டால் சின்ன மன்னி உட்பட யாரும் அரைக்க வருவதில்லை என்ற குற்றச்சாட்டு அதில் ஒலித்தது.

தன்னை மறைமுகமாகக் குத்திக் காட்டுவது பொறுக்காத சின்ன மன்னி, ''ஏன், தோசைன்னா அரைத்த தோசைதானா? கரைத்த தோசை பண்ணினால் போயிற்று! ஏன் மன்னி நான் வந்து தோசைக்கு வெங்காயம் நறுக்கித் தரட்டுமா?'' என்று கேட்டு விட்டுக் கையிலிருந்த சீட்டை ஆராய்ந்தாள்.

சின்ன மன்னியின் பேச்சுக்கு என்ன அர்த்தம் என்றால் 'வெங்காயம் நறுக்கி, கோதுமை மாவு கரைத்து, தோசை வார்த்த பிறகு, தின்பதற்கு என்னைக் கூப்பிடுங்கள். அப்பொழுது 'அட..... டா.... என்னை ஒரு வார்த்தை கூப்பிட மாட்டேளா மன்னி! சீட்டாட்டத்தில் நேரம் போனதே தெரியவில்லை. பாவம், நீங்கள் தனியாகச் செய்திருக்கிறீர்களே' என்று சொல்லிவிட்டுத் தட்டை எடுத்து வைத்துக் கொண்டு 'கடச்கட'த் தோசை சாப்பிட வருகிறேன்' என்பதுதான்.

அதற்குள் என் பெரிய அக்காள் ''த்தூ! கோதுமை மாவு தோசையா? அது வேண்டவே வேண்டாம். ஞாயிற்றுக்கிழமை, இன்று எல்லோரும் சாவகாசமாகச் சாப்பிடும்படி கடச்கடப் பூரி பொரித்து, மசால் செய்யலாம்'' என்று அபிப்பிராயம் சொன்னாள்.

''ஐயையோ! பூரி கிழங்கா? வேண்டவே வேண்டாம். பூரியும் சப்பாத்தியும் தின்று சலித்து விட்டது'' என்று சின்ன அக்கா லீலா கிரீச்சிட்டாள். அவள் தன் முதல் பிரசவத்துக்காகத் தில்லியிலிருந்து வந்திருந்தாள்.

''கார.... சாரமா.... கடச்கட பஜ்ஜி போடுங்கள் மன்னி.....!'' என்று அவள் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள்.

இவ்வளவு நேரம் மௌனமாக எல்லோரும் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு படுத்திருந்த அம்மா மெதுவாக முக்கி முனகி எழுந்து உட்கார்ந்து, ஸ்நானம் செய்து உலர்ந்திருந்த தலையை உதறி முடிந்தாள்.

இது வரை பேசாமல் இருந்த சின்ன அண்ணா, ''இட்டிலிக்கு மிஞ்சின டிபன் வேறு என்ன இருக்கிறது? எவ்வளவு தின்றாலும் வயிற்றுக்குக் கெடுதல் இல்லை'' என்றான்.

''ஏண்டா! இதென்ன தேறாட்டல் என்ற எண்ணமா? நினைத்ததும் இட்டிலியும், தோசையும் செய்வதற்கு?'' — இது அம்மா.

''நான்கு பேர்கள் இருக்கும் வீட்டில் ஒருவர் மாற்றி ஒருவர் தினமும் அரைத்தால் தினமும் இட்டிலி, தோசை செய்து விடலாமே....'' என்றார் பெரிய அண்ணா. அவருக்குப் பெரிய மன்னி தனியாக ஒரு படி அரிசியை ஊறப் போட்டு அரைப்பது பிடிப்பதில்லை.

இதற்குள் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த குட்டிகள், அதாவது பெரிய அண்ணா, சின்ன அண்ணா, பெரிய அக்கா இவர்களின் குட்டிகள் உள்ளே ஓடி வந்தனர்.

''பாட்டீ....! பசிக்கிறது. டிபன் ஆயாச்சா.....?'' பின்னே வயிற்றுப் பேரன் ராமு கேட்டான்.

''வாடா, என் ராஜா! உனக்கு என்ன டிபன் வேணும் சொல்லு....'' அம்மா தன் சிறிய பேரனை வாரி அணைத்து மடியில் இருத்திக் கொண்டாள்.

''எனக்கு..... எனக்கு ஜிலேபி வேணும்.''

''டேய்! ஜிலேபி நன்னாயிருக்காதுடா.... லட்டு கேளடா.....'' ராமுவுக்கு அதிகச் சலுகை என்று அறிந்திருந்த அவன் அக்கா பாலா தம்பியை ஊக்குவித்தாள்.



அதற்குள் ராஜி முந்திக்கொண்டு, "உம்! எனக்கு இரண்டும் பிடிக்காது. 'மைசூர் பாகு'தான் வேண்டும்" என்றாள்.

"அடி சக்கை... இன்னிக்கு டிபன் வெகு ஜோர்தான்...... ஜிலேபி என்ன! லட்டு என்ன......! மைசூர் பாகு என்ன!" நான் கேலி செய்தேன்.

அம்மா ஆத்திரத்துடன், "சும்மா இருடா கப்பு! குழந்தைகளுக்கு என்னடா தெரியும்....." என்றாள்.

பொறுமை இழந்த பெரிய மன்னி, "ஏம்மா..... உப்புமா கிளறட்டுமா?" என்று குரல் கொடுத்தாள்.

"உப்புமா !.... நூப்புமா.....! கொப்புமா ! எனக்கொன்றும் வேண்டாம்" என்று ராமு கனைவிட, அவனைத் தொடர்ந்து ராஜி, பாலா, அம்பு, கலா எல்லோரும், "உப்புமா.... நூப்புமா! கொப்புமா...." என்று ராகம் போட்டுப் பாட ஆரம்பித்தனர்.

இதற்குள் 'பட்'டென்ற சத்தத்துடன் பாமா தான் படித்துக் கொண்டிருந்த நாவலைக் கீழே எறிந்து விட்டுச் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தாள். அவளிடம் ஒரு நல்ல வழக்கம். உலகமே தலைகீழாகக் கவிழ்ந்தாலும், கருமமே கண்ணாக இருப்பாள். அதாவது நாவல் படித்து முடியும் வரை வேறு எதிலும் அவள் மனம் செல்லாது.

இப்பொழுதுதான் உலக ஞாபகமும், வயிற்று ஞாபகமும் வரப் பெற்றவளாக, "மன்னி! டிபன் ஆயிற்று...?" என்று குரல் கொடுத்தாள்.

அதற்குள் பெரிய அண்ணா, "டேய், கப்பு! பாமா ராணியிடம் இன்னொரு நாவலை எடுத்துக் கொடு..... அதைப் படித்து முடிப்பதற்குள் ராணிக்கு டிபன் தயாராகி விடும்" என்றார் எரிச்சலுடன்.

"ஏன் அண்ணா! கேலியா செய்யறே? நானே இன்னிக்கு டிபன் செய்யாவிட்டால் என் பெயர் என்னவென்று கேள்" என்று ஆக்ரோஷத்துடன் மொழிந்து விட்டு, தாவணியை இழுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு சமையலறைக்கு நடந்தாள்.

"சரிதான், இன்னிக்கு எல்லோரும் பட்டினிதானா?" சின்ன அண்ணா கிண்டல் செய்வதை லட்சியம் செய்யாமல், 'ஏன்டீ! பாமா! ஸ்கூல்லே சொல்லித் தந்தாளே.... அந்த முந்திரிப் பருப்பு வடை செய்வோமா....? என்று உற்சாகத்துடன் துள்ளி எழுந்தாள் பானு.

"முந்திரிப் பருப்பு வடையா?" என்று அம்மா ஆச்சரியப்பட, "ஆமாம்மா...! துவரம் பருப்பு, கடலைப் பருப்புக்குப் பதிலாக முந்திரிப் பருப்பையே ஊறப் போட்டு அரைத்து வடை தட்டுவது.... நம்ம வீட்டுக்கு, ஒரு நாலு படி முந்திரிப் பருப்பு இருந்தால் போதும்..... ஏன்டீ பானு.....! நாலு படி போதுமா.... அல்லது ஐந்து படி வேண்டியிருக்குமா?" என்று பாமா சந்தேகம் கேட்டாள்.

"நன்னாயிருக்கு...... நீங்க டிபன் பண்ணற லட்சணம்...... வடை பண்ணி நாசம் பண்ணற அளவுக்கு ஒண்ணும் இங்கே முந்திரிப் பருப்பு படி படியாகக் கொட்டிக் கிடக்கல்லே......" என்று அம்மா அவர்கள் உற்சாகத் தீயில் நாலு படி தண்ணீரைக் கொட்டினாள்.

"ஆமாம். ஏதாவது செய்யறோம் என்னாலும் விடுவதில்லை..... அப்புறம்..... சோம்பேறிகள் வேலை செய்யறதில்லை என்ற பட்டம் கொடுப்பதிலும் குறைச்சல் இல்லை" என்று முணுமுணுத்துக் கொண்டே, 'நல்ல காலம். டிபன் தொல்லையிலிருந்து தப்பித்தோம்' என்று உள்ளூற மகிழ்ச்சியுடன் பாமாவும் பானுவும் அடுத்த நாவலை எடுத்துப் பிரித்தனர்.

'டக்...... டக்'கென்று பூட்ஸ் ஒலிக்க மூன்றாவது அண்ணாவும், அவனைப் பின் தொடர்ந்து புது மன்னியும் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தனர். போன மாதம் கல்யாணமான புதுத் தம்பதிகள் அவர்கள்.

"அம்மா ! டிபன் ஆயிற்றா? சாப்பிட்டு விட்டு நானும், இவளும் சினிமா போகலாம்னு இருக்கோம்" என்று சொல்லிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான் அண்ணா.

புது மன்னி, புதுப் புடவை உடுத்து, நாணத்துடன் தூணுக்கு மறுபுறம் மறைந்து



வளரும் மகன் வருங்காலத்தில் ?

ஒரு பிரமுகருக்கு வெகு தவம் இருந்த பின் ஒரு பிள்ளை பிறந்தான். அவனுக்குப் பதினைந்து, பதினாறு வயதானபொழுது தமது பையன் வருங்காலத்தில் எப்படியிருப்பான் என்பதை அறியும் ஆவல் அந்தப் பிரமுகருக்கு ஏற்பட்டது.

அவர் ஒரு மேஜையின் மீது நான்கு பொருள்களை வைத்தார். ஒரு சாராயப் புட்டி, ஒரு நடிகையின் புகைப்படம், ஒரு நூறு ரூபாய் நோட்டு, ஒரு கீதைப் புத்தகம்.

இவற்றை வைத்துவிட்டு, பையன் எதை விரும்பி எடுக்கிறான் என்று காண்பதற்காக மறைந்திருந்தார். பையன் வந்தான். முதல் காரியமாக நூறு ரூபாய் நோட்டைத் தன் பைக்குள் எடுத்து வைத்துக் கொண்டான். பிறகு சாராயப் புட்டியைப் பருகிக் காலி செய்தான். அடுத்தபடியாக நடிகையின் படத்துக்கு ஒரு முத்தம் கொடுத்தான். கடைசியாகக் கீதையைக் கையில் தூக்கிக் கொண்டு ஆடத் தொடங்கி விட்டான். அதைக் கண்ட அவன் தந்தை அவரையறியாமலே "இவன் ஓர் அரசியல் தலைவனாகத்தான் வருவான்!" என்று கூறிக்கொண்டு அந்த மகிழ்ச்சியில் தாமும் ஆடத் தொடங்கிவிட்டார்.

['சிக்' என்ற கவிஞரின் கவிதை ஒன்றின் தமிழாக்கம்.]



"அதுதானே பார்த்தேன், கல்யாண வரவேற்புக்கு இவ்வளவு பெரிய தேங்காய் கொடுக்கிறாங்களேன்னு!"

"ஏன், என்னவாம்?"

"நிஜத் தேங்காய் இல்லே இது. பிளாஸ்டிக் தேங்காய்!"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நின்றான். வீட்டுக்குப் புதிதாகையால், இன்னும் அவனுக்குச் சமையலறை இருக்கும் இடம் கூடச் சரியாகத் தெரியாது.

"இன்னும் டிபன் ஆகல்லேடா....." என்ன டிபன் செய்யறதுன்னே தெரியல்லே! ஒவ்வொருத்தர் ஒவ்வொண்ணு சொல்றா... இந்து நிமிஷம் இரு. உப்புமா கிளறித் தரச் சொல்றேன்......" என்றாள் அம்மா.

"ஐயையோ! உப்புமாவா....? வேண்டாம்மா..." என்று சொல்லிக் கொண்டே கைக் கடிகாரத்தைப் பார்த்த அண்ணா "சரி நேரமாயிடுத்து.... நாங்க ஹோட்டலிலேயே டிபன் சாப்பிட்டுக்கறோம். வா, வா....சாந்தா...." என்று குரல் கொடுத்து விட்டுக் கிளம்பினவன் ஏதோ நினைத்துக் கொண்டவனாகத் தயங்கி நின்றான்.

"ஏண்டா, கப்பு..... என்னுடன் வருகிறாயா.....? எல்லோருக்கும் ஹோட்டலிலிருந்து டிபன் வாங்கிக் கொடுக்கிறேன். எடுத்துண்டு வரலாம்..." என்றான்.

அம்மா இடைமறித்து, "ஒண்ணும் வேண்டாண்டா....! நம் வீட்டுக்கு ஒரு வேளைக்குப் பத்து ரூபாய் டிபன் வாங்கினாலும் பாதி வயிறுதான் நிறையும். நீ போய்ச் சேரு. நாங்கள் ஏதோ பண்ணிச் சாப்பிடறோம்" என்றாள்.

அம்மா அப்படிச் சொல்லுவாளென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதனால் அண்ணா கேட்டதையோ, அம்மா பதிலளித்ததையோ எல்லோரும் சகஜமாக எடுத்துக் கொண்டோம்.

"இந்த டிபன் பிரச்னை..... பெரிய பிரச்னை......" என்று முணுமுணுத்துக் கொண்டே அம்மா எழுந்து உள்ளே போவதற்குள் பெரிய மன்னி, "கப்பு! இங்கே வாயேன்" என்று குரல் கொடுத்துக்கொண்டு கையில் இரண்டு தட்டுக்களில் கடச்கட உப்புமாவுடன் வெளியே வந்தாள்.

"டிபன் ரெடி......" என்று சொல்லி முதலில் அம்மாவுக்கு ஒரு தட்டையும் தன் கணவருக்கு ஒரு தட்டையும் எடுத்து வைத்துக் கொண்டே, "கப்பு! உள்ளே எல்லா தட்டுலேயும் டிபன் போட்டு வைச்சிருக்கேன். கொஞ்சம் கொண்டு வந்து கொடேன்...." என்று சொன்னாள்.

"ஏன் மன்னி! என்னே ஒரு குரல் கூப்பிட மாட்டேளா? பாவம் தனியாகவே செய்திருக்கேளே....." என்று கூறிக் கொண்டு சின்ன மன்னி இப்பொழுது சுறுசுறுப்புடன் டிபன் சாப்பிட எழுந்தாள்.

"இந்த வீட்டில் நான் பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டும். பானுவும் பாமாவும் தவறிப் போய்ப் பெண்ணாகப் பிறந்து விட்டார்கள்" என்று நான் முணுமுணுத்துக் கொண்டே, ஆனால் டிபனைக் கண்ணால் பார்த்த உற்சாகத்துடன் தட்டுகளை எடுத்து வந்து வைத்தேன்.

"ஹைய்யா.....! உப்புமா..... ஓடி வாங்க எல்லோரும்......" ராமு குரல் கொடுக்கக் குட்டிகள் உற்சாகமாக வந்து போட்டி போட்டுக் கொண்டு டிபன் தட்டுகள் முன் இடம் பிடித்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் எங்கள் வீட்டில் எழுந்த பேச்சொலிகளைக் கேட்கிறீர்களா?

"உப்புமாவுக்கு இணை உப்புமாதான்.", — இது பெரிய அண்ணா.

பெரிய அக்காள்: ஆமாம், நிறைய முந்திரிப் பருப்பை வறுத்துப் போட்டு.......

சின்ன அக்காள்: வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய் நறுக்கிப் போட்டு....

சின்ன அண்ணா: தளதள வென்று நெய் விட்டுக் கிளறினால்.....

நான்: பசி.... வேளையில்.....

எல்லோரும்: உப்புமாவுக்கு இணை....: உப்புமாவேதான்.....!

எல்லோரும் கலகல வென்று சிரித்தோம். குழந்தைகள்கூட உப்புமா 'வெகு ஜோர்' என்று இரண்டு முறை ஜேகோஷம் போட்டுக் கொண்டு சாப்பிட்டனர்.

"அம்மா......எல்லா ஹோட்டல்களும் மூடியிருக்கு' ஏதோ ஸ்டிரைக்காம்..." என்று கூறிக் கொண்டே தடதட வென்று உள்ளே வந்தான் கடைசி அண்ணா. பின்னால் பட்டினிக் களைப்போடு வந்தாள் புது மன்னி.

"வீதியில் வரும்போதே உப்புமா வாசனை மூக்கைத் தூக்குகிறது" என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டு முதலில் ஒரு தட்டை எடுத்துச் சாந்தா மன்னிக்குச் சமர்ப்பித்துவிட்டு, அண்ணா தனக்கும் ஒன்றை இழுத்துக் கொண்டான்.

"அப்பாடி! இன்னிக்கு டிபன் பிரச்னை தீர்ந்தது" என்று அம்மா நீண்ட பெருமூச்சு விட்டாள்.



பயன் படுத்த பதிவுசெய்யப்பட்டுள்ளோர்: ஜெப்ரி மானேர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்.

நான்கு ஆசாமிகள் சேர்ந்து கூட்டாகப் பஞ்சு வியாபாரம் நடத்தினார்கள். பஞ்சுப் பொதிகளை வாங்கி ஒரு கிட்டங்கியில் சேமித்து வைத்து அவைகளை லாபகரமாக விற்பது அவர்கள் தொழில் வழி.

பஞ்சு கிட்டங்கியில் எலிகள் புகுந்து நாச வேலை செய்யத் தொடங்கவே அந்த நால்வரும் ஏகோபித்த மனத்துடன் ஒரு பூனையைக் கொண்டு வந்து அங்கே வளர்க்கத் திட்டமிட்டார்கள். பூனை பொதுச் சொத்து. நான்கு பங்குதாரர்களுக்கும் அந்தப் பூனையின் நான்கு கால்கள் சொந்தம் என்று ஏற்பாடாயிற்று. அதற்கான அடையாளங்களையும் வகுத்துக் கொண்டார்கள்.

பூனையின் பின்னங்கால் ஒன்றின் மீது குறி பார்த்துத் தெருவில் போன சிறுவன் கல் எறிந்து காயப்படுத்தினான். அந்தக் காலுக்கு உரிமை கொண்ட நான்கு ஆசாமிகளில் ஒருவர் அக்கறையாக அந்தக் காலுக்கு மருந்து பூசி எண்ணெயில் முக்கிய துணியைச் சுற்றினார்.

அந்தப் பூனை சும்மா இருக்கக் கூடாதோ? எரிந்து கொண்டிருக்கிற அடுப்பின் பக்கம் தாவியது. அவ்வளவுதான்! காலில் சுற்றியிருந்த எண்ணெய்த் துணியில் நெருப்புப் பிடித்தது. பயந்த பூனை பஞ்சுப் பொதியின்மீது தாவிற்று. எரியும் எண்ணெய்த் துணி அத்தனை பஞ்சுப் பொதிகளையும் அக்கினிதேவனுக்கு அர்ப்பணம் செய்தது.

மற்ற மூவரும் ஒன்றுசேர்ந்து நான்காவது ஆசாமிதான் தமக்குச் சொந்தமான பூனைக் காலை அஜாக்கிரதையாகக் கட்டியதன் மூலம் பஞ்சுப் பொதிகளைத் தீக்கிரையாக்கி விட்டார் என்று கோர்ட்டில் நஷ்டஈடு கோரினார்கள்.



வழக்கை விசாரித்த நீதிபதி நிதானமாகத் தீர்ப்பளித்தார்: ''குற்றம் சாட்டப்பட்டவர், காயமடைந்த அலருக்கு உரிமையுள்ள காலுக்குக் கட்டுப் போட்டார் என்பது உண்மை. ஆனால் அந்த ஒரு காலினால் அந்தப் பூனை ஒன்றும் செய்ய முடியாது. அந்தக் கட்டத்தில் அந்தப் பூனை, பஞ்சுப் பொதிகள் பக்கம் ஓடத் தன் மற்ற மூன்று கால்களைத்தான் நம்பியிருந்திருக்கிறது. அந்த மூன்று கால்களின் உதவி இல்லாவிட்டால் அந்த நெருப்பு பஞ்சுப் பொதிகளுக்குப் பரவியிருக்க முடியாது. ஆகவே வழக்குப் போட்ட மூவரும் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சமமான அளவில் நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.'' ★

நீதிக்கதம்பம்

மேனு



இருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட ஓர் ஆசாமி நீதிபதியிடம், ''ஐயா! நீங்கள் எனக்குத் தண்டனை விதிக்க முடியாது! எனக்குப் பைத்தியம்!'' என்றான். நீதிபதி விழித்தார். குற்றவாளி தொடர்ந்தான். ''பத்து வருடங்களுக்கு முன் நான் முதல் தடவையாகத் திருமணம் செய்துகொண்டேன். அப்புறம்தான் அவள் எப்போதுமே சீறும் பூனையாகச் சண்டைக்கே வந்து கொண்டிருக்கும் சுபாவம் உடையவள் என்று தெரியவந்தது. சீக்கிரமே அவளை விவாகரத்து செய்துவிட்டு வேறு கல்யாணம் செய்துகொண்டேன். இரண்டாவது மனைவி சீக்கிரமே என்னை, என் முதல் மனைவி தங்கமானவள் என்று நினைக்கச் செய்தாள். ஆகவே அவளையும் விவாகரத்து செய்தேன். மூன்றாவதாக வந்தவள் இரண்டாவது மனைவியைப் பற்றி மிக உயர்ந்த எண்ணத்தைத் தோற்றுவித்தாள். இப்படியாக நான் நான்கு ஐந்து கட்டத்தைத் தாண்டி ஆறாவதாக ஒருத்தியைப் பிடித்தேன். பழைய ஐந்து பேர்களின் துர்க்குணங்கள் அத்தனையும் சேர்த்தால்கூட இவளுடைய சுபாவத்துக்கு உறைபோடக் காணாது! இப்படி ஒரே தவற்றை ஆறு தடவை தொடர்ந்து செய்திருப்பவனின் புத்தி சரியான நிலையில் இருக்கக்கூடியது என்று நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று கூறி முடித்தான்.

'கடுமையான கல்யாணப் பைத்தியத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளி' என்று அவன் உடனடியாக விடுதலை செய்யப்பட்டான்.

— ஆதாரம்: காரனெட்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின்
வதனப் பொலிவை
உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச்சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ்
இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

JWT-P-3218

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

WET PAINT? IT DRIES IN 10 MINUTES

IT'S **Spartan** SUPER *Plastic* PAINT

FOR HOME DECORATION

Loveliest range of colours to match your home decor. Smooth velvety finish... no smell, no brushmarks... so, so easy to apply... and what's more washable! It's SPARTAN Super Plastic Paint.



Spartan —*The Hallmark of quality*

SPARTAN SUPERFINE PRODUCTS

ADDISONS PAINTS & CHEMICALS LIMITED,
SEMBIAM, MADRAS-11
Member: INDIAN PAINT ASSOCIATION